தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்

தொகுதி - 2



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

T. 22828

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 558

தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்

தொகுதி - 2

ஆசிரியர்:

மணி. மாறன்,

M.A.,(T),M.A.,(H),B.L.I.S.,Dip.in Sanskrit.,

தமிழ்ப் பண்டிதர். சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும்

ஆய்வு மையம்

தஞ்சாவூர்

2014

விலை : ரூ. 150-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் தொகுதி - 2
நூலாசிரியர்	: மணி. மாறன்
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	: 558
மொழி	: தமிழ்
பதிப்பு	: முதற் பதிப்பு
வெளியீட்டு நாள்	: 2014
தாள்	: TNPL 18.6 கி. கி
நூல் அளவு	: 21 x 14 செ. மீ.
பக்கங்கள்	: 176
படிகள்	: 500
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	: லேமினேசன் அட்டை
பொருள்	: இலக்கியம்
விலை	: ரூ. 150-00

வெளியீட்டாளர் முகவுரை

தமிழ் ஆய்வுக் களம் பரந்து விரிந்தது. எல்லைகள் இல்லாதது. சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை மலர்ந்த இலக்கியங்கள் எண்ணிறந்தன. இலக்கியத்தோடு அல்லாது கல்வெட்டுக்கள், செப்பேடுகள் அளிக்கும் இலக்கிய வரலாற்றுச் செய்திகள் ஏராளம். நம் முன்னோர்களின் வாழ்வியல் முறைகளையும் அனுபவங்களையும் தொகுத்துப் பார்ப்போமாயின் மிகவும் பிரமிப்பு ஏற்படும்.

அதனை உறுதி செய்யும் விதமாக நூலகத் தமிழ்ப் பண்டிதர் மணி.மாறன் அவர்கள் எழுதிய தமிழ் **ஆய்வுக் கட்டுரைகள் - தொகுதி - 2** அமையும் என்று எதிர்பார்க்கலாம். முன்னர் வெளிவந்த இவரின் தமிழாய்வுக் கட்டுரைகள் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் இப்பொழுது தொகுதி - 2 சரசுவதி மகால் நூலகத்தின் 558 ஆவது வெளியீடாக வெளிவருகிறது.

இந்நூலின்கண் பத்து கட்டுரைகள் அடங்கியுள்ளன. பனைமரம் பற்றியும், நிகண்டுகளில் காணப்படும் அதன் பெயர்கள் பற்றியும், அம்மரத்தின் பயன்கள் குறித்தும், பதநீர், நுங்கு போன்றவற்றின் பயன்களும், அம்மரத்திலிருந்து எடுத்துப் பயன்படுத்தப் பெற்றுள்ள ஓலைச் சுவடிகள் குறித்தும் விரிவான கட்டுரையாக பனை -ஓலை-சுவடி படைத்துள்ளார்.

நற்றிணை, குறுந்தொகை போன்ற சங்க நூல் செய்யுட்கள், பழங்கால காசுகள் ஆகியவற்றின் துணைகொண்டு மலை உடைக்கப்பெற்று, அவ்வழியே ஆற்றின் நீர்ப்போக்கினை அமைத்து தடுப்பணை ஏற்படுத்தி சோழநாட்டின் ஒரு பகுதியை வளமாக்கிய சோழர்களின் செயல்பாட்டையும், உடைக்கப்பெற்ற மலையே நேரிமலை என்று அழைக்கப்பெற்றதையும் சான்றுகளுடன் நேரிமலை கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

ஆவணங்களும் சொற்களும் என்னும் கட்டுரையில், ஓலை, செப்பேடு, கல்வெட்டு, காகித ஆவணங்களில் பயின்று வரக்கூடிய அரிய சொற்களைத் தேடித் தொகுத்து வழங்கி உள்ளார். இவற்றுள் சில சொற்கள் எந்த அகராதியிலும் காணப்படாதவையாகும். ஒரே சொல் தமிழகத்தின் இருவேறு மாவட்டப் பகுதிகளில் வேறு வேறு பொருளைக் குறித்து நிற்பதும்,

ஒரே பொருள் பல மாவட்டங்களில் பல்வேறு பெயர்களால் வழங்கப்படுதலையும் சுட்டியுள்ளது சுவையானதாகும்.

சோழ நாட்டில் அமைக்கப்பெற்றிருந்த உறைக்கிணறுகள் பற்றியும், நெல்லி மர வட்டாவின் துணைகொண்டு அமைக்கப் பெற்ற செங்கற் கட்டுமான கிணறுகள் பற்றியும் அவைகளை உருவாக்கிய முன்னோர்களின் தொழில்நுட்பத் திறனும் வியக்கும்படி அமைந்த கட்டுரையும், பழங்காலத்தில் உருவாக்கப்பெற்ற குளங்கள், அவற்றைப் பராமரித்த திறம், வெள்ளக் காலங்களில் ஏற்பட்ட உடைப்பினை சரிசெய்த செய்திகள் பற்றிய கட்டுரையும் சிறப்பாக அமைந்துள்ளன.

கல்வெட்டுக்களில் காணப்படும் நீர் தொடர்பான சொற்கள், காலிங்கராயன் அமைத்த கால்வாய் பற்றிய செய்திகள், காவிரியாறு தமிழ் இலக்கியத்தில் சுட்டப்பெறும் இடங்கள் பற்றிய தொகுப்பும், பரிபாடல் சுவடிகள் பற்றிய செய்திகளும், சுவடி நூல்பதிப்பில் ஈடுபடுபவர்களுக்கும், சுவடியியல் ஆய்வு மாணவர்களுக்கும் பயன்படும் விதத்தில் அமைந்த விநாயகர் அகவல் பதிப்பில் மாறுபாடு போன்ற செய்திகளை உள்ளடக்கிய கட்டுரைகளை ஆய்வு நோக்கில் எழுதியுள்ள நம் நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. மணி. மாறன் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர்(பொ.) திரு. ம. சங்கரநாராயணன், B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ்.சுதர்ஷன், M.A., B.Lit., M.L.I.S. Ph.D., அவர்களுக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
22-09-2014

டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

நூலாசிரியர் உரை

தமிழகத்தின் வரலாற்றையும், அதன் எல்லைகளையும் புவியியல் கூறுகளையும், தமிழ் மக்களின் வாழ்வியல் முறைகளையும், அவர்களிடையே வழங்கி வந்த தொழில் நுட்பத் திறன்களையும், அறிவியல், அறவியல் கருத்துக் களையும் நாம் அறிய வேண்டுமானால், நம் முன்னோர்கள் வழங்கிய இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், காகித ஆவணங்கள் போன்றவற்றை படித்தறிதல் வேண்டும்.

இவற்றை ஒவ்வொரு முறையும் படிக்குந்தோறும், அவைகளின் உள்ளே பொதிந்து கிடக்கும் பல புதிய, புதிய செய்திகளை அறிய முடியும். அறிந்த அச்செய்திகளை தமிழ் மக்கள் அறியும் வண்ணம் வெளிப்படுத்துவது தமிழ் ஆய்வாளார்களின் கடனாகும்.

அவ்வகையில் 17 ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் என்னும் நூல், நூலக வெளியீடாக 2012 ஆம் ஆண்டில் வெளிவந்தது. தற்பொழுது பத்து பெருங்கட்டுரைகள் அடங்கிய தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் தொகுதி-2 வெளிவருகின்றது. இக்கட்டுரைகள் ஒவ்வொன்றும் பல்வேறு பொருண்மைகள் குறித்துப் பேசுகின்றன. தண்ணீரின் எதிர்கால அவசியம் குறித்து நம் முன்னோர்கள் நீர்நிலைகளைப் போற்றிய பாங்கினை வெளிப்படுத்தும் செய்திகளை இக்கட்டுரை தொகுப்பில் நிறையவே காணலாம். அறிஞர் பெருமக்கள் முதல் நூலினை வாங்கிப் படித்து வரவேற்பு நல்கியது போல், இந்நூலினையும் வாங்கிப் படித்து நல் ஆதரவு தரும்படி வேண்டுகிறேன்.

இந்நூலினை வெளியிட அன்புடன் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நூலக இயக்குநர் டாக்டர் **என். சுப்பையன்,** இ.ஆ.ப., அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன். இந்நூல் வெளிவர துணைநின்ற மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் நூலக நிருவாக அலுவலர் (பொ.) **ம. சங்கரநாராயணன்** B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கணினியில் தட்டச்சு செய்தளித்த நூலகப் பணியாளர்கள் V. பர்வதம், காப்பி பிரிண்டரில் அச்சிட்டளித்த G. ரவி, மெய்ப்புத் திருத்தம் செய்து உதவிய சமஸ்க்ருத பண்டிதர் எல். அனிதா மற்றும் முனைவர் பட்ட ஆய்வு மாணவி கோ. பிரியா ஆகியோருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும், முகப்பு அட்டை அச்சிட்ட கே.ஆர். பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
20-09-2014

மணி. மாறன்,
தமிழ்ப் பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

பொருளடக்கம்

வ.எண்	பொருள்	பக்களண்
1.	பனை-ஓலை-சுவடி	1
2.	நேரிமலை	30
3.	ஆவணங்களும் அரிய சொற்களும்	48
4.	இலக்கியத்தில் காவிரி	64
5.	சோழநாட்டில் உறை கிணறுகளும் செங்கற் கட்டுமான கிணறுகளும்	82
6.	பழமை மிகு குளங்களும் வெள்ளத் தடுப்பு முறைகளும்	91
7.	கல்வெட்டுக்களில் - நீர் குறித்த சொற்கள்	119
8.	காலிங்கராயன் அமைத்த கால்வாய்	129
9.	விநாயகர் அகவல் பதிப்பில் காணப்படும் மாறுபாடு	136
10.	பரிபாடல்	150

தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்

தொகுதி - 2

பனை - ஓலை - சுவடி

பனை மரம் இந்தியாவில் வெப்பம் மிகுந்த பகுதிகளில் காணப்படுகின்றது. கன அடிக்கு சுமார் 50 பவுண்டு நிறையுள்ளது இம்மரம். இதன் நுனி மரம் நிலங்களுக்கு நீர் பாய்ச்சக் குழாய்களாகவும், இதன் கெட்டியான பாகம் தூண்கள், கைம்மரங்கள் போன்ற வற்றிற்கும் பயன்படும். இதன் ஓலைகள் கூரை வேய்வதற்கும், பாய், கூடை பின்னுவதற்கும், எழுத்தாணி கொண்டு எழுதுவதற்கும் பயன்படும். இதன் நுங்கு மக்களால் உண்ணப்படுகிறது. இலங்கையில் இதனை ஊறுகாய் போடுகின்றனர். இலங்கை டச்சுக்காரர் வசமிருந்த போது, இந்த ஊறுகாயைச் சர்க்கரையில் பத்திரம் செய்து, ஜாவா, ஹாலந்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்துள்ளனர். இம்மரம் சுமார் 40 அடி முதல் 60 அடி வரை உயரமும், 3 அடி சுற்றளவு உள்ளதாகவும் வளரும். இம்மரத்திலிருந்து கள்ளும், அதிலிருந்து பனை வெல்லமும் காய்ச்சி எடுக்கப் பெறுகின்றது.

பனை மரங்கள் தொன்று தொட்டு தமிழர் வாழ்வியலில் கலந்து, பயன்பாட்டில் இருந்து வருபவை. மூவேந்தர்களில் ஒருவராகிய சேரர்கள் சூடிய மாலை பனம்பூ மாலை ஆகும். சங்க கால சேர மன்னர்களின் காசுகளில் பனை மரம் பொறிக்கப்பட்டுள்ளது. பனை மரமே சேரர்களின் காவல் மரமாக போற்றப் பெற்றது. சோழர்கள் காலத்தில் குலோத்துங்க சோழ வளநாட்டு பனையூர் நாடு, சத்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர்



திருவாரூர் திருக்கோயிலும் கமலாலயக் குளமும்

நாடு என்ற பெயர்களில் நாடுகளும், பனையூர் என்னும் பெயரில் ஊர்களும் திகழ்ந்தன. அன்றில் பறவைகள் பனைமரங்களில் கூடு கட்டி வாழும் இயல்புடையன வாகும்.

இப்பனையின் பெயர்களாக நிகண்டுகள் கூறுபவை, கருந்தாள் - கரிய வலிய அடியை உடையது என்னும் பொருளில் “கருந்தாள்” எனப்பட்டது. உள்ளே வெண்மையும், புறத்தே கருமையும் உடையதாகலின் “கரும்புறம்” என்றும், தாலகி என்னும் வடசொல்லுக்கு கள் என்று பொருள், அதனால் கள்ளினைத் தரும் மரம் என்னும் பொருளில் பனை “தாலம்” எனவும், கரிய நிறத்தினைக் கொண்டிருப்பதால் “நீலம்” என்றும், இளம் பனை மட்டையால் புல்லப் பட்டிருத்தலின், “புற்றாளி” எனவும், பனை மரங்களுள் காய்க்கும் பனை பெண் பனை என்றும் வழங்கப்படும். பெண்+பனை என்பது ஒரு சொல்லாய்ப் “பெண்ணை” என ஆக்கம் பெற்றுப் பொதுவில் பனை மரம் வழங்கப்படுகிறது.

போந்து என்பது ஆண்மை பற்றிய பெயராகும். காயாத பனை என்னும் பொருளில் போத்தை என உருப்பெற்றுப் பின் “போந்தை” என ஆக்கம் பெற்றுப் பொதுப் பொருளில் வழங்குவதாயும் நிகண்டுகள் பனை குறித்து சுட்டுகின்றன.

பாமேசியீ என்னும் ஒற்றை விதையிலைத் தாவரக் குடும்பத்தைச் சார்ந்த “பொராஸஸ் பிளாபெல்லிபெர்” என்பது இதன் இனப்பெயர் ஆகும். இம்மரம் ஆப்பிரிக்காவில் உண்டாகி, இந்தியாவிற்கும், கிழக்கு நாடுகளுக்கும் பரவியதாக கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

பனை ஆண் பனை, பெண் பனை என்று பால் வேறுபடும். இந்தியாவின் வட மாநிலங்களில் இம்மரம் தால மரம், தால், தார், தாட் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது. கிரேக்க மொழியில் இம்மரம் "பொராஸஸ்" என்று அழைக்கப்படுகிறது.

"பனை இருந்தாலும் ஆயிரம் இறந்தாலும் ஆயிரம்" எனும் முதுமொழி நம் வழக்கில் உண்டு. சிறந்த மன்னன் தன்னை நம்பி வாழும் மக்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும் என்று அரசியல் தத்துவம் கூறும் படிக்காசுத் தம்பிரான், தன் விவேக சிந்தாமணியில்,

கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமிர்தமுண்ணும்
விற்பன விவேகமுள்ள வேந்தரைச் சார்ந்தோர் வாழ்வார்

என்கிறார். இதன் பொருள் தன்னை நம்பி வாழும் காகங்களுக்குப் பனை மரம் எவ்வாறு பதநீரைக் கொடுத்துக் காப்பாற்றுகின்றதோ, அதுபோல் நல்ல மன்னன் மக்களைக் காக்க வேண்டும் என்பதாம்.

குற்றமில்லாத குருத்தோலைகளைக் கொண்ட பனைமரம் அமிர்தமாகப் பதநீரைக் கொடுத்து மக்களுக்கு உதவுகின்றதோ, அதுபோல் செந்நாப்புலவர் திருவள்ளுவர் தம்முடைய நாவின் மூலம் திருக்குறள் என்ற நீதி நூலினை மக்களுக்குத் தந்துள்ளார் என்று திருவள்ளுவ மாலை குறிப்பிடுகின்றது.

இயல்பாகவே பெரிய பனந்தோப்புகளில் ஆண்பனை மரங்கள் மிகுதியாகவும் பெண்பனை மரங்கள் குறைவாகவும் காணப்படுகின்றன. பெண் பனைமரத்தில் தான் பதநீர் இறக்கப்படுகிறது. காய்களும் பயன் படுகின்றன. இவை காய்க்கத் தொடங்கும் போதுதான்

இவை ஆண் மரமா? பெண் மரமா? என அறியமுடியும். இவை பூப்பதற்கு ஏறத்தாழ பத்து முதல் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆண் பனை மரங்கள் கட்டிட வேலைக்கு உதவும். இருப்பினும் பெண்பனையே மிகுதியும் பயன் தரத்தக்கது.

குடந்தை அருணாசலப் புலவர் பனையின் 801 வகையான பயன்களை புலப்படுத்தி தால விலாசம் என்னும் நூல் எழுதியுள்ளார். பெண் பனை மரங்கள் கருவுருவதற்கு நூற்றுக்கு மேல் உள்ள பனந்தோப்பில் ஓர் ஆண் மரம் இருந்தால் போதுமானது. இதனை கன்றிலேயே அறிய இயலாமையால் ஆண் மரங்களே மிகுந்து விடுகின்றன.

பனை மரம் ஆணா, பெண்ணா என்று அறிவியல் முறைகளால் ஆராய்ந்து கூறமுடியுமா என்று சில ஆண்டுகளுக்கு முன்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மேற்கொண்ட முனைவர் கு. சீநிவாசன், பனை மட்டைகளில் வலிய நார்த்திசு மிகுந்திருக்கும். ஆண் பனை மட்டைகளையும், பெண் பனை மட்டைகளையும் தனித்தனியாக வெவ்வேறு நாள்களில் கொண்டு சேர்த்து, அவற்றின் நார்த்திசுக்களை தனித்து எடுத்துக்கொண்டு, அவற்றை பல்கலைக் கழகத்தின் இயற்பியல் துறையில் உள்ள எக்ஸ்ரே கருவியின் இடையில் வைத்து நிழற் படம் எடுக்கப்பட்டது. ஆண் பனை மரத்தின் நாரில் இரண்டு வட்டமான கற்றைகளும், பெண் பனை நாரில் மூன்று கற்றைகளும் இருப்பதை காணமுடிந்தது. பால் வேறுபாடு தெரியாத சற்று முதிர்ந்த பல பனங்கன்றுகளிலிருந்து அடையாளமிட்டு அவற்றின் நார்த்திசுவைக் கொண்டு

வந்து தனித்தனியாக எக்ஸ்ரே படம் எடுத்து வைத்திருந்து நான்கு ஆண்டுகள் கழித்து பரிசோதித்துப் பார்த்ததில் மூன்று கற்றைகளைக் கொண்டவை பெண் பனையாகவும், இரண்டு கற்றைகளைக் கொண்டவை ஆண் பனை A

யாகவும் பூத்ததை அறிந்து வியந்ததாக தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மிகப் பழங்காலத்திலிருந்தே பனை மரம் மனிதர்களுக்கு ஒரு தெய்வ மரமாக பயன்பட்டு வந்துள்ளது. தண்ணீர், உரம், பாதுகாப்பு இவை ஏதுமின்றி, மக்களுக்கு அமிர்தம் என்ற பதநீரைச் சுரந்து வழங்குகிறது. மன்னர்கள் பதநீரை உல்லாச பானமாகவும் பயன்படுத்தினர். எனவே, பதி (மன்னர்) உண்ட காரணத்தால் இதற்குப் பதநீர் என்ற பெயரும் உண்டாயிற்று.

கம்பன் தன் இராமாயண காவியத்தில் இராமருடைய திருமண விருந்திற்கு வருகின்ற வழியில், அரசர்களும், அரசிகளும் தாங்கள் வைத்திருந்த வெள்ளிக் கிண்ணங்களில் "பசு நரு" என்ற மாலைப் பதநீரை வாங்கிச் சாப்பிட்டு மகிழ்ந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், "பனையெ னளவும்" (169) என்று குறிப்பிடுகின்றது. பனையை நாம் மரம் என்று வழங்குகின்றோம். ஆனால் இது மர இனத்தைச் சேர்ந்ததன்று. இது புறத்தில் காழ் கொண்டு இருக்கும். அதனால் புறவயிர்ப்பு கொண்டனவற்றைப் புல்லெனப் பேசுகின்றது தொல்காப்பியம்.

புறக் காழனவே புல்லென மொழிப (1585)

பனையில் ஆண் மரமும், பெண் மரமும் காணப்படும். ஆண் பனையின் பாளையில் இருந்து கிளைத்த கதிர்கள் நீண்டு திரண்டிருக்கும். அவற்றினின்றும் சிறு ஆண் பூக்கள் விரியும். பூவில் தடித்த புறவிதழ்களும் மூன்று அகவிதழ்களும், ஆறு மகரந்தக் கால்களும் தோன்றும். பெண் பனையின் பாளையிலிருந்து பட்டையான மூன்று புறவிதழ்களும், மூன்று அகவிதழ்களும் கோளவடிவான பெண்ணகத்தைக் கொண்டிருக்கும். இதுவே மகரந்தச் சேர்க்கையின் பின்னர் பிஞ்சாகிப் பனங்காயாகும். இளங்காயில் உள்ள மூன்று அல்லது இரண்டு நுங்குகளும் முற்றி விதைகளாகிறது. காய் முற்றிப் பழமானபின் பனம்பழம் தானே விழும். அதற்குள் விதைகள் இருக்கும்.

பனையின் பஞ்சு போன்ற நுங்கை கள்ளில் ஆத்திரையனார்,

பாளை தந்த பஞ்சியங் குறுங்காய்
ஓங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
(குறுந். 293; 2-3)

எனப் பாடுகின்றார். பனையின் இவ்விருவகைப் பூக்களும் மஞ்சள் கவினிய வெண்ணிறங் கொண்டவை. இவையிரண்டுமே சூடிக்கொள்ளும் வாய்ப்பற்றவை. ஆதலின் பனையின் வெளிய இளங்குருத்து ஓலையைப் பிளந்து அதன் கூரிய வலப்பக்கத்துப் பாதியைக் குடிப்பூச் சின்னமாகச் சேர மன்னர்கள் சூடிக்கொண்டனர்.

இரும்பனை வெண்டோடு மலைந்தோனல்லன் (45)

என்கிறது கோவூர் கிழாரின் புறநானூற்று பாடல்,

..........வளர் இளம் போந்தை
உச்சிக் கொண்ட ஊசிவெண் தோட்டு (புறநா. 100: 3-4)

மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇ (புறநா.22 : 21)

மேலும்,

இரும்பனம் போந்தைத் தோடும் கருஞ் சினை (பொருந; 143)

என்ற அடிக்கு நச்சினார்க்கினியர், கரிய பனங்குருத்தில் அலர்ந்த வலப்பக்கத்து ஓலையும் என்று உரை கூறியுள்ளார். இப்பனை ஓலையை மாலையாகவும் மார்பில் அணிவர். இதனைக் குறிக்கும் இடங்களில் புடையல் என்ற சொல் பயன்பட்டு வந்துள்ளது. இப்புடையல் குறிக்கப்படும் இடங்களில் பெரிதும், கழல் அணிந்த கால் கூறப்படுகின்றது.

இரும்பனம் புடையல் ஈகைவான் கழல் (பதிற். 42 : 1)

புடையல் அம்கழற்கால் புல்லி குன்றத்து (அக. 295 : 14)

போர்க்களத்தில் போரிட்டுக் குருதி தோய்ந்துள்ளதைப் பாடும் இடத்திலும்

இரும்பனம் புடையலொடு வான்கழல் சிவப்ப
குருதி பனிற்றும் புலவுக் களத்தோனே (பதிற். 57 : 2-3)

சேரர்க்குரிய வீரச் சின்னங்களில் புடையலும், கழலும் இணைத்துப் பேசப்படுதலின் சேரர்க்குத் தாயமாக - உரிமைப் பொருளாக - தொன்மை மரபாக- முன்னோர் பழக்கமாகப் பாடுகின்றார் ஔவையார்.

தொன்னிலை மரபின் நின்முன்னோர்போல
ஈகையங் கழற்கால் இரும்பனம் புடையல் (புறநா;. 99 : 4-5)

இத்துணைக்கும் இப்பனங்குருத்து மலரமைப்போ, மணமோ, சுவையோ அற்றது என்பதையும் கபிலர் அறியாமலில்லை.

வண்டு இசைகடவாத் தண்பனம் போந்தை (பதிற். 70 : 6)

எனினும், கன்னிப்பூ நிலையில் போந்தையாகவும், தார்ப்பூ நிலையில் புடையலாகவும் பெயர் பெற்றுள்ள சிறப்பிடம் இதற்கொரு தனித்தகுதியைத் தந்துள்ளது என்று இலக்கியம் ஒரு பூக்காடு என்னும் நூலில் கோவை இளஞ்சேரனார் குறிப்பிடுகிறார்.

பனையின் புடையலொடு வாகை மலரை இணைத்து வெற்றி கொண்டாடினார் என்று கூறும் பதிற்றுப்பத்து.

இவ்வடிகளுக்குக் கிழித்துக் குறுக நறுக்கி வாகையொடு இடைவைத்துத் தொடுத்த பனங்குருத்து, முல்லை முகைக்கு ஒப்பாகவும், வாகை வீ அம்முல்லையைச் சூழ்ந்த வண்டிற்கு ஒப்பாகவும் உவமம் கொண்டதை இதன் உரைகாரர் விளக்கியுள்ளார்.

பனையிலையின் காம்பு தடித்து சற்று பட்டையாக இருக்கும். இருமருங்கும் கரிய வாள் போன்ற விளிம்பும் இருக்கும். இம்மட்டைகளைக் கொண்டு குதிரை வடிவாகக் கட்டிய "மா" வில் ஏறி ஊர்ந்து செல்லுதல் மடலூர்தல் எனப் படும். தான் விழைந்த மகளை மணங்கொள்ள வேண்டி தலைமகன் மடலூர்ந்தாயினும் மணங் கொள்ளுதல் வழக்கம். இதனைப் பெருந்திணை என்றும், ஏறியமடல் திறம் என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது.

பெருந்தொகை பொருளியலில்,

> வாருயர் பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோல்
> ஏரிய வாயினு மென்செய்யுங் - கூரிய
> கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
> கோட்டுமண் கொள்ளா முலை (666)

என்கிறது.

கோட்டு மண் கொள்ளுதல் - தலைவன் மார்பினை உழுது அதன்கண் உள்ள சாந்தினைத் தனங்கள் தம் தலைநுனியிற் கோடல் - பனங்குரும்பையின் ஏரான முலை, இதனையே சீவக சிந்தாமணி (2294) முகிழ்முலை யுழுது சாந்தங், கோட்டுமண் கொண்ட மார்பம் என்கிறது.

பனையின் கிழங்குப் பிளவு, நாரையின் வாய்க்கு உவமையாக தனிப்பாடல் திரட்டுள்,

நாராய் நாராய் செங்கா னாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா னாராய்

என்று சத்தி முத்தப் புலவர் பாடிய பாடலில் சொல்லப் பட்டுள்ளது.

பாரி மகள் திருமணத்தின் போது மூவேந்தர்களும் வருகை தர அப்போது ஔவையார் பனந் துண்டத்தைப் பற்றி,

திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தரிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
நுங்குக்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே (1411)

பெருந்தொகை-பொருளியலில் பாடிய பாடல்.

பைபிளில் பனை பற்றிப் பல குறிப்புகள் காணப்படுகின்றது. "நீதிமான் பனையைப் போல் செழித்து வளருவான்" என்பது வழக்கு. அதிகம் பலம் வாய்ந்த ஒருவனை எவ்வாறு பலமிழக்கச் செய்வது எனும்போது,

இரும்புச் சங்கிலியாலோ, ஏழு பனை அகனிகளாலோ கட்டலாம் என்ற குறிப்பு காணப்படுகின்றது. பனையின் அகனி நார் இரும்புச் சங்கிலிகளுக்குச் சமம் என அறியலாம்.

"ஆயிரம் அகனியால் கட்டிய வீட்டிற்கு யானையின் பலம்" என்ற பழமொழி தமிழில் உண்டு.

இஸபெல்லா காவியத்தில் கவிஞர் கீட்ஸ், தலைவன் கொலை செய்யப்பெற்று தன் சகோதரர்களால் புதையுண்டான் என்ற செய்தி கேட்ட தலைவி வருந்தி இளைத்துப் போகிறாள் என்று சொல்ல வந்தவர், அவள் இளைத்துப் போகின்ற நிலையை பனம் பாளைக்கு ஒப்பிடுகின்றார். பதநீர் இறக்க அறுக்கும் பனம்பாளை வாடுதல் போல என்பதாக அவரின் உவமை உள்ளது.

கம்பீரமான பனை மரங்களை என்டிலிஹர் என்னும் அறிஞர் தாவர உலகின் இளவரசர்கள் என்று பொருள்பட **Principes** என்று அழைத்தார். இவற்றின் அடிமரங்கள் நெட்டுக்குத்தான தூணைப் போல மிக அதிக உயரத்திற்கு வளருகின்றன. (இவற்றை மாதிரியாகக் கொண்டே தூண்கள் கட்டப்பட்டன என்று கருதப்படுகிறது) உச்சியில் அடர்த்தியாக மட்டைகள் காணப்படுகின்றன. ஆனால் பனைகளின் அடிமரம் ஒருதலைப் பட்சமான வளர்ச்சிக்கு மட்டும்தான் உதாரணமாக விளங்குகிறது. அவை நீளப்போக்கில் வளருகின்றன. மிக உயரமாகவும், கம்பீரமாகவும் காட்சியளிக்கின்றன என்று சோவியத் ரஷ்யாவின் பிரபல இயற்கை விஞ்ஞானி கிளிமேந்த் திமிர்யாஸெவ் தன் நூலில் குறிப்பிடுகின்றார்.

நமக்கு வேண்டிய சீனியும் வெல்லமும் பனை மரங்களிலிருந்து கிடைக்கும்பொழுது, பயிரிடும் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்ய வேண்டியதில்லை என்று, பனையின் பழஞ்சிறப்பைக் கூறினார் வினோபா பாவே.

பதநீரை தேனுக்கு ஒப்பான இனிய வெல்லமாக மாற்ற முடியும். இவ்வெல்லம் கரும்பின் வெல்லத்தை விடச் சிறந்தது. கரும்பு வெல்லம் இனிமையானது. ஆனால் பனை வெல்லமோ இனிப்பும், அதைவிட ருசியும் உள்ளது. இதில் அநேகவிதமான உலோக உப்புக்கள் உள்ளன. வைத்தியர்கள் என்னிடம் வெல்லம் சாப்பிடச் சொன்னார்கள். அதனால் நான் எப்பொழுதும் பனைவெல்லமே சாப்பிடு ஷிகிறேன். ஆலைகளில் கூட உற்பத்தி செய்ய முடியாத முறையில் இயற்கை, இந்தப் பொருளை உண்டாக்கி இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வெல்லம் தயார் செய்யப்பெற்றால் இந்நாட்டிலிருந்து ஏழ்மையை விரட்டிவிட முடியும் என்றார் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள்.

பனம்பழம்

இப்பழத்தின் நாரிலுள்ள குழம்பை மென்று சப்பிச் சாற்றை மட்டும் சாப்பிடுவர். சுட்டும், அவித்தும் சாப்பிடலாம். இப்பழத்திலிருந்து பனவெட்டு எனும் தின்பண்டம் தயாரிக்கின்றார்கள். இது பித்தத்தை அதிகரிக்கும். சொறி, சிரங்கு ஆறுவதைத் தடுக்கும்.

பனை நுங்கு

பனங்காயை வெட்டினால் இரண்டு அல்லது மூன்று அடைப்புக்களில் நுங்கு இருக்கும். இது நல்ல

இனிப்புச் சுவையுடன் இருக்கும். மேல்தோல் துவர்ப்புடன் இருக்கும்.

நுங்கு குளிர்ச்சி தரும். நாவிற்கு ருசி தரும். மலச்சிக்கல் போக்கும். அதிகம் சாப்பிட்டால் பசி மந்தம் ஏற்படும். வியர்க்குருவை நீக்கும். நுங்கைத் தோலுடன் உண்டால் சீதபேதி, கழிச்சல் நீங்கும்.

பனங் கிழங்கு

பனங்கிழங்கில் இருந்து பனை மரம் உண்டாகிறது. இப்பனங்கிழங்கை அவித்துச் சாப்பிடுகிறார்கள். இக்கிழங்கு பசியை அடக்கும். இதனை அதிகமாகத் தின்றால், பித்தத்தையும், சீதளத்தையும் அதிகமாக்கும்.

பதநீர்

பனைமரத்தின் பாளையைச் சீவி அதிலிருந்து வடிகின்ற நீரை, உள்ளே சுண்ணாம்பு தடவப்பட்ட கலயத்தில் சேகரிப்பார்கள். இது பதநீர் எனப்படும். இதில் புரதம், சர்க்கரை, சாம்பல், சுண்ணாம்பு, இரும்பு, பாஸ்பரஸ் போன்ற சத்துக்களும், உயிர்ச்சத்து **C, B, B_1** ஆகியவைகளும் உள்ளன.

கருவுற்ற பெண்கள் பதநீர் அருந்த இதயம் வலிமை பெறும். இந்நீர் ஈறுகளில் இரத்தக் கசிவைத் தடுக்கும். பற்களைக் கெட்டிப்படுத்தும். பற்களின் மஞ்சள் நிறத்தைப் போக்கி வெண்மையாக்கும். சொறி, சிரங்கு, தாசநோய் நீக்கும். இரத்தசோகை நோயினைக் குணப்படுத்தும்.

பதநீர் வெப்பம் தரும். கணைச்சூட்டை நீக்கும். இரத்த அழுத்தத்தைத் தடுக்கும். டைபாய்டு, நிமோனியாவைக் குணப்படுத்தும். இருதய நோய்கள் குணமாகும். தோல் நோய்கள் ஏற்படாது தடுக்கும்.

வாடிய குழந்தைகளின் உடலைச் சீராக்கும். குழந்தைகளின் எலும்பு வளர்ச்சிக்கு உதவுகிறது. பதநீரிலிருந்து பனங்கருப்பட்டி தயாரிக்கின்றனர். இது தாது வலிமை தரும். உடலுக்கு நலம் தரக்கூடியது.

பனை மரத்தின் பெயர்களாக நூல்களில்

1) சாம்பசிவம் பிள்ளையின் தமிழ் ஆங்கில மருத்துவ அகராதி:- அசவத்திரு, ஆசவத்துரு, உலோக பத்திரம், எட்கம், எட்கை, ஐந்தரம், ஐலந்தார், ஐலந்தால், ஐலந்தாலம், கரதாளம், கருபுறம், கரும்பனை, காய்ப்பனை, காயின்பனை, கிருஷ்ணகாயா, கிருஷ்ண கெந்தம், குலீரம், சாத்துப்பனை, சாற்றுப்பனை, சாறுபனை, சீர்பாகி, சீவந்திக்கிரியம், தருராசம், தருவிராகம், தலதாலம், தலம், தாட்டி, தாளவிலாசம், திருணராசன், துராபோகம், துருமேகம், துருமேசுவர், நற்பனை, நீலமணி, நெடினி, நெடுஞ்சேவிகம், நெடுமி, நேயம், பகற்பலி, பனம், பனைமரம், பிராஞ்சுதீர்க்கம், புத்தாளி, புற்பதி, புறப்பி, பெண்ணை, போந்துகம், போநாந்தை, மகோந்நதம், மதுராசம், மால், விராணிகம், இந்தாளி, ஓலைச்சக்கரம், கணத்தாளி, காமதேனு, கிரிகை விருட்சம், கிரீடபம், கிருதாளி, கொட்டைப்பனை, கொண்டைப்பனை, கொழும்புப் பனை, சன்னாசக்கயம், சாராயிந்தாளி, சிரபலம், சிரிதாளி, சொக்கப்பனை, சொற்கப்பனை, தலூரப்பனை, தளப்பத்து மரம், தளப்பம், தளப்பமரம், தளப்பற்று மரம், தளப்புக் கூந்தல், தார், தாலத்திரம், தாளபத்திரம், தாளீச்சு, திரணபுட்பி, திவ்விய விருட்சம், தேவனாதி விருட்சம், பச்சைப் போய் வெள்ளையாவான், பிரமதாகம், பூகம், பெருங்கற்றாதி, பெருங்கற்றாதி மரம், மகாசித்திரசாயனம், மிருது பலம், வரிதாளி.

2) சித்த வைத்திய அகராதி :- ஆசவத்திருமரம், ஏடகாமரம், ஐலந்தால் மரம், கரதாளமரம், கருபுறமரம், சீவந்திக்கிரிய மரம், திருராஜமரம், தருவிராகமரம்; துருமேகபுரம், நீலமணி மரம், பெண்ணை மரம், போந்துக மரம், வரானிகமரம். கீரீய மரம், தளப்புக் கூந்தல் மரம், சொக்கப்பனை மரம்.

3) மலையகராதி :- உடுபாதகம், ஏடகம், ஐந்தார், கரும்புல், சடாபலம், தருராசன், திரணராசன், துராரோகம், துரும சிரேட்டம், புல்லூதியம், சீதாளம்.

4) வைத்திய மூலிகை விரிவகராதி :- உபதாகம், கரகாளம், தருவிராசன், துருமேசுவரம்,

5) தமிழ்ப் பேரகராதி :- கற்பகம், தாளம், திருணபதி, புற்றாளி, குடைப்பனை, தந்தற் கமுகு, தலப்பம், வராங்கனை.

6) பிங்கல நிகண்டு :- கரும்புறம், தாளி, கூந்தற் பனை.

7) குணபாடம் :- காமம், தருவிராசன்,

8) ஜீபிலி தமிழ் அகராதி :- தருராஜம்,

9) மகாபாரதம் குருகுலச் சருக்கம் :- தாலம்,

10) சூடாமணி நிகண்டு :- தாளி,

11) யாழ்ப்பாணத்து மாணிப்பாயகராதி தீர்க்கதரு, மதுரசம், சீதாளை.

12) அகராதி நிகண்டு :- நீலம்,

13) சங்கத்தகராதி :- மகபத்திரம், பூமி பிசாகம், கூளிப்பனை, சீதாளி, பூதம்.

14) தொல்காப்பியம் பொருளதிகாரம் :- போந்தை

15) பெருந்தொகை :- போந்து

16) **Indian Medical Plants** : நுங்கு, புல்,

கல்வெட்டு, செப்பேடுகளில்

இன்றைய அச்செழுத்துக்களை வடிவமைக்கப் பெரிதும் துணையாக அமைந்தவை ஓலைச் சுவடிகளில் முன்னோர் எழுதிப் பயின்ற வடிவங்களேயாகும். ஓலைச் சுவடிகள் அழியும் தன்மையுடையனவாதலின் காலந் தோறும் அவை படியெடுத்துப் பாதுகாக்கப்பட்டு வந்தன. அவ்வாறு பெயர்த்து எழுதுந்தோறும் அவ்வக்கால சூழலுக்கேற்ப அவை சிறுசிறு மாற்றம் பெற்று செம்மை பெறுதல் இயல்பே. இன்று கி. பி. 15ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஓலைச்சுவடிகளைக் காண்பது அரிது. எனவே, பழந்தமிழ் வரிவடிவங்களைக் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் உள்ள வடிவங்களைக்கொண்டு அறிய முடிகிறது.

கல்வெட்டு, செப்பேடுகளில் காணப்படும் எழுத்துக் களுக்கும், ஓலைச் சுவடிகளில் காணப்படும் எழுத்துக் களுக்கும் இடையே சில வேறுபாடுகள் உள்ளன. அவ்வேறுபாடு எழுதும் கருவியாலும், எழுதும் முறை யாலும் ஆனதேயாகும். கல்லிலும், செம்பிலும் எழுத்துக் களை தனித்தனியாக வரைந்து செதுக்கி அமைப்பது முறையாகும். ஓலையில் கூரிய முள் அல்லது ஆணியைக் கொண்டு எழுதுவர். அதனால் ஒன்றோடொன்று சங்கிலித்தொடர்போல் அமையுமே யன்றி தனித்தனியாக அமைதல் அரிதாகும். ஓரெழுத்தே கல்லில் வெட்டும்

போது ஒரு வடிவாகவும், கையால் எழுதும்போது ஒரு வடிவாகவும் அமைதல் இயல்பேயாகும்.

தமிழ் மக்கள் இடமிருந்து வலமாக விரைந்து எழுதும் பழக்கம் உடையவர்கள். அதனால் எழுத்துக்கள் வளைந்து, உருண்டு செல்லும் அமைப்புடையனவாக இருந்தன. கல்லிலும், செம்பிலும் வெட்டும்போது சதுரம், கோணம், வட்டம் ஆகிய நிலைகள் செம்மையாக அமையும். ஓலைச்சுவடியில் எழுதும் முறையும், கல்வெட்டில் எழுதும் முறையும் வேறு வேறு அல்லன வாயினும் ஆய்வாளர்கள் கையெழுத்து முறையில் அமைந்தவற்றை கோளெழுத்து, வட்டெழுத்து என்றும், கல்லிலும், செம்பிலும் செதுக்கி அமைந்தவற்றை தமிழி எழுத்து என்றும் கூறுவர்.

தமிழ் மொழியில் கல்வெட்டுச் சாசனங்கள் பல்லவர்களின் ஆட்சிக்காலம் முதல் கிடைக்கின்றன. பாண்டி மண்டலம், சோழ மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலம் ஆகியவற்றில் கி. பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 11ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் காணப்படும் எழுத்துக்கள் பழைய வட்டெழுத்துக்களைச் சார்ந்துள்ளன என்பர்.

இராசராசசோழன் கொண்டுவந்த ஒரே முறை

பாண்டி மண்டலத்தை வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்திய முதலாம் இராசராசசோழன் அதற்கு முன் அந்நாட்டில் வழங்கி வந்த வட்டெழுத்துக்களை நீக்கி விட்டு தொண்டை மண்டலத்திலும், சோழ மண்டலத்திலும் வழங்கிய தமிழ் எழுத்துக்களையே பயன்படுத்துமாறு செய்தான். இச்செய்தியினை

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குற்றாலத்தில் காணப்படும் இரு கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது.

ஓலைச்சுவடிகள்

ஓலைகள் பட்டோலை, பொன்னோலை, மந்திர ஓலை, வெள்ளோலை, வாயோலை என்று இலக்கியங் களிலும், அறையோலை, கையோலை, சபையோலை, இறையோலை, கீழ் ஓலை, தூது ஓலை, ஓலை பிடிபாடு என்று கல்வெட்டுக்களிலும் பல வகைகளாகச் சொல்லப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கல்லில் எழுதப்பட்ட எழுத்துக்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. அவற்றில் கி. பி. 3ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் அறச்சலூர் கல்வெட்டில்தான் முதல் முதலாக எழுத்து என்ற சொல் காணப்படுகிறது. கி. பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டில்தான் முதன் முதலாக ஓலை என்ற சொல் காணப்படுகின்றது. ஆனால் இவற்றிற்கு முன் சங்க இலக்கியம், சங்கம் மருவிய கால இலக்கியங்களில் ஓலை, எழுத்து பற்றிய செய்திகள் அறியக்கிடைக்கின்றன.

பூவார் அடிச்சுவடி என்தலைமேல் பொறித்தலுமே (241)

என்று திருவாசகம் குறிப்பிடுகின்றது. மேலும் இலக்கிய இலக்கணங்களில் சுவடி என்னும் சொல் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை எனக் குறிக்கப்பட்டு இருக்கின்றது.

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலை என நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர் (1586)

என்பது தொல்காப்பியர் நூற்பா, பனை, தென்னை, பாக்கு

முதலிய மரங்களின் இலையாகிய உறுப்பினைக் குறிக்கும் மரபுச் சொற்களாகத் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்பனவற்றைத் தொல்காப்பியம் கூறுகின்றது.

அணித்தோட்டு திருமுகத்து ஆயிழை எழுதிய
மணித்தோட்டு திருமுகம் மறுத்ததற் கிரங்கி (8-111-112)

எனச் சிலப்பதிகாரம் தோடு பற்றிக் குறிப்பிடுகின்றது. அதில் திருமுகம் என்னும் சொல் ஓலையில் எழுதிய கடிதத்தைக் குறிக்கின்றது என்பது தெரியவருகின்றது.

கண்மணி அனையாற்குக் காட்டுக வென்றே
மண்ணுடை முடங்கல் மாதவி யீத்ததும் (13:76-77)

என்று சிலப்பதிகாரம் மடல் பற்றிக் கூறுகின்றது.

மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூலவோலை
மாட்சியில் காட்ட வைத்தேன் (56,24,59)

என தடுத்தாட்கொண்ட புராணம் ஓலை பற்றிக் கூறுகின்றது.

பள்ளித் தடுக்கும் கையேடும் படிக்கவும் சுவடியும்
(பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை)

செய்ய சிவஞானத் திரளேட்டில் ஓர் ஏடு தமிழ்விடு தூது-3)

என்ற இவ்வடிகளில் ஏடு என்ற சொல்லாட்சி பயன்படுத்தப் பட்டுள்ளது.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு(குறள்: 783)

நூல் என்னும் சொல் பழங்காலத்தில் இலக்கணத்தை மட்டுமே குறித்து வந்தது. தந்திரம், தூக்கு, பனுவல், புத்தகம் என்னும் சொற்களாலும் இலக்கண நூலைக் கூறியிருக்கின்றனர். இலக்கணம் அல்லாத பிற நூல்களைச் செய்யுள் என்றும், பாட்டு என்றும் குறித்து வந்திருக்கின்றனர்.

புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல் (தொல். பாயிரம்)

ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே (நன்.நூ.54)

இவற்றுள் பனுவல் என்னும் சொல் நூலைக் குறிக்கின்றது.

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயும் காலை அந்தணர்க்கு உரிய(1570)

பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே (1336)

தூது அனுப்பப்படும் செய்திகளைத் துணிகளில் எழுதி அனுப்பியுள்ளதாக இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது.

கையிற் புனையும் கழிநுண் ணானர்
ஏட்டிலும் கிடையினும் மூட்டலை கிழியினும் (பெருங்கதை)

என்ற அடிகள் இலையும் துணியும் எழுதப் பயன்பட்டமையைத் தெரிவிக்கின்றன.

முதிர்பூந் தாழை முடங்கல் வெண்தோட்டு
விரைமலர் வாளியின் ....
திருமுகம் போக்கும் செவ்விய ளாகி(8:47-49)

எனும் சிலப்பதிகாரக் கூற்று, தாழைமடல் எழுதப்படுகின்ற பொருளாகப் பயன்பட்டதைச் சுட்டுகிறது.

ஓலை, கடைகளில் விற்கப்பட்டதை சங்கப்புலவர்களான ஓலைக் கடையத்தார் மகன் வெண்ணாகன், மதுரை

ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார் ஆகியோரின் பெயர்கொண்டு அறியமுடிகிறது.

தமிழகத்தில் கிடைக்கும் ஓலைச் சுவடிகள், இலக்கியம், மருத்துவம், மந்திரம், சோதிடம், சமயம், வணிகம், ஆவணங்கள், பள்ளி மாணவர்களுக்கான அரிச்சுவடி, எண்சுவடி என்ற வகைகளில் அடங்கிவிடக் கூடியவை. பொதுவாக எல்லாச் சுவடிகளும் ஒரே மாதிரியாக இருந்தாலும், ஒவ்வொரு வகை ஓலைச் சுவடியிலும் ஒவ்வொரு வகையில் எழுதும் முறை தனித்துவம் பெற்றிருக்கும். இலக்கியச் சுவடிகளில் பாடல்களின் முடிவில் எண்களைக் காணலாம். இடதுபுற ஓரங்களில் அத்தியாயத் தலைப்புப் பெயர்களைக் காணலாம். மாந்த்ரீகச் சுவடிகளில் பலவகைச் சக்கரங்களின் (இயந்திரம்) படங்களைக் காணலாம். சோதிடச் சுவடிகளில் ராசிச் சக்கரங்களைக் காணலாம், குறியீடுகளையும் காணலாம். பள்ளிச்சுவடிகளில் பக்கவாட்டில் மூன்று நான்கு பத்திகள் பிரித்து எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கலாம்.

ஓலைகளில் எழுதப்பட்டுள்ள செய்திகளை அறிந்து கொள்ளவேண்டும். பொதுவாக ஒரு கட்டில் உள்ள சுவடிகள் ஒருவரால் எழுதப்பட்டிருந்தால் முதலிரு ஏடுகளைச் சிரமப்பட்டு படித்தால் அவர் எழுதுகின்ற முறை நமக்குப் புரிந்து போகும். அதனை மனதில் 'கொண்டால் அடுத்த ஏடுகள் அவரது கையெழுத்து பழக்கப்பட்டதால் படிக்க எளிதாகிவிடும்.

ஓலைகளில் நார்த்தன்மை குறுக்கு வாட்டாக இருப்பதனால் ஆணியால் கிழித்து எழுதும்போதும், புள்ளியிடும்போதும், ஆணியை அடிக்கடி எடுத்து வைத்து

எழுதும்போதும் இடர்பாடுகள் அதிகம் இருக்கும். எனவே ஓலை எழுத்துக்கள் புள்ளிகள் இல்லாமலும் மயங்கி மாறுபட்டும், கூட்டெழுத்துக்களாகவும் அமைந்தன. கணிதம், ஆவணம் மற்றும் வணிகச் சுவடிகளில் ஆண்டு, மாதம், தேதி, நிலம், பணம், ரூபாய், சாதிப்பெயர்கள் போன்றவை திரும்பத் திரும்ப வரும்போது அவை சுருக்கி எழுதப்பட்டு, பழக்கமான குறியீடுகளாக மாறின. அது மட்டும் அல்லாமல் தமிழுக்கென்றே தனி எண்கள் இருந்தமையும், பின்ன எண்கள் (கீழ் இலக்கம், கீழ்வாய் இலக்கம்) இருந்தமையும் அவை இன்று வழக்கில் இல்லாமல் போனதையும் சுவடிகளில் அவற்றைத் தெரிந்து பழகிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன.

அழியும் நிலையில் உள்ள ஏடுகள் புதிதாகப் படியெடுக்கப்பட்டன. ஒருவரிடம் உள்ள நூல் மற்றவருக்கு தேவைப்படும் போதும் படியெடுக்கப் பட்டது. அப்படி படியெடுப்பது ஏடு திருப்புதல், பிரிநகல், சபாது என்று அழைக்கப்பட்டது.

ஏடு எழுதும்போது ஏற்படும் தவறுகள் ஏட்டுக்குத்தம், எழுத்துக்குற்றம், சொற்குற்றம், வாசகப்பிழை, வரி மாறாட்டம் எனப்பட்டன. எலிகடி, வெட்டுச் செதுக்கு, செல் அரிப்பு முதலியவையும் குற்றங்களே.

அச்சிடப்பட்டு வெளிவந்த நூல்கள் சுமார் இருநூறு ஆண்டுகளிலிருந்து தான் காணக்கிடைக்கின்றன. அதற்குமுன்னர் ஓலையில் எழுதப்பட்ட நூல்கள்தான் இருந்தன. 200 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் காகிதத்தில் எழுதும் முறை நடைமுறைக்கு

வந்தது. அதுவரை இப்போது காகிதத்தில் எழுதப்படுபவை அனைத்தும் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டு வந்தன. அப்போதைய ஓலைச்சுவடிகள் மூன்று வகைப்படும். அவை 1. ஆவணங்கள், 2. பதிவேடுகள், 3. நூல்கள் என்பனவாகும்.

1. நிலங்கள் மற்றும் வீடுகள் போன்ற சொத்துக்களின் உரிமைப்பட்டயங்கள், கிரயம், தானம், கடன் ஒத்தி போன்ற சாசனங்கள், ஒப்பந்தப் பத்திரங்கள், சான்றுகள், தேர்தல் வாக்குச் சீட்டுக்கள், அரசு ஆவணங்கள், அறிவிப்புகள் போன்றவை எழுதப்பட்ட ஓலைகள், ஆவணங்கள் எனப்படும்.

2. பதிவேடுகள் வரவு-செலவு கணக்குகள், அன்றாட நிகழ்ச்சிக் குறிப்புகள், நிலங்கள் உரிமைப் பதிவுகள், வரி நிர்ணயம், வரி வசூல் விவரம், ஊழியர்கள் மற்றும் அவர்களின் ஊதியம் ஆகிய விவரங்கள், நன்கொடைகள் வழங்கும் விவரங்கள் போன்றவை எழுதப்பட்ட ஓலைகள் பதிவேடுகள் எனப்படும்.

3. இலக்கியங்கள், இலக்கணங்கள், கணிதம், மருத்துவம், விஞ்ஞானம் போன்ற நூல்கள் ஓலைகளில் எழுதப்பட்டிருந்தன.

இவற்றில் மூன்றாம் வகையான நூல்கள் இப்போது பலரிடமும் உள்ளன. ஆனால் ஆவணங்களும், பதிவேடுகளும் இப்போது அதிகமாக இல்லை. இவை அரிதாக அரசு அலுவலகங்களிலும் தனியார் வணிக நிறுவனங்களிலும் இருந்தன. இவை அலுவலக நடை முறைப்படி காலாவதியானதும் அழிக்கப்பட வேண்டியவை. ஆகவே, அவை அவ்வப்போது அழிக்கப் பட்டு விட்டதால் அதிகளவில் ஆவணங்களும், பதிவேடுகளும் கிடைக்காமற் போய்விட்டன. இதுபோலவே

வணிகர்களிடம் இருந்தவைகளும் காலப்போக்கில் அழிந்து விட்டன.

தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் ஆவணங்களும், பதிவேடுகளும் ஓலைச் சுவடிகளில் எழுதிப் பராமரிக்கப்பட்டு வந்தன. அந்த ஆவணங்கள் ஆவணக் களரியில் பதிவு செய்யப்பட்டன. தவிர இக்காலத்தில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கிரயத்தொகை முதலானவை பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களைப் பதிவு செய்யும்போது பதிவாளர் முன்பாக செலுத்துவது நடைமுறையில் உள்ளது. அதுபோலவே அக்காலத்திலும் இவ்வழக்கம் நடைமுறையிலிருந்துள்ளது. இதனை "இக்காசு நாற்பத்தைந்தாயிரம் ஆவணக் களரியிலேயே காட்டேற்றில் கைச் செலவுறக்கொண்டு விற்று விலைப் பிரமாணம் செய்து குடுத்த இந்நிலத்திற்கு இதுவே விலையாவதாகவும்" என்று காட்டுமன்னார் கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

மூல ஆவணங்கள் ஓலையில் எழுதப்பட்டு அதற்குச் சரியான படிகள் கல்லில் கல்வெட்டுக்களாகவும், செப்புத் தகட்டில் செப்பேடுகளாகவும் பொறிக்கப்படும். இதனை "இவ்வோலை பிடிபாடாகக் கொண்ட சந்திராதித்தவரை செல்வதாகத் தங்களுக்கு வேண்டின இடங்களிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க" என வரும் கல்வெட்டுத் தொடர்களால் அறியலாம். ஓலைகளில் எழுதப்பட்ட ஆவணங்கள் காலப்போக்கில் அழிந்து போனாலும் அவற்றின் படிகளான கல்வெட்டுக்கள், செப்பேடுகள் ஆகியவை இன்றளவும் இருந்து அதில் உள்ள செய்திகளை நமக்கு அறிவிக்கின்றன.

நீதி மன்றங்களில் நடைபெறும் வழக்கில் வழக்காளிகள் தமது வாதத்திற்கு உலக வழக்கு, ஓலையில்

எழுதப்பட்ட ஆவணங்கள், நேரில் கண்டவர்களின் சாட்சியம் ஆகியவற்றை ஆதாரமாகக் காட்டுவர். இந்த ஆதாரங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு பரிசீலித்து இவ்வாதாரங்களின் அடிப்படையில் நீதி வழங்கும். இந்த நடைமுறை அக்காலத்திலிருந்தே இன்றுவரை நடைபெற்று வருகிறது. ஓலையில் எழுதப்பட்ட ஆவணம் மிக முக்கிய சாட்சி ஆதாரமாக விளங்குவதை சேக்கிழார் பெருமான் தமது திருத்தொண்டர் புராணத்தில்,

ஆட்சியில் ஆவ ணத்தில்
அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று
காட்டுவாய் என்ன முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை
படி ஓலை மூல ஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்
என்றனன் மாயை வல்லான்

என்றும்,

இருள்மறை மிடற்றோன் கையில்
ஓலைகண் டவையோர் ஏவ
அருள்பெறு கரணத் தானும்
ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி
விரிந்ததன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ட
வாசகம் செப்பு கின்றான்.

என்றும் கூறுகிறார்.

ஓலைச்சுவடிகளை எழுத சாதாரணப் பனை யோலைகள், தாளிப்பனை எனப்படும் பனை மரத்தின் ஓலைகள் ஆகிய இருவகையான பனை ஓலைகள்

பயன்படுத்தப்படுகின்றன. சாதாரணப் பனையை விடத் தாளிப் பனையின் ஓலைகள் அகலமாகவும், நீளமாகவும், மென்மையாகவும் இருக்கும்.

நூல்கள் எழுதத் தகுதியான காய்ந்த ஓலைகளை அளவாக நறுக்கிப் பதமாக நீராவியில் வேகவைக்க வேண்டும். அவற்றை ஈரமின்றி உலர வைத்து மழுங்கிய கூழாங்கல் அல்லது சங்கு கொண்டு அழுத்தித் தேய்த்துப் பதப்படுத்துதல், "ஓலை வாருதல்" அல்லது "ஏடு வாருதல்" எனப்படும்.

பதப்படுத்திய ஓலைகளைக் கயிறு கோர்த்துச் சுவடியாக்க ஓலையில் இடது பக்கமோ அல்லது இரு பக்கங்களிலுமோ துளையிடுவார்கள். இவ்வாறு இடப்படும் துளைகள் "ஓலைக்கண்கள்" எனப்படும்.

ஆவணங்கள் எழுத நரம்பு நீக்கப்படாத முழு ஓலைகளை அளவாக நறுக்கிக்கொண்டு முன் கூறிய படியே ஆவியில் வேகவைத்துப் பதப்படுத்த வேண்டும். இவை "ஆவண ஏடுகள்" அல்லது "சாசன ஏடுகள்" எனப்படும்.

பதிவேடுகள் எழுத நரம்பு நீக்கப்பட்ட முழு ஓலைகளை நீளமாகப் பயன்படுத்துவார்கள். இந்த ஓலைகள் ஆவியில் வேகவைத்துப் பதப்படுத்துவதில்லை. பதப்படுத்தாத ஓலைகளையே பயன்படுத்தி வந்தனர். இந்த முழு ஓலைகள் "கணக்கு ஏடு" எனப்படும்.

ஓலையில் எழுதப்பட்ட பதிவேடுகள் நூல்களைப் போல் அடுக்காகக் கோர்த்து கட்டப்படுவதில்லை. அவை கயிற்றில் கோர்த்துச் சுருட்டிக் கட்டப்பட்டிருக்கும். அவை அடிப்பாகமும், நுனிப்பாகமும் சிறுத்து நடுப்பாகம் பெருத்து மலைப்பாம்பின் வயிற்றுப்பகுதி போல்

காணப்படும். இவ்வாறு சுருட்டிக் கட்டப்பட்ட கணக்குகள் "சுருணை" எனப்படும்.

நூல்கள் எழுதுவதற்குத் தேவையான ஓலைகளைப் பதப்படுத்தித் துளைகள் போட்டு கயிறு கோர்த்துச் சுவடியாக்கப்படும். இந்தச்சட்டங்கள் "கம்பை" அல்லது "காப்புச் சட்டங்கள்" எனப்படும்.

இவ்வாறு எழுதுவதற்குத் தகுதியாக செம்மை செய்யப்பட்ட எழுதாத ஓலைகள் "வெள்ளோலைகள்" எனப்படும்.

மிகப்பெரிய சுவடியாக இருந்தால் ஓலைகளின் இருபக்கமும் துளைகள் போடப்பட்டு இடது பக்கத் துளையில் கயிறு கோர்த்து வலது பக்க துளையில் ஏடுகள் பிறழாமலிருக்கக் குச்சியோ அல்லது இரும்புக் கம்பியோ செருகுவார்கள். இது "நாராசம்" எனப்படும்.

ஆவணங்கள் எழுதும் ஓலைகள் பதப்படுத்தப்பட்டு அரசு முத்திரை பதிப்பிக்கப்படும். இவ்வாறு பதிப்பிக்கப் படுபவை "ஓலை முத்திரை" அல்லது "ஏட்டுப்பொறி" எனப்படும்.

ஓலையை எழுதப் பயன்படுத்தப்படும் ஆணி இரும்பு, வெண்கலம் முதலான உலோகங்களால் தயாரிக்கப்படும். இவ்வித ஆணிகள் (**Stylus**) எழுத்தாணி, எழுத்தூசி, ஓலை ஆணி, ஓலைத்தீட்டும் படை எனப் பல பெயர்களால் வழங்கப்படும். இந்த ஆணி குண்டெழுத்தாணி, குடவெழுத்தாணி, (குடைவெழுத் தாணி) மடக்கெழுத்தாணி எனப் பல வகைகளாகப் பயன் படுத்தப்பட்டன.

ஓலைச்சுவடி, நூல்கள், பதிவேடுகள், ஆவணங்கள் ஆகியவை வைத்துப் பாதுகாக்கப்படும் பேழை "ஓலைச் சம்புடம்" எனப்படும்.

ஓலைச்சுவடிகள் அடங்கிய ஓலைச் சம்புடம் முதலியவற்றை வைத்துப் பாதுகாக்கப்படும் இடம் "சரஸ்வதி பண்டாரம்" என்றழைக்கப்பட்டது.

ஓலைச்சுவடி நூல்களையும், ஆவணங்களையும், பதிவேடுகளையும் வைத்துப் படிப்பதற்கு பயன்படுத்தப் படும் சாய்வுப்பலகை "சரஸ்வதி பீடம்" எனப்பட்டது.

ஓலைச்சுவடிகள், ஆவணங்கள் போன்றவை எழுதும் பணியாளர்களுக்கு "ஓலை எழுத்துப்பேறு" என ஊதியமும் "ஓலை எழுத்து விநியோகம்" எனச் சன்மானமும் வழங்கப்பட்டன.

அரண்மனைகளில் ஓலை எழுதுவோர் "மந்திர ஓலை" என அழைக்கப்பட்டனர்.

மந்திர ஓலை என்பவரால் எழுதப்பட்ட ஓலைகளை சரிபார்த்து ஒப்புதல் அளிக்கும் அதிகாரி "ஓலை நாயகம்" எனப்பட்டார்.

அரசு அலுவலகங்களிலும் பிற அலுவலகங்களிலும் கணக்கு ஓலை மற்றும் பதிவேடுகளை எழுதுவோர் "கணக்கன்" அல்லது "கரணத்தான்" எனப்பட்டனர்.

ஓலைச் சம்புடம் அடங்கிய தூக்கினைத் தூக்கிச் செல்லும் பணியாளர் "தூக்குத் தூக்கி" என்றழைக்கப் பட்டார்.

ஓலைகளில் பதிவேடுகள் (கணக்குகள்) எழுதும் கணக்கர்களுக்கு "கணக்கப்பேறு" என ஊதியமும், "கணக்கக்காணி" என நிலமானியமும் வழங்கப்பட்டன. ஓலைச் சுவடிகள் எழுதப் பனை ஓலைகளை பதப்படுத்தி கொடுப்பதையும், சுவடி பார்த்துப் படியெழுதிக் கொடுப்பதையும் அக்காலத்தில் பலர் பிழைப்புக்கான தொழிலாகவே செய்து கொண்டிருந்தனர்.

இப்போது இருப்பது போலவே பண்டைக் காலத்திலும் அனைத்துத் துறைகளுக்கும் பல்வேறு பதிவேடுகள் நடைமுறையில் இருந்துள்ளன. அந்த பதிவேடுகள் "பொத்தகம்" என்ற பெயரால் வழங்கப் பட்டன.

இவ்வளவு பயன் மிக்க பனை மரங்கள் இலை, இலைக்காம்பு, மஞ்சரி, மலர், புல்லி வட்டம், அல்லி வட்டம், சூலக வட்டம், கனி என பல்வேறு பாகங்களைக் கொண்டது. வெங்கடசுப்பன், பி. போஸ், சர்மா, ஏ. கே. சர்க்கார், எஸ். கே. சர்க்கார் போன்ற தாவர இயல் அறிஞர் பெருமக்கள் பனை மரத்தின் குரோமோசோம் எண்ணிக்கை **2ஐ =36 என்று கணக்கிட்டுள்ளனர். பனையின் அளவற்ற பயனை இதனால் நாம் அறியமுடிகின்றது.**



"நேரிமலை"

சங்க காலத்து கரிகாற் சோழன் இயமமலையில் வழித்தடம் செய்ததையும், காவிரி ஆற்றின் கரையைப் பந்தனம் செய்ததையும் இலக்கியச் சான்றுகள் தெளிவுற உரைக்கின்றன. கரிகாலனுக்கு முன்னர் சோழ மன்னன் ஒருவன் மலை திரித்துக் காவிரி ஆற்றின் போக்கைச் சோழநாட்டிற்குத் திருப்பினான் என்பதைச் சோழர்கால இலக்கியங்கள் கூறுவதை சோழர் தம் செப்பேடுகளும் வலியுறுத்தி கூறுகின்றன.

1. இராஜேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறும் செய்தி

இச்செப்பேட்டுத் தொகுதியின் வடமொழிப் பகுதி சோழர் குல மன்னர்களின் மரபுப் பெருமையை அழகிய சுலோகங்கள் வாயிலாகக் குறிப்பிடுகின்றது. அதில் 33 முதல் 35 வரை உள்ள சுலோகங்கள் சித்திரதன்வன் என்ற சோழன் பகீரதனைப் போன்று கவேர மன்னனின் மகளாகிய காவிரியை தன் நாட்டிற்குக் கொண்டு வந்தான் என்று கூறுகின்றது.

செப்பேட்டுவரி

67 ராஜா பரகேஸரி ஸம்பப: சித்ராச்வஸ் - ததஸீதஸ்தஸ்ய சித்ரதன்வா

68 மஹீபதி: 33 ஸர்வதிக்ப்யஸ்ஸ மாநீத: - பார்த்தீனவரார்த்த ராசய: தஸ்யாக்ரதோ

69 வியகீர்த்யந்த தேனாயிஸ ஸார்த்தினாம் 34 ஸீலஸடிலாவங் - தாரிதேதி மத்வா தலஸீர

70 தேன பகீரரேதன ரக்ஞா நரபதி ரவதாரன்ய சோர்த்தி - நிஜபுவி தாம் ஸகவேர

71 கன்ய காக்யாம் 1135 என்று கூறுகிறது. இங்கு குறிப்பிடப்படுகின்ற சோழ மன்னன் காவிரிக் கரையைப்

பந்தனம் செய்த கரிகாலனுக்கு முன்னவன் என்பதையும் மற்றொரு சுலோகம் சுட்டுகின்றது.

இதே செய்தியினை கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர் மூவருலாவில் மேலும் விரிவாகக் கூறுகிறார். இமயத்தில் புலிபொறித்ததோடு, காவிரிக்குக் கரை எடுத்த கரிகாற் சோழனுக்கு முன்னவனாகிய ஒரு சோழ மன்னன்,

கோல்கொண்டு அலை எறியும்
காவிரியாற்றுப் படைக்கு மலை எரிய
மன்னர்க்கு மன்னன்

என்று கூறி காவிரியாற்றின் தடத்தில் இருந்துகொண்டு அதன் போக்கைத் தடுத்த மலையை உடைத்து பொன்னி நதியை சோழ நாட்டிற்குக் கொண்டு வந்த செய்தினை உரைக்கின்றார். கலிங்கத்துப் பரணி பாடிய ஜெயங்கொண்டாரோ அம்மன்னவனை,

காவிரிப்புனல் கொணர்ந்தவன்

என்று கூறுகின்றார். தொல்காப்பியத்திற்கு உரை கூறும் நச்சினார்க்கினியரும் இதனை வலியுறுத்தும் வண்ணம் அவ்வுரை நூலில் தடையாக நின்ற மலையை அகற்றி காவிரிப் போக்கை சீர் செய்த நிகழ்ச்சியை மேற்கோள் காட்டியுள்ளார். கரிகாலனுக்கு சில நூற்றாண்டுகள் முன்பு வாழ்ந்த சோழ மன்னன் ஒருவன் காவிரியின் போக்கினை தடை செய்த மலையை வெட்டி சோழநாட்டிற்குத் திருப்பினான் எனக் கூறப்பெறும் மலைப்பகுதி தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் பகுதியே என்பது நிலவியல் அடிப்படையில் நோக்கும் போது உறுதி பெறுகின்றது.

ஒகேனக்கல் மலைப்பகுதியிலிருந்து (நீர் வீழ்ச்சி) காவிரி புறப்படும் இடம் இயற்கையாக அமைந்த தடம் அன்று வெட்டி ஏற்படுத்தப்பெற்ற தடமே ஆகும். சங்காகாலச் சோழ மன்னன் ஒருவனால் இங்குள்ள

மலைப்பகுதிகள் வெட்டி அகற்றப்பெற்றுத் தடையில்லா வழித்தடம் ஒன்று ஏற்படுத்தப்பெற்றுள்ளது. அதன் வழியாகக் காவிரியைத் தெற்கு நோக்கி ஓடச்செய்து பின்பு சோழநாட்டை அடையுமாறு செய்துள்ளான். அவ்வேந்தனைத் திருவாலங்காட்டுச் செப்பேடு கரிகாலனுக்கு முன்னர் வாழ்ந்த சித்ரதன்வன் என்ற வடமொழிப் பெயரால் சுட்டுகின்றது.

தடம் மாறிய தமிழக நதிகள் பற்றி செயற்கைக்கோள் எடுத்த படங்களைக் கொண்டு ஆராய்ந்த வல்லுநர்கள் காவிரி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒகேனக்கல் பகுதியிலிருந்து வடகிழக்காக ஓடி பெண்ணையாற்றில் கலந்தது என்றும், அது போன்றே 2700 ஆண்டுகளுக்கு முன்பு ஒகேனக்கலிலிருந்து சின்னாறு, குடியாத்தம், வாலாஜாபாத் வழியாகச் சென்று சென்னைக்கு வடக்கேயுள்ள கொற்றலை ஆற்றுப் பள்ளத்தாக்கில் ஓடிக் கடலில் கலந்தது என்றும் செயற்கைக் கோள் தந்த படங்கள் வாயிலாக விளக்கியுள்ளனர்.

குடகிலிருந்து புறப்பட்ட காவிரி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தருமபுரி மாவட்டத்து ஒசூர்ப் பகுதியை அடையும் போது அங்குள்ள மலைத் தொடர்களில் மோதி வழி கிடைத்த இடங்களில் எல்லாம் பாய்ந்து வெள்ளப் போக்கிற்கு ஏற்பப் பலமுறை தமிழகத்தில் தன் தடத்தை மாற்றிச் சென்றிருக்கிறது. சென்னைக்கு வடக்கிலிருந்து கடலூர் அருகே கடலில் கலக்கும் கெடிலம் ஆறு வரை பல்வேறு காலகட்டங்களில் காவிரியாறு அங்குத் தடம் பதித்துச் சென்றுள்ளதைச் செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன. தடம் மாறிய காவிரியின் போக்கை ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்பு (கரிகாலன் காலத்திற்கு முன்) ஒழுங்குபடுத்த நினைத்த சோழ மன்னன் ஒருவன் ஒகேனக்கல் மலைத்தொடர்ப் பகுதியில் மலையை வெட்டிப் புதிய தடம் அமைத்துச்

சோழ நாட்டிற்குக் காவிரியைக் கொண்டு வந்துள்ளான். இதனைச் செப்பேடுகளும், இலக்கியங்களும் சோழர் மரபுப் பெருமையாகக் கூறி நிற்கின்றன.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு வடஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்திலிருந்த ஆண்டிப்பட்டி என்னும் ஊரிலிருந்து ஏறத்தாழ 120 ஈயக்காசுகள் கண்டுபிடிக்கப்பெற்றன. அவற்றை சென்னை அருங்காட்சியகத்தில் தமிழக அரசு பாதுகாத்து வைத்துள்ளது. அனைத்துக் காசுகளும் ஒரேவித வடிவமைப்பு கொண்டவை யாகவும், ஒரேவித எழுத்துப் பொறிப்பு உடையனவாயும் திகழ்கின்றது. அக்காசுகளில் ஒருபுறம் V போன்ற ஒரு குறியீடும் இதன் இருபுறமும் கூரிய முக்கோணப் பற்களும் இடையே வளைவுகளுடன் கூடிய இணைகோடுகளும் சில புள்ளிகளும் காணப்படுகின்றன. மறுபுறம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பெற்ற தமிழி (தமிழ் பிராமி) எழுத்தமைதியில்,

தின்னன் எதிரான் சேந்தன் அ

என்ற எழுத்துப் பொறிப்பும் நடுவே இரண்டு இணை கோடுகளுக்கு மேலும், கீழும் சிறு வட்டங்களும், அருகே அங்குசம் ஒன்றும் உள்ளன.

Tamil Coins எனும் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்டுள்ள நூலில் அதன் ஆசிரியர் இரா. நாகசாமி மேற்குறித்த எழுத்துப் பொறிப்பைக் குறிப்பிடுவதோடு கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த காசு இது என கணித்துள்ளார். தின்னன், எதிரான், சேந்தன் என்ற மூன்று சொற்களும் னகர ஈறு பெற்றுத் திகழ்வதால் இவை தமிழ்ச் சொற்களே என்பதை வலியுறுத்துவதோடு சொற்றொடரின் இறுதியில் அ என்ற எழுத்து உள்ளமையை மாங்குளம் (மீனாட்சிபுரம்) அழகர்

கோயில் கல்வெட்டுக்களில் காணப்பெறும் அ என்ற முடிவு எழுத்தோடு ஒப்பிட்டு அவ்வாறு எழுதப்பெறும் பழைய மரபைச் சுட்டிக்காட்டுவதோடு. ஏறத்தாழ இதே காலகட்டத்தில் வெளியிடப் பெற்ற சாதவாகனர்களின் காசுகளில் அ என்ற முடிவு எழுத்து காணப்பெறுவதையும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். இக்காசில் குறிக்கப்பெறும் சேந்தன் என்பவன் தின்னன் என்பவனை வெற்றி கண்டவன் என்பதையும் அவன் நற்றிணையில் குறிக்கப் பெறும் ஆர்க்காட்டுத் தலைவன் அழிசி என்பானின் மகனான சேந்தனாக இருத்தல் கூடும் என்றும் கருதுகிறார். இரா. நாகசாமி எடுத்துக்காட்டும் இக்காசினை மேலும், தமிழ்ப்பாடல்கள், சோழநாட்டுக் கல்வெட்டுக்கள் வாயிலாக ஆராய்வோம்.

நற்றிணை, குறுந்தொகை எனும் இரு சங்கத் தமிழ் நூல்களும் சோழர் குடியில் தோன்றிய காவிரிக்கரை ஆர்க்காட்டுத் தலைவன் அழிசி என்பானின் வரலாற்றை நான்கு பாடல்களின் வாயிலாகக் காட்டுகின்றன. பொதுவாக ஒருவன் புகழை எடுத்துரைக்கும்போது அவன் தந்தையின் பெருமையைக் கூறுதல் மரபு ஆனால் ஆற்றல் மிக்க தலைவனான அழிசியின் புகழை பரணரும், மற்றொரு புலவரும் கூறும்போது "சேந்தன் தந்தை அழிசி" என்றே மகனின் பெருமை கூறி தந்தையைக் குறிப்பிட்டுள்ளனர்.

நற்றின்னயின் 190 ஆம் பாடல் இதனை சுவைபடக் கூறுகின்றது. வினைவயிற் சென்ற தலைமகன் சுரத்திடைத் தன் காதலியை நினைத்து வருந்துகிறான். அப்போது அவன் எழில் நலம் பேசப்பெறுகின்றது. பகைவருடைய புகுதற்கரிய அரண்களை வெற்றிகண்ட மலை போன்ற கைவன்மையையும், கள் உணவையும் வெற்றி கொள்ளும் வேற்படையையும் உடைய சேந்தன் தந்தையாகிய அழிசி என்பான் மணங்கமழும் மாலையையும் அழகிய

தேரினையும் உடையவன். அவன் ஊரான ஆர்க்காடு நெற்கதிர்களைப் பெற்ற வயல் சூழ்ந்த பேரழகு உடையது. அவ்வழகிற்கு ஒப்புடையவளே இங்குப் பேசப் பெறுகின்ற தலைவி என்பது புலவரின் கூற்று.

நோம் இனி வாழிய நெஞ்சே மேவார்
ஆர் அரண் கடந்த மாரி வண்மகிழ்த்
திதலை எஃகின் சேந்தன் தந்தை
தேம்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி
வண்டுமுக நெய்தல் நெல்லிடை மலரும்
அரியல் அம்கழனி ஆர்க்காடு அன்ன
காமர் பணைத்தோள் நலம் வீறு எய்திய
வலைமான் மழைக்கண் குறுமகள்
சில்மொழித் துவர்வாய் நகைக்கு மகிழ்ந்தோயே

இப்பாடல் வாயிலாகப் பகைவருக்கு உரிய புகுதற்கரிய அரண்களை வெற்றி கொண்டவன் சேந்தன் என்பதையும், அவனுடைய தந்தையாகிய அழிசி தேர் உடையவன் என்பதையும் இவர்கள் ஊரான ஆர்க்காடு நீர்வளம் மிகுந்த, வயல்கள் சூழ்ந்த பாதுகாப்புடைய ஊர் என்பதையும் அறிய முடிகின்றது.

குறுந்தொகையில் (பாடல் எண்: 258) பரணரோ மற்றொரு பெண்ணின் பேரழகிற்கு ஆர்க்காட்டின் எழிலை ஒப்பிட்டுக் காட்டுகின்றார். பலரும் நீராடுகின்ற காவிரி நதியின் நீர்த்துறையின் கண் உள்ள மருத மரத்தில் உயர்ந்த கொம்புகளை உடைய யானைகள் கட்டப் பட்டுள்ளன. அவை சேந்தன் என்பானுக்கு உரியவை. அவன் தந்தையான அழிசி கள்ளாகிய உணவையும், அழகிய விலங்குத் தொகுதியை வேட்டையாடும் தொழிலையும், பகைவருக்கு நரகம் போன்ற துன்பத்தைத் தரும் ஒளி மிகுந்த வாளையும் உடைய வீரர்களுக்குத் தலைவனாவான். அவன் ஊரான ஆர்க்காடு போன்றே அழகுடையவள் அப்பெண் என்று கூறுகின்றார்.

வாரல் எம் சேரி தூரல் நின் தாரே
அலராகின்றாய் பெரும் காவிரிப்
பலர் ஆடு பெருந் துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியல் அம் புகவின் அம் கோட்டு வேட்டை
நிரைய ஒள் வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு அன்ன இவள்
பழி தீர் மாண் நலம் தொலைவன கண்டே

பரணரின் இப்பாடல் ஆர்க்காட்டின் இருப்பிடத்தைத் தெளிவுறக் கூறுகின்றது. காவிரிப் பெருந்துறையின் கண் அமைந்துள்ள ஊர் என்பதையும், அழிசியின் புகழுக்குக் காரணமாக விளங்குகின்ற அவன் மகன் சேந்தன் யானைப் படைக்கு உரியவன் என்பதையும் எடுத்துக் கூறுகின்றது.

நற்றிணையின் 87 ஆம் பாடலை யாத்த நக்கண்ணையார் தலைவி கண்ட கனவு ஒன்றைக் கூறுகிறார். பிரிவுத் துயரால் வருந்திய தலைவியோ தன் தலைவனுடன் முயங்குவதாகக் கனவு காண்கிறாள். அவ்வின்பமெல்லாம் அவள் கண் விழித்தபோது ஒழிந்தன. அவள் அடைந்த அந்த இன்பத்திற்கு உவமையாக ஒரு காட்சியைக் காட்டுகின்றார். அவர் தம் ஊரின்கண் உள்ள உயர்ந்த மாமரத்தின் மேலிருக்கின்ற முட்போன்ற எயிற்றினை உடைய வவ்வாலானது வெல்லும் போரை உடைய சோழர் குடியில் பிறந்து ஆர்க்காட்டில் திகழ்பவனாகிய அழிசி என்பானது பெரிய காட்டின்கண் உள்ள நெல்லிப்பழத்தின் இனிய புளிச்சுவையை தான் பெற்றதாகக் கனவு காண்பதனை ஒத்து இருப்பதாகக் கூறுகின்றார்.

உள்ளூர் மாஅத்த முள் எயிற்று வாவல்
ஓங்கல் அம்சினைத் தூங்குதுயில் பொழுதின்
வெல்போர்ச் சோழர் அழிசிஅம் பெருங்காட்டு
நெல்லிஅம் புளிச்சுவைக் கனவி யாங்கு

அதுகழிந் தன்றே தோழி அவர் நாட்டுப்
பனி அரும்பு உடைந்த பெருந்தாள் புன்னை
துறைமேய் இப்பி ஈர்ம்புறத்து உறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மகிழ்ச்சியும்
பெருந்தண் கானலும் நினைந்த அப்பகலே

நற்றிணையின் 227 ஆம் பாடலில் தேவனார் எனும் புலவர் தோழி ஒருத்தியின் கூற்றாக யானைகள் மிகுதியாக உடையதும் சோழர் கொடி பறக்கக் கூடியதுமாகிய ஆர்க்காட்டின் தேர் செல்லுகின்ற தெருவின் அழகு போன்ற தலைவி என்று விவரிக்கின்றார். இப்பாடலும் ஆர்க்காட்டின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றது. சோழர்களின் முக்கிய நகர் அதுவென்பதும், அங்கு யானைகளும், தேரும், சோழர் கொடியும் இருந்தமையால் படையரண் மிக்க ஒரூராக அவ்வூர் திகழ்ந்தது என்பதும் நன்கு விளங்குகின்றது.

நற்றிணை மற்றும் குறுந்தொகை ஆகிய நூல்களில் காணப்பெறும் மேற்குறித்த செய்திகளைத் தொகுத்து நோக்கும் போது சோழ நாட்டு காவிரிக்கரையில் திகழும் ஆர்க்காட்டுத் தலைவனான சேந்தன் சோழர் குடி பிறந்தவன் என்பதும் யானைப் படையினைக்கொண்டு பல வெற்றிகள் பெற்ற பெருவீரன் என்பதும் தெள்ளிதின் விளங்குகின்றது. அவன் ஊரான ஆர்க்காடு என்பது கல்லணைக்குத் தென் கிழக்காக விண்ணாற்றுக்கு வடகரையில் அமைந்துள்ளது. பிற்காலச் சோழர் காலத்தில் ஆர்க்காட்டை தலைமையிடமாகக் கொண்டு ஆர்க்காட்டுக் கூற்றம் விளங்கியதைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இதே கூற்றத்தில் மேலும் இரண்டு ஆர்க்காடுகள் உள்ளன. அவற்றை உமையவள் ஆர்க்காடு என்றும், ராஜேந்திரம் ஆர்க்காடு என்றும் தற்காலத்தில் அழைப்பர். தலைமையிடமான ஆர்க்காட்டை பேராற்காடு என்றும் இக்கூற்றத்தில் அமைந்த பிறிதொரு

ஆற்காட்டை சிற்றார்க்காடு என்றும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஆர்க்காட்டுக் கூற்றமானது காவிரி, அதிலிருந்து பிரியும் குடமுருட்டியாறு ஆகியவற்றின் தென்கரையிலும், விண்ணாற்றின் வடகரையிலும் அமைந்ததாகும். ஆர்க்காடு எனும் இவ்வூருக்குக் கிழக்காக அழிசிக்குடி என்ற பெயரில் மற்றொரு ஊர் இன்றும் திகழ்கின்றது. சேந்தனின் தந்தையும், காவிரி பாயும் ஆர்க்காட்டின் தலைவனுமான அழிசியின் பெயரில் அவ்வூர் அழைக்கப்பெறுவது ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் அழிசியின் பெயர் ஆர்க்காட்டுக் கூற்றத்து மக்களால் மறக்கப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

"தின்னன் எதிரான் சேந்தன் அ" என்ற எழுத்துப் பொறிப்புக் காணப்பெறும் நாணயத்தின் அதே பக்கத்தில் அங்குசம் ஒன்றின் உருவம் இருப்பதைக் காண்கிறோம் "படுமணி யானைப் பசும்பூட் சோழர் கொடி நுடங்கு மருகின் ஆர்க்காட்டாங்கு" என்ற தேவனாரின் நற்றிணைப் பாடல் அடியையும், "காவிரிப் பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த ஏந்துக் கோட்டு யானைச் சேந்தன் ஆர்க்காடன்ன" என்ற பரணரின் குறுந்தொகைப் பாடலடியையும் வைத்து நோக்கும்போது சோழர் குடியில் பிறந்த சேந்தன் தன் வெற்றிகளுக்குக் காரண மாகத் திகழ்ந்த யானைப் படையின் சிறப்பைக் காட்டவே அங்குசத்தின் உருவத்தைப் பொறித்துள்ளான் என்பதையும் அறிய முடிகின்றது.

இக்காசின் பின்புறம் காணப்பெறும் V என்ற வரிவடிவம் ஒன்றாக இருந்த ஒரு பொருள் பிளக்கப் படுவதை உணர்த்தும் ஒரு குறியீடாக நாம் கொள்ளலாம். ஒரு முனையில் இணைந்து இரண்டாகப் பிளவுபடும் அந்த

இரு கோடுகளின் பக்கவாட்டில் ஐந்து மலை முகடுகள் இருப்பதைக் காண முடிகின்றது. ஒரு புறம் எவ்வாறு மலைமுகடுகள் அமைப்பு உள்ளதோ அதன் பிரதிபோன்றே எதிர்புற மலை முகடுகளும் உள்ளன. எனவே ஐந்து முகடுகள் உள்ள ஒரு சிறு குன்றுத்தொடர் இரண்டாகப் பிளக்கப்பெற்றது என்பதை மேற்குறித்த குறியீட்டால் உணரலாம். பொதுவாக சங்ககாலச் சேரர், பாண்டியர், சாதவாகனர் காசுகளில் சில மலை முகடுகளும், நதியும் காணப்பெறும். ஆனால் இங்கு மலை திரித்ததை உணர்த்தவே பிளவுபடும் குறியீடு காட்டப்பெற்றுள்ளது. அவ்வாறு பிளக்கப்பெற்ற குன்றுப் பகுதியிலிருந்து வளைந்து, நெளிந்து ஒரு ஆறு ஓடுவதை இரண்டு இணை வளைகோடுகள் காட்டுகின்றன. அதில் நீரோட்டம் இருப்பதை உணர்த்த ஒரு சில புள்ளிகள் வளைகோடுகளுக்கு இடையே காட்டப் பெற்றுள்ளன. இச்சின்னம் எதைக் குறிப்பிடுகிறது என்பதனை இனி ஆராய்வோம்.

தின்னன் என்பானை யானைப்படை கொண்டு சேந்தன் வெற்றி கண்டவன் என்பதால் தின்னன் எதிரான் சேந்தன் என்று தன் பெயரைப் பொறித்து அருகே அங்குசத்தின் உருவத்தைப் பொறித்துள்ளான். இவன் காவிரி பாயும் ஆர்க்காட்டுத் தலைவன் என்பதால் இக்காசின் பின்புறம் காவிரி நதியைக் காட்டியுள்ளான். இக்கூற்றத்தின் நிலவியல் அமைப்பைத் துல்லியமாக ஆராயும் பொழுது காசில் காணப்பெறும் ஆறு காவிரி நதியின் கிளை ஆறான விண்ணாறு என்பதை அறியலாம். இங்கு இக்காசில் மலைகள் திரிக்கப் பெற்றிருப்பதைக் காணும் போது அது சேந்தனும் அழிசியும் செய்த ஒரு மகத்தான சாதனையின் வெளிப்பாடே என்பதை உணரலாம்.

ஆர்க்காட்டுக் கூற்றம் வடகரையில் காவிரி மற்றும் குடமுருட்டி ஆறுகளாலும் தென்புறம் வெண்ணாற்றாலும் அணி செய்யப் பெற்று விளங்கியபோதுகூட இருபுறத்து நதிகளிலிருந்து இக்கூற்றத்திற்கு இயல்பாக ஆற்று நீரை பாசனத்திற்குப் பயன்படுத்த இயலாத நிலை இருந்துள்ளது. இதற்கான காரணத்தை நோக்கும் போது இரு பக்கத்து ஆறுகளுமே மிக ஆழமான பள்ளக்காலில் பாய இக்கூற்றம் மேட்டு நிலப்பகுதியாகவே விளங்கு கின்றது. ஆனால் பரணரும் பெருந்தேவனாரும் காவிரி நீரால் வளம் பெற்ற வயல்கள் சூழ்ந்த செழுமை நிலமாகவே ஆர்க்காட்டுக் கூற்றத்தைச் சங்கப் பாடல் களில் கூறியுள்ளனர். இதற்கான காரணத்தை ஆராய முற்படுவதும் காசின் குறியீட்டிற்கு விளக்கமளிப்பதும் இன்றியமையாத ஒன்றாகும். மேட்டு நிலமாகத் திகழும் ஆர்க்காட்டுக் கூற்றத்திற்கு கச்சமங்கலம் (திருப்பியூர்) எனும் ஊரிலிருந்து பிரியும் ஒரு கால்வாயே நீர்ப்பாசனம் அளிக்கின்றது. இக்கால்வாயின் தலைப்புப் பகுதியையும் அங்கு ஓடும் வெண்ணாற்றின் அமைப்பையும் ஆழ்ந்து நோக்குவோமாயின் அவை இயற்கையாக அமைந்ததாகத் திகழாமல் மனிதனின் மாமுயற்சியால் தோற்றுவிக்கப் பெற்றவையே என்பது நன்கு விளங்கும். அப்பகுதியில் சிறு, சிறு குன்றுகளாக மலைத்தொடர்கள் இருந்து அவை திரிக்கப்பெற்று வெண்ணாற்றில் வழித்தடம் தோற்று விக்கப்பெற்றுள்ளதையும் மலை திரித்த தலைப்பீடத்தில் ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்று ஏற்படுத்தப் பெற்றிருப்பதையும் காண இயலுகின்றது. அத்தடுப் பணையில் தொடங்கி மூன்று கி.மீட்டர் தொலைவு வரை வெண்ணாறு மலைதிரித்த தடத்திலேயே ஓடுகின்றது. அப்பகுதி முழுவதும் மனித முயற்சியால் அகழ்ந்தெடுத்த பகுதி என்பது நன்கு புலனாகும்.

கச்சமங்கலம் கற்சிறையும், மதகுகளும்

தஞ்சையிலிருந்து பூதலூர், விண்ணமங்கலம், ஒரத்தூர் வழியே கல்லணை செல்லும் சாலையில் வெண்ணாற்றின் வடகரையில் அமைந்துள்ள ஊரே கச்சமங்கலம் எனும் ஊராகும். இவ்வூருக்கு திருப்பியூர் என்ற பெயரும் உண்டு. இங்கு கல்லணையிலிருந்து பிரிந்துவரும் வெண்ணாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கப்பெற்றுள்ளது. இத்தடுப்பணையினை ஒட்டி ஆற்றின் இரு கரைகளிலும் (வடகரை, தென்கரை) இரண்டு மதகுகள் அமைக்கப்பெற்றுள்ளன. வடகரையில் அடுத்தடுத்து சற்று இடைவெளியோடு இரண்டு மதகு அமைப்புகள் உள்ளன. இவற்றை ஒரு வளைவுக்கால்வாய் இணைக்கின்றது. அவ்வளைவுக் கால்வாயின் மையத்தி லிருந்து பிள்ளை வாய்க்கால் என்ற ஒரு நீண்ட கால்வாய் பிரிந்து விளைநிலங்களுக்குப் பாசனம் அளிக்கின்றது. இவ்வமைப்பிற்கு வாய்த்தலை அல்லது தலைவாய் என்று பெயர். இத்தகு அமைப்பால் வாய்க்கால் ஏற்கக்கூடிய கொள்ளளவு உள்ள நீர் வாய்க்காலில் செல்வதோடு மிகுதிநீர் மற்றொரு மதகு வழியே மீண்டும் ஆற்றிற்குள் வந்துவிடும்.

கற்சிறையாக (கல்லணை) அமைந்துள்ள இத்தடுப் பணையின் கட்டுமான அமைப்பினை ஆராய வெண்ணாற்றில் நீர்வரத்து இல்லாத கோடைக் காலத்தினை தேர்வு செய்து ஆராயப்பெற்றது. அப்போது இக்கற்சிறை அமைப்பு இயற்கையான சிறு குன்றுகள் உள்ள அத்தடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட உயரத்திற்கு மேலாக உள்ள கற்பகுதிகள் அகற்றப்பெற்று கிடைமட்ட நிலையில் அணை உருவாகச் செவ்வக வடிவில் அமைந்த பெரிய, பெரிய கருங்கற் பாறைகளை அவ்விடத்தில் இட்டு ஒரு தடுப்பணை உருவாக்கப்பட்டுள்ளதை அறிய முடிந்தது. ஆற்றின் குறுக்காக இயற்கையாக அமைந்த குன்றுப் பகுதிகளாலும்,

மனித முயற்சியால் அங்கு இடப்பெற்ற கருங்கற்பாறைகளாலும் அமைந்த இந்த கற்சிறையாம் கல்லணைக்கு மேற்குப்பகுதி மணல் நிறைந்த ஆற்றுப் பகுதியாக உள்ளது. மணல் நிறைந்த ஆற்றின் இத்தரை மட்டப் பகுதியில் இருந்து ஏறத்தாழ பத்து அடி ஆழத்திற்குக் கீழாக அமைந்துள்ளதே இந்த அணைக்குக் கிழக்குத் திசையில் உள்ள ஆற்றின் தரை மட்டம் ஆகும். இங்கிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவு வரை வெண்ணாறு பாறைப் பகுதியிலேயே பயணம் செய்கின்றது. இந்த 3 கி.மீ. தூரம் வரை ஆற்றில் மணலே இல்லாமல் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும். அதனை யடுத்து இவ்வெண்ணாறு கடலில் கலக்கும் இடம் வரை மணற்போக்கிலேயே ஓடுகின்றது.

தஞ்சை மாவட்டத்தில் கற்பாறையான நிலப்பகுதியே இல்லை எனப் பொதுவாகக் கூறுவர். ஆனால் இது தவாறாகும். கச்சமங்கலத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ. தொலைவு வரை வெண்ணாறு ஓடும்பகுதி தொடர்ந்து கற்பாறை பூமியாக எவ்வாறு திகழ்கின்றதோ, அதே போன்று கச்சமங்கலத்திலிருந்து தெற்காக திருச்சி மாவட்டத்திலுள்ள திருஎறும்பியூர் (திருவெறும்பூர்) மலைக்குன்றம் வரை பூமிக்கு அடியில் பாறை அமைப்புகள் இருப்பது இக்கள ஆய்வில் அறியப் பெற்றது. எனவே ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு காவிரியிலிருந்து பிரியும் வெண்ணாற்றின் போக்கை இப்பாறைப் பகுதிக்குத் திருப்பி, அங்குள்ள பாறைகளை கிடைமட்டமாகச் செய்ததோடு அங்கு பெரும் கருங்கற்களையும் இட்டு இத்தடுப்பணையை உருவாக்கி உள்ளனர் என்பது அங்கு சென்று நேரில் காணும்பேது தெற்றென விளங்கும். இயற்கையான பாறைகளுக்கு ஊடே ஒழுங்குப்படுத்தப் பெற்ற பெரிய பெரிய கருங்கற்களை வரிசையாக அடுக்கி இக்கற்சிறை அமைக்கப்பெற்றுள்ளது. ஒரு கல்லையும் மறு கல்லையும்

இணைக்க இரும்புச் சட்டங்களைப் பயன்படுத்தி யுள்ளனர். அடுத்தடுத்த கற்களில் நீண்ட துளை அமைத்து அதில் ‘ப’ வடிவில் அமைந்த இரும்புச் சட்டத்தை இணைத்துக் கோர்வைப் படுத்தியுள்ளனர். மேலும், கற்களை இணைக்கச் சுண்ணாம்புக் காறையையும் பயன்படுத்தியுள்ளனர். இங்கு பயன்படுத்தப் பெற்றுள்ள சுண்ணாம்புக் காறை, கரும்புச்சாறு அல்லது வெல்லம், கடுக்காய், தான்றிக்காய், ஆமலகம் எனும் நெல்லிக்காய், உளுந்து ஆகியவை சேர்க்கப்பெற்ற பண்டைய கட்டுமானச் சாந்து அமைப்பாலேயே அமைக்கப் பட்டுள்ளது என்பதை இச்கற்சிறையின் கட்டுமானத் திறம் கொண்டு அறியலாம்.

தொன்மையான இக்கல்லணையினை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சுண்ணாம்புக்காறை கொண்டே புதுப்பித்துள்ளனர். நற்றிணை, குறுந்தொகை போன்ற நூல்களில் விவரிக்கப் பெற்றுள்ள ஆர்க்காட்டுக் கூற்றத்தின் வளமை கச்சமங்கலத்திலுள்ள இக்கல்லணையால் தான் என்பது உறுதி. இக்கல்லணையில் நீர் தேங்கி வடகரை மதகின் வழியே நீர்பாயும் கால்வாய் வசதி அமைக்கப் பெறாதிருந்தால் ஆர்காட்டுக் கூற்றம் நிச்சயம் பாலை நிலமாகவே இருந்திருக்கும். அதுபோலவே, இக்கல்லணை யிலிருந்து தெற்குப் பகுதி மதகு வழியாக நீர் பாயவில்லை என்றால் தஞ்சாவூர்க் கூற்றத்தின் ஒரு பகுதியும் பாலை நிலமாகவே இருந்திருக்கும். இவ்விரு நிலப்பகுதிகளும் வளம் கொழிக்கும் மருத நிலப்பரப்பாக மாறி இருப்பதன் காரணம் சங்க காலத்தில் அமைக்கப் பெற்ற இக்கல்லணையின் அமைப்பே ஆகும்.

இவ்வணைப் பகுதியின் தரைமட்டத்திலுள்ள இயற்கைப் பாறை கருப்பு வண்ண கருங்கல்லால் அமையப்பெற்றதாகும். இங்கு அணைகட்ட பயன்

படுத்தப்பெற்றுள்ள கற்களும், இதன் அருகில் அமைந்து இருந்த மலைப்பாறைகளிலிருந்து எடுக்கப் பெற்றவை யாகத்தான் இருத்தல் வேண்டும். இவ்வணையை அமைத்து வெண்ணாற்றின் போக்கைத் திருப்பி, அதனால் காவிரி நீரை இங்கு தேக்கி தஞ்சாவூர்க் கூற்றத்தையும், ஆர்காட்டுக் கூற்றத்தையும் வளப்படுத்தி உள்ளனர். இது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மிக நேர்த்தியான சாதனை என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இத்தடுப் பணையின் பக்கவாட்டில் அமைந்துள்ள மதகுகள் ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு மீட்டுருவாக்கம் செய்யப் பெற்றவை என்பதை அங்குள்ள விசுவநாத நாயக்கர் கல்வெட்டு உறுதி செய்கின்றது. அதனைச் சாதித்தவர் பாதிரக்குடியைச் சார்ந்த ஒரு தமிழரே என்பதையும் அறிய முடிகின்றது.

இங்கிருந்து மேற்காக 10 கி.மீ. தொலைவில் காவிரியிலிருந்து, வெண்ணாறு பிரியுமிடத்திலுள்ள கல்லணையை, கச்சமங்கலத்து கல்லணையோடு ஒப்பிட்டு நோக்கும்போது அங்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எத்தகு கட்டுமான அமைப்பினையும் காண இயலவில்லை. ஆனால் கச்சமங்கலத்திலோ பழமை அமைப்பு மாறுபாடின்றி இருப்பது குறிப்பிடத் தக்கதாகும். புறநானூறு, தொல்காப்பியம் போன்ற ஈராயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட தமிழ் நூல்கள் குறிப்பிடும் கற்சிறையை வெண்ணாற்றின் குறுக்கே கச்சமங்கலத்தில் மட்டுமே காணலாம்.

சோழநாட்டில் நேரிமலை இருந்த இடம்

தமிழ் இலக்கியங்கள் சுட்டிக்காட்டும் நேரிமலை பற்றி குறிப்பிடும் தமிழறிஞர்களும், ஆய்வாளர்களும் சோழநாட்டில் இம்மலை இருந்ததாக பொதுவில் குறிப்பிட்டுள்ளனர். அம்மலை சோழநாட்டில் எப்பகுதியில் இருந்தது என்று இதுவரை தெரியவில்லை.

இம்மலை அமைந்துள்ள இடம் பற்றி இலக்கியங்கள் துணையுடன் கள ஆய்வு மேற்கொண்டு அந்த ஆய்வின் மூலம் தஞ்சை மாவட்டம் பூதலூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளி செல்லும் சாலையில், ஒரத்தூர், கச்சமங்கலம், மாறனேரி முதலிய ஊர்களை உள்ளடக்கிய பகுதிகளே நேரிமலை இருந்த இடம் என்பது தெரிய வருகிறது.

முற்கால சோழ மன்னர்களின் தலைநகரமாக திகழ்ந்தது உறையூர். சோழர்களுக்கு முன்னர் இப்பகுதி சேரர்களின் ஆளுகைக்குட்பட்டு விளங்கியது. உறையூரிலிருந்து நேர் கிழக்காக கச்சமங்கலம், மாறனேரி, ஒரத்தூர் முதலிய ஊர்களை உள்ளடக்கிய பூதலூர் வரை சேரர் ஆட்சிப் பகுதியாக இருந்துள்ளதை சங்க இலக்கியங்கள் மூலமாக அறிய முடிகிறது.

உ.வே. சாமிநாதையர், உறையூரின் நேர் கிழக்காக நேரிமலை திகழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அதுபோல தஞ்சையை ஆட்சி செய்த இரண்டாம் சரபோஜி மன்னரைப் பற்றி கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய சரபேந்திர பூபால குறவஞ்சி எனும் நூலில் நேரிமலை தஞ்சையிலிருந்து மேற்கே அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இப்பகுதியில் வெண்ணாறு ஈராயிரம் ஆண்டுகளாக ஓடி வளப்படுத்திக்கொண்டிருக்கிறது. இந்த ஆற்றில் படகுகளில் ஏற்றப்பட்டு எள்ளுப்பொதிகள் கொண்டு செல்லப்பெற்றதை வெண்ணுக்கரை எள்ளுப்பாறு என்று தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியார் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வெண்ணாறு விண்ணன் எனும் சோழர் படைத்தலைவனால் வெட்டப்பட்டதாக சோழ மண்டல

சதக பாடலால் அறியமுடிகிறது. இதனாலேயே விண்ணாறு என்ற பெயரிலும் இந்த ஆறு அழைக்கப்பட்டு வந்தது.

இத்தகு சிறப்பு வாய்ந்த வெண்ணாற்றில் கச்சமங்கலம் எனும் ஊரில் இயற்கையாக அமைந்த மலையின் பாறை வெட்டப்பெற்று தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து கிட்டத்தட்ட 3 மைல் தூரத்திற்கு பாறைகள் வெட்டப்பெற்ற வழியிலேயே வெண்ணாறு ஓடிக்கொண்டிருக்கிறது. ஆற்றின் போக்கில் அமைந்த ஒரத்தூர் வரை இப்பாறைகளைக் காணலாம். இதிலிருந்து முற்கால சோழ மன்னர்கள் காலத்தில் நேரிமலை பிளக்கப்பட்டு வெண்ணாற்றில் வழி ஏற்படுத்தப்பெற்றுள்ளது. இதைப் பார்த்துதான் ஆங்கிலேயர்கள் கால ஆட்சியில் கல்லணைக் கால்வாய் பூதலூரின் மேற்கே தொடங்கி தஞ்சை ரெட்டிப்பாளையம் பகுதி வரை 23 கி.மீ. தொலைவிற்கு உள்ள பாறைகள் நவீன இயந்திரங்கள் கொண்டு பிளக்கப்பட்டு நீர்வழி உண்டாக்கப்பட்டுள்ளதை ஒப்பு நோக்க முடிகின்றது.

நேரிமலை தற்போது வெண்ணாற்றின் போக்கில் கச்சமங்கலம், மாறனேரி, ஒரத்தூர் உள்ளிட்ட ஊர்களில்ஒரு காலத்தில் அமைந்திருந்த மலை ஆகும். வெண்ணாறு ஓடிக்கொண்டிருக்கும் அம்மலையின் தரைமட்ட பகுதியை மட்டுமே இன்று காணமுடிகின்றது.

தொல்காப்பியம் புறத்திணையியல் 8 ஆம் சூத்திரம்,

வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்

என்று கூறும் கூற்றையும்,

வருபுனல் கற்சிறை கடுப்ப இடைஅறுத்து
ஒன்னார் ஓட்டிய செருப் புகழ் மறவர்

எனும் மதுரைக் காஞ்சி அடிகளையும் வைத்து நோக்கும் போது கல்லால் நீரை அடைத்துச் சிறைப்படுத்துகின்ற அமைப்பு முறை சங்க காலத்தில் இருந்ததை அறிகிறோம். காவிரியில் இருந்து ஒரு கிளையைப் பிரித்து வழித்தடத்திலிருந்த மலைப்பகுதிகளை நீக்கி ஒரு ஆற்றைத் தோற்றுவித்து சோழ நாட்டை வளம் பெறச் செய்ததோடு ஆற்காட்டுக் கூற்றம் நீர்ப்பாசனம் பெற வேண்டி ஒரு கற்சிறையை அமைத்து அதன் மூலம் கால்வாய் வெட்டி வளப்படுத்தியிருக்கின்றனர். சோழர் குடி பிறந்த சேந்தனும், அழிசியும் செய்த இச்சாதனைதான் காசின் ஒரு புறம் காட்சியாகப் பொறிக்கப் பெற்றுள்ளது. கச்ச மங்கலத்தில் திகழும் வெண்ணாற்றின் கற்சிறையாம் தடுப்பணைப் பகுதியில் ஆற்றின் இரு கரைகளிலும் மதகு அமைத்து, இருகரை மேட்டு நிலங்களையும் நீரால் வளப்படுத்தியிருக்கின்றனர். இத்தடுப்பணைக்கு வடமேற்கில் திகழும் கல்லணைப் பகுதியில் காவிரியின் வடபுறம் மதகு அமைத்து, வடகரையில் பள்ளக்காலாக விளங்கும் மணற்போக்கி ஆற்றின் மூலம் பெருவெள்ளத்தை கொள்ளிடத் திற்குத் திருப்பியது கரிகாலனின் சாதனையாகும். ஆனால் அதே காவிரியின் கிளை ஆறான வெண்ணாற்று நீரை மலையினைப் பிளந்து வழி அமைத்து கற்சிறையால் தடுத்து மேட்டு நிலப்பகுதிகளுக்குப் பாசன வசதி செய்வித்த மகத்தான சாதனை சேந்தனைச் சாரும். அதனால்தான் சேந்தன் தந்தை அழிசி என்று அவன் தந்தை புகழப் பெற்றுள்ளான்.

ஆவணங்களும் அரிய சொற்களும்

ஒரு செய்திய்யை அல்லது பல செய்திகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பதிந்து வைத்துக் கொள்ளும் வழக்கம் மக்களிடையே பன்னெடுங் காலமாக இருந்து வருகின்றது. எழுத்துக்கள், எண்கள், குறியீடுகள் ஆகியவற்றை கல், செப்புத்தகடு, ஓலை, காகிதம் போன்ற வற்றில் செய்தியாக எழுதி வைக்கப்பெறுவது ஆவணம் எனப்படும்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் மூதாதையர் ஒருவர், தமக்கு அடிமை ஓலை எழுதிக்கொடுத்திருப்பதாக வழக்குக் கூறிச் சிவபெருமான் அந்த ஓலை ஆவணத்தைச் சான்றாகக் காட்டியதாகப் பெரியபுராணம் பேசுகிறது. இதனால் சட்டத்தில் சான்றாகக் காட்டக் கூடியன வாதலால் ஆவணம் இன்றியமை யாததாக உள்ளது.

ஒருவருக்கு நிலம் அல்லது வேறுமானியம் ஏதாவது வழங்கினால் மன்னர் அவ்விவரத்தைச் செப்பேடு களில் பதிந்து முத்திரையிட்டுக் கொடுப்பது வழக்கம். மன்னரின் ஆணையைக் குறிப்பெடுத்துக் கொண்டவர் ''திருவாய்க்கேள்வி'' என்றும், அதனை ஓலையில் எழுதிக்கொள்பவர் ''திருமந்திர ஓலை'' என்றும், பிழையின்றி எழுதப்பட்டுள்ளதா? என்று சரிபார்ப்பவர் ''திருமந்திர ஓலை நாயகம்'' என்றும் குறிப்பிடப்

படுகின்றனர். நிலம் தொடர்பான ஆணையாக இருந்தால் ஆவணக் களரி அலுவலர்களால் பார்க்கப்பட்டு பின்னர் ''ஆணத்தி'' என்பவரால் நிறைவேற்றி வைக்கப்பெறுகிறது.

உலகின் வெவ்வேறு நாடுகளில் ஆவணக் காப்பகங்கள் இருந்துள்ளன. இன்றும் இருக்கின்றன. தமிழகத்தில் சோழ மன்னர்கள் காலத்தில் செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் போன்றவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்காக ''ஆவணக் களரிகள்'' ஏற்படுத்தப் பெற்றன. இவை நிலம் தொடர்பான குறிப்பேடுகளை எல்லாம் பாதுகாத்தன. இதில் பல அலுவலர்கள் பணி செய்தனர். இவர்கள் ''வரிப்பொத்தகம்'' என்று அழைக்கப் பட்டனர். தலைமை அலுவலர் ''திணைக் கள நாயகம்'' எனும் பெயரில் அழைக்கப்பட்டார். ஆவணக் காப்பகத்தை கௌடில்யரின் அர்த்த சாத்திரம் ''அட்சபடலா'' என்று குறிப்பிடுகிறது. இதன் தலைமை பொறுப்பாளர் ''மகா அட்ச பாலிகா'' என்று அழைக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது.

4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்துக்கள் பொறித்த செங்கல் பாளங்கள் குவியலாக இருந்ததைத் தொல்லியல் அறிஞர்கள் கண்டறிந்தனர். அவை சிரிய நாகரீகத்தைச் சார்ந்தவையாகும். இவை அக்கால பழக்க வழக்கங்களையும் வணிக முறைகளையும், நாட்டு நடப்புகளையும் குறிப்பனவாக இருக்கலாம். எகிப்து, சுமேரியா, மொகஞ்சதாரோ போன்ற பகுதிகளில் கிடைத்த பழைய ஆவணங்கள் முந்தைய வரலாற்றை அறிவதற்கும், எழுதுவதற்கும் பெரிதும் துணை செய்கின்றன.

சொத்துக்களுக்கான உரிமைகளையும், உடைமை களையும் நிலைநாட்ட ஆவணத்தைச் சான்றாகக் காட்ட வேண்டுமெனச் சட்டம் வலியுறுத்து கின்றது. அதனால் இந்தியச் சான்றியல் சட்டத்தின் மூன்றாம் பிரிவில் ஆவணம் என்பதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. எழுதி வைக்கப் பெற்ற செய்தியும், அச்சடித்துள்ள செய்தியும், வரைபடம் மூலம் குறிக்கும் செய்தியும் ஆவணங்களே என்று அச்சட்டம் எடுத்துக்காட்டுகிறது.

மிகப் பழமையான ஆவணங்களின் வாயிலாக அன்றைய வரலாறு, கலை, இலக்கியம், மருத்துவம், புராணம், சோதிடம், கணிதம், கொடைகள் பற்றிய செய்திகளை நாம் அறிய முடிகின்றது.

ஆவணங்கள் வழி வரலாற்றை அறிவதோ டல்லாமல், புதிய புதிய சொற்களையும் அறியலாம். அவைகள் வட்டார வழக்குச் சொற்கள் என்று வழங்கப் பட்டு வருகிறது. ஒரே நிகழ்வை அல்லது பொருளைப் பல்வேறு பெயர்களில் அழைப்பதைக் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக திருமணம் நிச்சயிக்கப்படும் நிகழ்வை கோவை மாவட்டத்தில் ''உப்பு ஜவுளி'' என்பர். இரு வீட்டாரும் உப்பும் ஜவுளியும் மாற்றிக் கொள்வதன் காரணமாக இப்பெயர் வழங்குகிறது. அருப்புக்கோட்டை, விருதுநகர், சிவகாசி உள்ளிட்ட சில பகுதிகளில் ''பூ வைத்தல்'' என்று கூறும் வழக்கம் உள்ளது. செட்டிநாட்டுப் பகுதியில் ''மஞ்சள் மாற்றுதல்'' என்றும், நெல்லை மாவட்டத்தில் ''வெற்றிலை கை மாறுதல்'' என்றும் இராமநாதபுரம் பகுதியிலும், தஞ்சாவூர் பகுதியிலும் "பரிசம் போடுதல்" என்றும், சிலவகுப்பாரிடையே "உறுதி

பண்ணுதல்'' என்றும், மேலும் சில சமுதாயத்தில் ''முகூர்த்த பட்டோலை வாசித்தல்'' என்றும், ஒரே நிகழ்வு பல்வேறு பெயர்களால் வழங்கப்படுவதை நாம் அறிய முடிகின்றது.

இதே போல அவனுக்கு என்ன ''திமிர்'' என்ன ''நெஞ்சழுத்தம்'' என்னும் செயல் சார்ந்த சொல் சில பகுதிகளில் என்ன "திண்ணக்கம்" என்ற சொல்லால் வழங்கப் படுகின்றது. ''குடலேத்தம் எடுத்தல்'' என்னும், செயல் மதுரை போன்ற தென் மாவட்டப் பகுதிகளில் ''தொக்கம் எடுத்தல்" என்ற சொல்லால் வழங்கப்படுகிறது. நாஞ்சில் நாட்டுப் பகுதிகளில் ''பால் சோறு'' என்று குறிப்பிடுவது அரிசியில் வடித்த கஞ்சி சோறு என்பதையே குறிப்பிடு கிறது. தஞ்சை போன்ற பகுதிகளில் "பால் சோறு" என்றால் அரிசி சாதத்தில் பால் ஊற்றிச் சாப்பிடுவதைக் குறிக்கும். ஒரே சொல் இருவேறு பொருளைத் தருகிறது.

தமிழகம் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு மரபு சார்ந்த மன்னர்களின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்ததால் சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி, அரபு, உருது போன்ற மொழிச் சொற்களும் நம் ஆவணங்களில் கலந்து காணப்படுகின்றது. மேலும் சிறப்பாக சில சொற்கள் இதுவரை வெளிவந்துள்ள தமிழ் அகராதிகள் எதிலும் காணப்படவில்லை. எடுத்துக்காட்டாக எங்கள் நூலகச் சுவடியில் காணப்படும் "கைத்திலா" எனும் சொல்லும் "யிஸ்த்துமிறார் கணக்கு'' என்ற சொல்லையும் கூறலாம்.

இதே போல் ஓர் ஓலைச்சுவடியில் காணப்பட்ட முத்திரையில் தமிழ், தெலுங்கு, உருது, ஆங்கிலச் சொற்கள்

உள்ளன. அவை பொக்கிஷம், பொக்கிஷமு, கஜானா அமீரகா, டிரஸ்ஸரி என்பனவாகும்.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் பழைய பெயர், அதாவது கி.பி. 1918 ஆம் ஆண்டிற்கு முன் சரசுவதி பாண்டார் என்பதாகும். பாண்டாரகம் என்ற சமஸ்கிருதச் சொல்லே மருவி பாண்டார் என்று அழைக்கப்பெற்றது. கோயில்களில் இருந்த நூலகங்களும் பாண்டார் என்ற பெயரிலேயே அழைக்கப்பெற்றுள்ளது. பாண்டா, பண்டாரம் எனில் ஞானிகள், அறிவாளிகளைக் குறிக்கும் சொல் ஆகும். பண்டாரம் என்றால் அறிவாளி களைக் கொண்டுள்ள இடம். அதனாலேயே சைவ மடங்களின் தலைவர்கள் பண்டாரம் ''ஞானி'' எனும் பொருள்பட அழைக்கப் பெற்றனர். இதிலிருந்து மருவியே பண்டிதர் வந்தது போலும்.

அதே போன்று புதுக்கோட்டை காவல் துறையினைச் சார்ந்த ஒருவர் கந்தர்வக்கோட்டை பகுதி பற்றிய 1886 ஆம் ஆண்டு காகித ஆவணம் ஒன்றினைக் கொண்டுவந்து என்னிடம் அதனைக் கொடுத்து இன்றைய வழக்கில் புரியுமாறு எழுதித் தரும்படி வேண்டினர். இந்த ஆவணம் முழுவதும் படித்த பிறகும் ஓரிடத்தில் ஒரு சொல் மட்டும் படித்தறிவது மிகவும் சிரமமாக இருந்தது. நான்கைந்து நாட்களுக்குப் பிறகுதான் அச்சொல் வெங்கார ஓடை என்ற சொல் என்று கண்டறிய முடிந்தது.

இந்த ஆவணத்தில் நான்கெல்லையைக் குறிப்பிடும்பொழுது ஒரு பகுதியின் எல்லையாகக்

குறிப்பிடப்பெறும் வெங்கார ஓடை என்ற இச்சொல், தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் ஓடைப் பகுதிகளில் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சச் செல்லும் விவசாயப் பெருங்குடி மக்களின் பயன்பாட்டில் உள்ள சொல்லாகும். வயலுக்கு வெங்கார் பாய்ச்சி வந்தேன் என்று வழக்குச் சொல்லாகப் பேசப்பட்டு வருகிறது. மேலே கூறப்பட்ட வெங்கார ஓடை என்ற சொல் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சும் ஓடையின் பெயராக வழங்கப்பட்டது தெரியவருகிறது. இன்று மக்களிடையே வழங்கப்படும் வட்டார வழக்குச் சொற்கள் சங்க நூல் உரைகளிலும் காணப்படுவது தொன்றுதொட்டு ஒரு சொல் மக்களிடம் பயன்பாட்டில் இருந்து வருவதைக் காணமுடிகின்றது. இச்சொல் குறித்து சீவகசிந்தாமணியும், பரிபாடலும் சுட்டுகின்றது.

சுடுமண் மிசைமாரி சொரியச்
சூழ்ந்து சுமந்தெழுந்து
நெடுநன் னிமிராவி நாறு
நெய்தோய் தளிர்மேனி
துடிநுண் ணிடைப்பெருந்தோட் டுவர்வா
யேழை மலர்மார்பன்
கடிநன் மலர்ப்பள்ளி களிப்பக்
காமக் கடலாழ்ந்தான்.

இச் சீவகசிந்தாமணியின் பாடலுக்கான, உ.வே. சாமிநாதையரின் உரையில் சுடுமண் - ஞாயிற்றின் வெப்பத்தால் நன்கு சுடப்பட்ட மண். இதனை வெங்கார் மண் என்பது இன்றும் வழக்கில் உள்ளது. வெங்கார் மண்ணிலே ஞெரேலென மழை பொழியுங்கால் ஓர் ஆவி தோன்றி மணப்பது இயல்பு. இம்மணம் சிறந்த மகளிர் மேனியின் மணத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

காலைக் கடல்படிந்து காய்கதிரோன் போயவழி
மாலை மலைமணந்து மண்டுயின்ற கங்குலான்
வானாற்று மழைதலைஇ மரனாற்று மலர்நாற்றம்
தேனாற்று மலர்நாற்றம் செறுவெயிலுறு கால
கானாற்றுங் கார்நாற்றங் கொம்புதிர்த்த கனிநாற்றம்
தானாற்றங் கலந்துடன் றழீஇவந்து தரூஉம்.

என்று பரிபாடலில் வையை குறித்த பாடலுக்கு உரை, காலைப் பொழுதிலே கடல்நீரை முகந்து மாலைப் பொழுதின் வெய்யோன் மறையும் மலையைச் சேர்ந்து, மேகம் மழை பெய்தலால் வையை மரங்கள் தரும் மலர் நாற்றமும், தேன் தந்த மலர் நாற்றமும், செருவெயிலையும் மிக்க காற்றையும், உடையவாகிய காடுகள் தரும் வெங்கார் நாற்றமும், மரக்கோடுகள் உதிர்த்த கனிகளது நாற்றமுமாகிய இந்நாற்றங்களை உடன் கலந்து தான் கொண்டு வந்து பிறர்க்குக் கொடா நின்றது என்று வெங்கார் என்னும் சொல் வழங்கப்பெற்றுள்ளது.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் வெளியீடான, 45-வது பருவ இதழில், "செட்டிச்சியம்மாள் கதை" என்ற சுவடிப்பதிப்புக் கட்டுரை அன்றைய தமிழ்ப்புலவர் ச. திலகம் என்பவரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அதில் செட்டிச்சியம்மாள் செய்த தானதருமங்களை விவரிக்கும் போது,

நடக்கும் பெருவழியில் நல்ல தண்ணீர்ப்பந்தல் வைப்பாள்
மடங்கள் நல்ல சத்திரமு மாதானஞ் செய்து வைப்பாள்
மாதானஞ் செய்து மகிழ்ந்திருப்பாள் பெண்கொடியாள்
கோதானஞ் வஷ்த்திரமுடன் குறைவறவே தான்கொடுப்பாள்
காதவழிக்கு ரெண்டு கைத்திலாப் போட்டு வைப்பாள்
சீதமுள குளமுஞ் சிறந்த சுமை தாங்கி வைப்பாள்.

என்றவாறாகச் செல்கின்றது. இதில் வருகின்ற காதவழிக்கு ரெண்டு "கைத்திலா"ப்போட்டு வைப்பாள் என்ற அடியில் கைத்திலா என்னும் சொல்லின் பொருள் இதுவரை அறிய இயலவில்லை.

புலவர் செ. இராசு அவர்கள் பதிப்பித்து, 1991 ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட நூல் கொங்கு நாட்டு சமுதாய ஆவணங்கள் எனும் நூலாகும். இந்நூலில் பதிப்பித்துள்ள பருத்திப்பள்ளிச் செப்பேட்டில் காணப்படும் ஒரு சொல் மெரமனை என்பதாகும். சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் பருத்திப்பள்ளியை அடுத்த கூத்தாநல்லூர் கருப்ப நாயக்கர் வசம் உள்ள இச்செப்பேட்டு வரிகளில் ஒரு பெண்ணிற்கு செல்லகுல மாணிக்கி என்று பட்டம் சூட்டிப் பல்வேறு வரிசைகளும் அளித்தனர். நிலமும் கொடையாக வழங்கினர். கொன்னையாத்துச் செல்லாண்டியம்மன் சன்னதியில் மேற்படி சடங்கு நடைபெற்றது. நாட்டியமும் மெரமனையும் நடைபெற்றது என்பதாக உள்ளது. இதில் காணப்படும் மெரமனை என்ற சொல்லிற்குப் பொருள் அகராதியில் காண முடியவில்லை. இதற்கானப் பொருள் நெறிப்படுத்துதல் என்பதாக இருக்கலாம் எனக் கருத முடிகின்றது.

இதே நூலில் தருமபுரி மாவட்டம் குலாலர் சமூகத்தாரிடம் உள்ள மீனாட்சி செப்பேட்டில் "ரணபாவாடம்" எனும் சொல் காணப்படுகிறது. பிரபுடதேவ மகாராயர் காலத்தில் வேட்கோவர்களுக்குப் பொம்மை செய்யவும், மட்பாண்டங்கள் வனையவும் வரியில்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது தெரியாமல் மயிலாப்பூரிலிருந்து வரி வசூலிக்க வந்த வீரமுட்டி வேட்கோவர் சோலை செட்டி வீட்டில்

இரண்டு பணம் மனைவரியும், மூன்று வேளை விருந்தும் கேட்டான். சோலைசெட்டி மறுக்கவே வீரமுட்டி சோலைசெட்டி வீட்டில் ரணபாவாடம் போட்டான். மாடக்கல் சோலைசெட்டியின் மகள் மீனாட்சியின் சேவல் ரணபாவாடத்தைக் கடக்கவே வெட்டப்படுகிறது. சேவலை வெட்டியதற்காக ரணபாவாடமிட்டு வரிவசூலிப்பவன் மீனாட்சியிடம் கொடுக்க வேண்டிய இரண்டு பணத்தில் ஒரு பணத்தைக் கழித்துக்கொள்ளச் சொல்லுகிறான். மீனாட்சி சேவலை எழுப்பினால் வரி தந்து விருந்திட்டுப் புதுவரி தருவதாகக் கூறுகிறாள். வீரமுட்டிகளால் சேவலை எழுப்ப முடியவில்லை. மீனாட்சி சேவலை எழுப்பி வரி நீக்கம் பெற்று வீரமுட்டிகளின் பல விருதுகளைப் பெறுகின்றாள். சாலிவாகனன் ஆகிய குலாலர்கட்கும், பட்டன், புலவர், கூத்தாடி, தொண்டன் ஆகியோருக்கும் வரி இல்லை என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. இதில் கூறப்பட்ட ரணபாவாடம் என்ற சொல் நாக்கை அறுத்தல் என்பதாகக் கருத இடமுள்ளது.

திருச்சி மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோயில் செல்லும் வழியில் அமைந்துள்ளது லலிதாங்குர பல்லவ ஈஸ்வர கிருகம் என்னும் குடவரை கோயில். இக்கோயில் பல்லவ மன்னன் மகேந்திர வர்மனால் எழுப்பப் பெற்றதாகும். இக்குடைவரைக் கோயிலில் கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டில் நாராயண கவி என்பவரால் இயற்றப்பெற்ற சிராமலை அந்தாதி என்னும் அழகிய தமிழ்ப்பாடல் முழுவதும் கல்லிலே பொறிக்கப் பெற்றுள்ளது.

மற்பந்த மார்பன் மணியன் மகன் மதில் வேம்பையர் கோன்
நற்பந்த மார்தமிழ் நாராயணனஞ் சிராமலை மேற்
கற்பந்தல் நீழலில் வைத்த கலித்துறை நூறுங் கற்பார்
பொற்பந்த நீழலான் றிருப்பாதம் பொருந்துவதே.

மாடமதுரை மணலூர் மதில் வேம்பை
கோடமர் சேஞ்ஞலூர் குண்டூரிந் - நீடிய
நற்பதிக்கோ னாராயணனஞ் சிராமலை மேற்
கற்பதித்தான் சொன்ன கவி.

இப்பாடலில் மண்டபத்தைக் குறிப்பிட "கற்பந்தல்" எனும் அழகிய தமிழ்ச் சொல் பயின்று வந்துள்ளது.

இதே போன்று நார்த்தாமலை பழியிலி ஈஸ்வரம் எனும் குடைவரைக் கோயிலில் அமைந்துள்ள கல்வெட்டில் மாட்டுக் கொட்டகையின் பெயர் "ரிஷபக்கொட்டில்" (இடபக்கொட்டில்) என்று பொறிக்கப்பெற்றுள்ளது சிறப்பிற்குரியதாகும்.

சிதம்பரம், திருச்சின்னபுரம் கோயில் கல்வெட்டில் காணப்படும் ஒரு சொல் தமிழில் வழங்கப்பட்ட அற்புதமான சொல்லாக அமைந்துள்ளது. அச்சொல் "பணித்திட்டு குடங்கும் ஆன்" என்பதாகும். இதன் பொருள் இன்றைய வழக்கில் "கண்காணிப்பாளர்" என்பதைக் குறித்து நிற்கின்றது.

கருவூர்த்தேவர் திருவிசைப்பாவில்,

மணம்விரி தருதே மாம்பொழில் மொழுப்பில்
மழைதவழ் வளரிளங் கமுகந்

எனும் பாடல் அடியில் வரும்'' மொழுப்பு'' என்னும் சொல், அடர்த்தி என்னும் பொருளில் வழங்கப் படுகின்றது.

அறப்பளீசுரர் சதகத்தில் 19 ஆம் பாடலில் ''பேய்த்தேர்'' எனும் சொல் காணப்படுகின்றது. இச்சொல்லானது, கோடைக் காலங்களில் தோன்றும் கானல் நீரைக் குறித்து நிற்கின்றது. இச்சுவடி நூல் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளது. (இக்கட்டுரை ஆசிரியர் இந்நூலினைப் பதிப்பித்துள்ளார்)

இதே போன்று இந்நூலகச் சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பெற்று (இக்கட்டுரை ஆசிரியரால்) வெளிவந்துள்ள தமிழறி மடந்தை கதை எனும் நூலில் வேட்டி ''தோவத்தி'' என்ற சொல்லாலும், ''பல்லக்கு'' தண்டிகை என்ற சொல்லாலும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இதே நூலில் அரதேசி அதாவது உள்நாட்டிலேயே சுற்றுபவன், பல தேசங்களைச் சுற்றுபவர் பரதேசி ஆவார். உள்நாட்டைச் சுற்றிவருபவன் ''அரதேசி'' எனப்படுகிறான். ஏட்டைப் படித்துச் சொல்பவர்கள் ''கற்றுச் சொல்லிப் பெண்கள்'' எனப் படுகின்றனர். ''மொண்ணச்சிகள்'' என்றொரு சொல் பல இடங்களில் வருகின்றது. இச்சொல் அக்காலத்தில் அரண்மனையின் அந்தப்புரங்களில் பணி செய்து வந்த திருநங்கையரைக் குறிப்பனவாக இருக்கலாம்.

நாடார் மக்களைப்பற்றிக் குறிப்பிடும் கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள் எனும் நூலில் சோழ

மன்னன் ஆற்று உடைப்பை அடைக்க இவர்களை அழைத்தபோது ஏர்வரி சுங்கம் கொடோம், கொத்தெடுத்து மண் வெட்டோம், கொற்றவரைக் கைமுகையோம், கூடை தொடோம், வெட்டி செய்யோம் என்று கூறியதாகக் குறிப்பிட்டுள்ளது. இதில் கொற்றவரைக் ''கை முகையோம்'' என்பது மன்னவரை வணங்க மாட்டோம் என்பதாக இருக்கலாம் எனத் தெரிகின்றது.

இதே நூலினுள் ஒப்புக் கொண்டு எழுதப்பெற்ற சாசனத்திற்கு எதிராக செயல்பட்டால் "வங்குசம்" அதாவது வம்சம் அழிந்து போவார்கள் என்றும், இதற்கு ''விகாதம்'' பண்ணிக்கொடாத பேர்கள் என்பதில் விகாதம் என்ற சொல் இடையூறு அல்லது கெடுதல் செய்பவர்கள் எனும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. "விக்கினம்" என்ற சொல்லும் ஆவணங்களில் இடையூறு, தடை ஏற்படுத்துதல் எனும் பொருளிலே வழங்கப் பெறுகின்றது.

மேலும், ஆவணங்களின் இறுதியில், இதுக்கு விகாதம் பண்ணாமல் நடப்பி வய்த்த பேர்கள் புத்திரா பவுத்திரறாய் பாரம்பறியமாய் சந்திறாத்தருள்ளளவும் பாறம்பறியமாய் சாலோக சாமீபா சாருபா சாயூச்சிய பதவியுண்டாகி வாள்வார்கள்'' என்கின்றது. சந்திரன் சூரியன் உள்ளவரை என்ற சொற்றொடர் பல்வேறு இடங்களில் காணக்கூடிய ஒன்றாகும். ஆனால், இங்கு கடவுளோடு உறைதல், கடவுளை அணுகியிருக்கும் நிலை, ஆன்மா கடவுளிடம் ஒன்றும்நிலை, கடவுளைப்போல் உருவம் அடைதல் போன்ற பொருள் தரும் சாலோக சாமீபா சாரூப சாயுச்சிய என்ற வடமொழிப்பதம் காணப்படுகின்றது.

இது போன்ற ஆவணங்களில் நிலவிற்பனை குறித்து வரும் பொழுது "யிந்த நிலத்திலே மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் எப்பேரான பலனும்" என்று காணப்படுவதிலிருந்து, அந்தக் காலத்திலும் சிக்கலான பிரச்சினைக்குரியவர்கள் இருந்திருப்பர் போலும்.

சில மாதங்களுக்கு முன் ஆடுதுறையினை அடுத்த அவணியாபுரம் என்ற ஊரிலிருந்த முகமதிய நண்பர் ஒருவர் அவரின் தனிப்பட்ட ஆவணங்கள் சிலவற்றை எடுத்து வந்தார். அவை காகித ஆவணங்கள் மற்றும் ஓலையில் எழுதப் பெற்றவையாக இருந்தன. அவற்றின் காலம் சுமார் இன்றைக்கு 130 ஆண்டுகள் முன்னதாகும். அவற்றை தற்போது படித்தறிய வசதியாக எழுதித்தரும்படி கோரினார்.

அந்த ஆவணத்தில் இன்றைய ஒரு ஊரின் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளது. அப்பெயர் "மத்தியார்ச்சுனம்" என்பதாகும். மத்தியார்ச்சுனம் சப்ரிஜிஸ்டர் ஆபீஸ் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. புராண வரலாற்றில் மல்லிகார்ச்சுனம், மத்தியார்ச்சுனம், புடார்ச்சுனம் என்ற மூன்று பகுதிகள் குறிக்கப்பெறுகின்றன. அவற்றுள் ஒன்றான இன்றைய திருவிடைமருதூர் என்னும் பேரூரே மத்தியார்ச்சுனம் என்று ஆவணங்களில் அழைக்கப் பட்டுள்ளது தெரிய வருகின்றது.

இதே போல, பௌருஷம் என்ற ஒரு சொல், மிகுந்த வசதி படைத்திருந்தும் அனைவரிடமும் எளிமை யாகப் பழகக்கூடிய பண்பும், மிக உயர்ந்த பதவி வகித்த போதும் ஆணவம் சிறிதும் இன்றி திகழக்கூடியவர் களைக் குறிப்பிடும் சொல்லாக, ஆகா! அவரிடம் என்ன பௌருஷம் பாருங்கள் என்பதாக உள்ளது.

முகவாசம் என்னும் சொல் வெற்றிலையைக் குறிக்கிறது. வெற்றிலைப் பாக்கு போடுகின்ற வழக்க முடையவர் எச்சிலைத் துப்புவதற்காகப் பயன்படுத்தும் பாத்திரம் காளாஞ்சி என்ற பெயரில் எச்சில் "காளாஞ்சி" ஏந்தி என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. போர்ப்படையினைக் குறிக்கும் "தண்டு" என்ற சொல்லும், நரகத்தில் தள்ளப்படுவார்கள். இதில் நரகம் என்பதற்கு "ரௌவுரவாதி" என்ற சொல்லும் ஆவணங்களில் காணப் பெறுகின்றது.

செட்டியார்களிலே சேனைத்தலைவர் என்றொரு பிரிவு உண்டு. இவர்களின் தெய்வப்பெயராக "முப்பிடாதி" வழங்கப்படுகிறது. இப்பிரிவு மக்களிடையே தங்கள் குழந்தைகளுக்கு ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் பிள்ளையாக இருந்தாலும் சரி இன்றளவும் முப்பிடாதி என்ற பெயரினை வைத்து அழைக்கின்றனர்.

ஏதங்கள் ஆயின எல்லாம் இறங்க விடுவித்து என்னுள்ளே
பீதக ஆடைப் பிரானார் பிரம குருவாகி வந்து,
போதில் கமலவன் நெஞ்சம் புகுந்தும் என் சென்னித் திடரில்
பாத இலச்சினை வைத்தார்; பண்டு அன்று பட்டினம் காப்பே.

பெரியாழ்வார் திருமொழியில் சென்னித்திடர் என்னும் அழகான தமிழ்ச்சொல் நெற்றி எனும் பொருளில் வழங்கப் பெற்றுள்ளது.

வைணவர்களிடையே அழகான தமிழ்ச் சொற்கள் இன்றளவும் பயன்பாட்டில் உள்ளன. நாமெல்லாம் பாயசம் என்று கூறும் உணவுப் பொருளுக்கு "கன்னலமுது" என்றும், ரசம் என்பது "சாரம்" என்ற பெயரிலும் வழங்கப் படுகிறது..

"மண்டலீகர்" என்றொரு சொல்லாட்சி, ஓலை ஆவணத்தில் காணப்பெறுகின்றது. இருபது யோசனை பரப்பளவு கொண்ட பகுதியினை ஆளுகின்ற மன்னரைக் குறிக்கும் சொல்லாக இச்சொல் வழங்கப்படுகிறது. இதில் பரப்பளவு அடிப்படையில் பதவியின் பெயர் குறிப்பிடப் பெறுவது சிறப்பானதாகும்.

கல்வெட்டுடன் கூடிய கல்லினால் ஆன செக்கு ஒன்று திருவண்ணாமலை பகுதியில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 955. வாணகோப்பாடி நாட்டின் பெண்ணை வடகரையில் அமைந்துள்ள காட்டாம்பூண்டி என்ற ஊரைச் சார்ந்த சேக்கிழான் உலகளந்தான் விரட்டன் என்பவர் தானமாகக் கொடுத்த செக்கு இது. இதில் எண்ணெய் ஆட்டுபவர்கள் தேவருக்கு ஒருமுறள் அளவு கொண்ட எண்ணெய் காணிக்கையாக தரவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. இன்றைய லிட்டர் எனும் முகத்தல் அளவு போன்று முறள் என்ற பெயர் கொண்ட ஒரு வகை அளவு வாணகோப்பாடி நாட்டில் கி.பி. 955 இல் பயன்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

வையாபுரிப் பள்ளு என்னும் இலக்கியத்தில் வங்கி நாராயணன் என்ற சொல்லாட்சி காணப்படுகிறது. அப்பாடலடிகள் வருமாறு.

வலிமை செய் விசைய
கிரிவேலச் சின்னோவன்
வங்கிநா ராயண
னைக்கை கொண்டான்

இதில் வங்கி நாராயணன் என்பது ஒரு வகை நெல்லின் பெயர் ஆகும்.

தண்டிகை எனும் சொல் பல்லக்கு என்பதனைக் குறிக்கிறது.

மலைமருந்தன் என்னும் பர்வத சஞ்சீவி இயற்றிய தாது வருடத்துக் கரிப்புக் கும்மி எனும் சுவடி நூலில்,

பாரில் பயிரிடுஞ் ஜனங்கள் வந்து
பக்ஷமா யெங்களைக் கேட்டுக் கொண்டால்
வாரகம் ஸாரகம் கொடுக்கு றோமென்று
வகையாய்ச் சொல்லுறார் கேளுங்கடி

வாரகம் ஸாரகம் என்றொரு சொல் காணப்படுகிறது. மேலும் இதே நூலில் துக்குடிதோறுங் கஞ்சித் தொட்டி வைத்து என்ற சொல் காணப்படுகிறது.

அகனி என்றொரு சொல், பனை நாரில் இருந்து தயாரிக்கும் கயிறு. நம்மூரின் ''ஆக்கை'' போன்றது. ''ஆயிரம் அகனியால் கட்டிய வீட்டிற்கு யானையின் பலம்'' என்ற பழமொழியும் உண்டு.

கல்வெட்டு, செப்பேடு, ஓலை, காகித ஆவணங்கள் நம் தமிழகத்தில் எண்ணற்ற அளவில் காணக்கிடைக்கின்றன. அவைகளை எல்லாம் முறையாகப் பதிப்பித்து வெளியிட்டால் மேலும் பயன்பாட்டில் இருந்த பல எண்ணற்ற சொற்கள் தமிழ் உலகிற்கு கிடைக்கும் என்பது உறுதி.

இலக்கியத்தில் காவிரி

தற்போதைய கரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், கடலூர் மாவட்டப் பகுதிகளே பண்டுச் சோழ மண்டலத்தின் பகுதிகளாக விளங்கியவையாகும். வடவெள்ளாறு தொடங்கிக் கொள்ளிடம், காவிரி, தென் வெள்ளாறு ஆகிய பகுதிகளுக்கு உட்பட்டு இந்நிலப்பகுதி அமைந்துள்ளது. இந்நாட்டின் நீர்வளம் இவ்வாறுகளையே மையமாகக் கொண்டு திகழ்ந்தது. கொள்ளிடப் பேராறு காவிரியிலிருந்து பிரிந்து செல்லும் கிளை நதி என்பதால் இதனையும் காவிரி என்றே குறிப்பர். சோழ மண்டலத்தின் நீர் வளம் அறிய காவிரியின் சிறப்புக் கூறுகளை ஆராய்ந்தால்தான் மிகு பலன் கிட்டும். இக்காவிரியின் பெருமையை சங்க இலக்கிய நூல்களில் தொடங்கிப் பிற்கால இலக்கியங்கள் வரை ஆராயும் போது அதன் பெருமை தெற்றென விளங்கும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் பொன்னியாற்றால் தமிழகம் பெற்ற நீர் வளமும், நிலவளமும் சிறப்பாகப் பேசப்பெறுகின்றன. மேற்றிசைக் குடகிலிருந்து பிறக்கும் காவிரி எம்முடைய சோணாட்டினை வளப்படுதுகின்றது என்று ஆவூர் மூலங்கிழார் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் எடுத்துரைக்கின்றார்.

............................குடா அது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை எம்மூர் ஆங்கின் (புறம். 166::26-29)

சோழ நாட்டு ஆவூரில் பிறந்த மூலங்கிழாரின் இக்கூற்று சிந்திக்கத் தக்கதாம். இவ்வாறு குடகு மலையில் தோன்றும்

காவிரியாறு சோழர்களின் கடற்றுறை நகரமாகத் திகழ்ந்த பூம்புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தில் கடலோடு கலக்கும் காட்சியைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் தக்க உவமையுடன் குறிப்பிடு கின்றார்.

மாமலை அணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்
(ப.பாலை.95-97)

கரிய மலையைச்சேர்ந்த செக்கர்மேகம் போலவும், தாயுடைய முலையைத் தழுவிய பிள்ளை போலவும், தெளிந்த கடலில் அலைகளின் ஊடே காவிரியின் தலை கலக்கும் என்பது உருத்திரங்கண்ணனாரின் உவமைச் சிறப்பாகும். மலையில் தோன்றிக் கடலில் கலக்கும் காவிரியாறு எவ்வாறு செல்கின்றது என்பதனை "காவிரிக்கோடு தோய் மலிர்நிறைக் கழையழி நீத்தம்" என்று அகநானூற்றுப்பாடல் குறிப்பிடுவது போன்று, ஓடக்கோல் மறையுமளவு பெருவெள்ளமாகக் காவிரி ஓடியது என்பதறிகிறோம். தான் மோதும் இரு கரை களையும் தகர்த்துச் செல்லுகின்ற பேராறாக அது சங்க இலக்கியங்களில் வருணிக்கப்படுகின்றது. "வருபுனல் நெறிதரும் இடுகரை பேரியாறு" என உறையூரில் ஓடிய காவிரியின் தோற்றம் பேசப் பெற்றுள்ளது. இவ்வண்ணம் தமிழகத்தைத் தழைக்கச் செய்து கடலில் சென்று கலக்கும் வரை வற்றாப் பெருவெள்ளமாகக் காவிரியாறு சங்ககாலத்தில் ஓடியது என்பது உண்மை. எக்காலத்தும் அது பொய்த்ததில்லை என்பதை இலக்கியங்கள் சுட்டுகின்றன.

ஞாயிறு நான்கு திசைகளிலும் தோன்றினாலும், வெள்ளி மீன் தெற்கே சென்றாலும், அழகும், குளிர்ச்சியும் கொண்ட காவிரி பல கால்களாய் ஓடிக் கரும்பை விளைவிக்குமாறு அமைந்தது என்பதனைச் சோழ நாட்டுப் பெரும் புலவர் வெள்ளக்குடி நாகனார்,

இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்து கவர்பு ஊட்டத்
தோடுகொள் வேளின் தோற்றம் போல
ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும்
(புறம்.35, 7-10)

என்று புறநானூற்றுப் பாடலில் உரைக்கின்றார்.

வெள்ளியாகிய விண்மீன் வடதிசையிலிருந்து, தென்திசைக்குச் சென்றாலும், மழைத்துளியை உணவாகக் கொள்ளும் வானம்பாடி வருந்தும்படி மழை பெய்தலைத் தவிர்த்து, மேகம் பொய்த்து வற்கடம் உண்டானாலும் தான் பொய்யாமல் காலந்தோறும் வருகின்ற குடகு மலையிடத்தே தலையினை உடைய, கடலினிடத்தே செல்லுகின்ற காவிரி நீர் பரந்து கரையிலே பொன்னைக் குவிக்கும் சோழநாடு என்றும், விளைதல் தொழில் மாறாத சிறப்புடைய வயல் வெளியில் பசிய கரும்பின் கமரும் பாகை அடுகின்ற கொட்டிலில் நெருப்பின் புகை சுடுகையினாலே அழகு கெட்டு நீரை உடைத்தாகிய செய்யின்கண் நின்ற நெய்தற்பூ வாடும் நிலத்தை உடையது சோழநாட்டுக் குறும்பல்லூர் என்றும், காய்ந்த செந்நெற்கதிரைத் தின்ற வயிற்றை உடைய எருமை ஈன்ற கன்றுகள் நெடுங்கூட்டினுடைய (நெற்களஞ்சியங்களின்) நிழலிலே உறக்கத்தைக் கொள்ளும் சிறப்புடைய ஊர் குறும்பல்லூர் என்றும் குலைகளுடைய தெங்கினையும், இலைகளையுடைய வாழையினையும், காய்களையுடைய கமுகினையும், மணம் வீசுகின்ற மஞ்சளையும், தளிர் உடைய மாமரங்களையும், குலைகளுடைய பனை மரங்களையும், அடிபரந்த சேம்பினையும், முளையினை யுடைய இஞ்சியினையும் ஓயாமல் விளைவிக்கின்ற கழனி களையும் உடைய ஊரான குறும்பல்லூர் இத்தகைய வளங்களைக் காவிரியின் வற்றாத வளத்தால் பெற்றது என்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இதனை,

வசையில் புகழ் வயங்குவெண் மீன்
றிசை திரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்ப்பினுந் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்
விளைவறாக் வியன்கழனிக்
கார்க் கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின் வாடி
நீர்ச் செறுவி நீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்து
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்ச
ளினமாவின் இணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி (பட்டி.பா.1-19)

என்ற பட்டினப்பாலைப் பாடலடிகள் விவரிக்கின்றன. இதனால் சோழநாட்டு செல்வ வளத்திற்கு காவிரியின் நீர்வளமே அடிப்படையாய்த் திகழ்ந்தது என்பதை அறிய முடிகின்றது.

பரிசில் பெறக் கருதிய ஒரு பொருநனைப் பரிசில் பெற்ற ஒரு பொருநன் இளஞ்சேட்சென்னி என்ற சங்க காலச் சோழ மன்னனின் மகனாகிய கரிகால் பெருவளத்தானிடத்தே ஆற்றுப்படுத்தியதாக முடத்தாமக் கண்ணியார் எனும் புலவரால் பாடப்பெற்ற பொருநராற்றுப்படையில் காவிரியின் சிறப்பும், சோழ நாட்டின் வளமும் விரிவாகப் பேசப் பெற்றுள்ளன. பெரிய வற்கடம் உண்டான காலத்தும் நரைக்கொடியும், நரந்தப்

புல்லும், அகிலும், சந்தனமுமாகிய சுமையை துறைதோறும், நீர்த்தோறும் தள்ளிக்கொண்டு நுரையுடனும், ஆரவாரத்துடனும் செல்லும் காவிரி நீர் சோழநாட்டுக் குளங்களிலும், கோட்டங்களிலும் புகுந்து நிறைந்திருந்தது என்றும், மகளிர் அங்கு நீரைக் குடைந்து ஆடுவர் என்றும், சோழநாட்டு வயல்களிலே விளைந்த நெற்கதிர்களை வளைந்த அரிவாளின் வாயால் அறுக்க நெற்குவியல்கள் எங்கும் நிறைந்து காணப்பட்டது எனவும், ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளையுமென்றும் அத்தகைய வளத்திற்குக் காரணமாக அமைந்த காவிரி நாட்டைப் புரக்கும் நாடுகிழவோன் கரிகால் பெருவளத்தான் எனவும் கூறுகின்றார். இதனைப் பொருநராற்றுப்படையின்,

பெருவற னாகிய பண்பில் காலையு
நறையு நரந்தமு மகிலு மாரமுந்
துறை துறை தோறும் பொறையுயிர்த தொழுகி
நுரைத்தலைக் குரைப் புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட்டாகக்
காவிரிபுரக்கு நாடுகிழ வோனே (237-248)

என்ற பாடலடிகள் வாயிலாக அறிய முடிகின்றது.

பொன்னி நதியின் வளத்தால் சோழநாட்டுக் கழனிகளில் வேலி தோறும் ஆயிரங்கலம் நெல் விளைந்த திறத்தைப் புறநானூறு, சோழநாட்டுப் பொறையாற்றுக் கிழான்பெரியன் என்பான் பொருநற்கும், பாணற்கும் பேராதரவு தந்தான். ஒருகால் தன் நாட்டில் வற்கடம்

உண்டாகவே கல்லாடனார் இவனைக் கண்டார். அவன் இவர்க்கும், இவருடைய உறவினருக்கும் உணவும், உடையும் அளித்தான். அவற்றைப் பெற்று மகிழ்ந்த கல்லாடனார் பின்வரும் பாடல் வாயிலாக அவனது வயல்களில் 'வேலி ஆயிரமாக' என்று வாழ்த்திப் பாடினார்.

தண்டுளி பலபொழிந் தெழிலி யிசைக்கும்
விண்டு வனைய விண்டோய் பிறங்கல்
முகடுறவுயர்ந்த நெல்லின் மகிழ்வரப்
பகடுதரு பெருவளம் வாழ்த்திப் பெற்ற

திருந்தா மூரி பரந்துபடக் கெண்டி
அரிய லார்கைய ருண்டினி துவக்கும்
வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
ஈங்குவந் திறுத்தவெ னிரும்பே ரொக்கல்
தீர்கை விடுக்கும் பண்பில் முதுகுடி

நனந்தலை மூதூர் வினவலின்
முன்னும் வந்தோன் மருங்கில னின்னும்
அளிய னாகலிற் பொருந னிவனென
நின்னுணர்ந் தறியுந ரென்னுணர்ந்து கூறக்
காண்கு வந்திசிற் பெரும மாண்தக

இருநீர்ப் பெருங்கழி நுழைமீ னருந்தும்
ததைந்த தூவியம் புதாஅஞ் சேக்கும்
துதைந்த புன்னைச் செழுநகர் வரைப்பின்
நெஞ்சமர் காத னின்வெய் யோளொ
டின்றுயில் பெறுகதில் நீயே வளஞ்சால்

துளிபத னறிந்து பொழிய
வேலி யாயிரம் விளைகநின் வயலே (புறம்.391:1-21)

வேலிதோறும் ஆயிரம் கலம் நெல்விளையும் மாட்சிமைத் திறத்தைப் பிற்கால இலக்கியமான சீர்காழித்

தலபுராணமும் உறுதி செய்கின்றது. அப்புராணத்துள் திகழும் நகரப் படலத்தின் ஒன்பதாம் பாடல்,

வாலி தாமுளை யொருபுறம் வளர்செறு வொருசார்
பாலி னெல்லொரு சாரொரு சாரரிப் பறம்பு
சாலி வேலையோர் சாரிவை தலைமயக் குறலால்
வேலி யாயிரம் விளையுளென் பதுமிதன் மேற்றே
(சீர்காழித்.திருநகரப்.9)

இப்பாடல்களின் வாயிலாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தும் பின்பு சங்கம் மருவிய காலத்தும் சோழநாட்டுக் கழனிகளில் ஒரு வேலிக்கு ஆயிரம் கலம் நெல் விளைந்தது என்பது உறுதியாகின்றது. மேலும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்களில் இராஜராஜன் அக்கோயிலுக்குக் கொடையாக அளித்த ஊர்களின் நிலப்பரப்பும், அங்கு விளையும் நெல்லின் அளவும் குறிக்கப் பெற்றுள்ளன. அக்கல்வெட்டுக்களை ஆழ்ந்து நோக்கும் பொழுது சோழர் காலத்திலும் காவிரிக்கரைக் கழனிகளில் மிகுந்த வருவாய் அளிக்கும் நெற்கதிர்கள் விளைந்தன என்பது தெளிவாகின்றது.

காவிரி வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்படும் பொருள்கள் குறித்தும், நீர்ப் பெருக்கத்தின் வலிவும், அப்புனலால் வளம் பெறும் வயல்கள் குறித்தும் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.

காவிரியாற்றின் துறைகளுள் ஒன்றாகிய கழாஅர் எனுமிடத்தில் ஆண்டுதோறும் புதுப்புனல் விழா நிகழும் அப்போது காவிரியில் நீராடிய ஆட்டனத்தி என்ற சேர இளவரசனைக் காவிரி அடித்துச் சென்றது. இதனைக் கண்டு அவன் மனைவியும் கரிகாற் சோழனின் மகளுமாகிய ஆதிமந்தி ஓவெனக் கதறினாள். அன்று அவ்வளவு ஈர்ப்பு மிக்க வெள்ளம் காவிரியில் ஓடியது.

கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டு எழில்பொழிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்
ஆட்டன் அத்தி நலன்நயந்து உரைஇத்
தாழ்இருங் கதுப்பின் காவிரி வவ்வலின்
மாதிரம் துழைஇ மதிமருண்டு அலந்த
ஆதிமந்தி காதலற் காட்டில் (அகம்.222:5-10)

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் சோழன், காவிரி நாடன் என்று குறிப்பிடப் பெறுகின்றான். சிலப்பதிகாரக் காப்பிய நாயகன் கோவலனும் அவன் காதலி மாதவியும் யாழிசைத்துக் காவிரியையும் கடலையும் நோக்கிப் பாடும் பாடல்கள் இந்திய இலக்கியத்தில் சிறப்புடைய பகுதியாகும். ‘காவிரிப் பெண்ணே உன்னுடைய சோழவேந்தன் கங்கை வரை படையெடுத்துச் சென்றாலும் அவனோடு நீ மனப்பிணக்குக் கொள்ளவில்லை. இதுதான் மங்கையர் பெருங்கற்பு. உழவர்களின் ஆரவாரமும் மதகுகளில் வெள்ளம் மிகுந்து வரும் பேரொலியும், விழாச் சிறக்கும் ஓசைகளும் பெருக நடக்கும் காவிரியே வாழ்க. வண்டுகள் ஒலிக்க, பூக்களை ஆடையாகப் போர்த்துக்கொண்டு கரிய கயல் மீனாகிய கண்ணால் பார்த்துக்கொண்டே மென்மையாய் நடக்கின்றாய் நீ, சோழநாட்டை மகவாய் வளர்க்கும் தாய் நீ. ஊழிக் காலத்திற்கும் நீ வழங்கும் பேருதவியை நிறுத்த மாட்டாய்’ என்ற கருத்து படச் செய்யுள் அமைவதனைக் காணலாம். இதனை இளங்கோவடிகள்,

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்

மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி

மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோ லதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி

கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி

உழவ ரோதை மதகோதை
உடைநீ ரோதை தன்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி

விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்த வெல்லாம் வாய்க்காவா
மழவ ரோதை வளவன்தன்
வளனே வாழி காவேரி

(சிலம்பு.கானல்வரி. 852-863)

என்று பாடியுள்ளார்.

இயற்கையின் ஆற்றல்களில் மாறுபாடு ஏற்பட்டாலும் கோள் நிலை திரிந்தாலும் காவிரியின் பயன் மாறாது இருந்தது என்பதனை இளங்கோவடிகள் நாடுகாண்காதையில்,

கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்வொரு நிவப்பிற் கடுங்குர லேற் றொடும்
சூல்முதிர் கொண்மூப் பெயில்வளஞ் சுரப்பக்
குடமலை பிறந்த கொழும்பல் தாரமொடு
கடல்வளன் எதிரக் கயவாய் நெரிக்கும்

காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓவிறந் தொலிக்கும் ......(சிலம்பு.நா.கா.1367-1374)

என்ற பாடல் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

ஆழ்வார்களின் பாசுரங்களிலும், நாயன்மார்களின் திருப்பதிகங்களிலும் (தேவாரம்) காவிரியின் நலன் பரக்கப் பேசப்பெறுகின்றது.

கங்கையிற் புனித மாய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்கு நீர் பரந்து பாயும்
பூம்பொழி லரங்கத் தன்னுள்
எங்கள்மா லிறைவ னீசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையேன் ஏழை யேனே!
(நா.தி.பி.தொ.பொடியாழ்வார்-23)

என்ற பாடலில் கங்கையைவிடக் காவிரி புகழ்பெற்றது என்று தொண்டரடிப்பொடியாழ்வார் கூறுகின்றார். காவிரிக்கரைப் பிரபந்தத் தலங்களைப் போற்றும் ஆழ்வார்கள் அத்தலத்தின் சிறப்பாகக் காவிரியின் பெருமையைப் பேசுகின்றனர்.

சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளைப் பாடிய திருஞானசம்பந்தர் எண்ணற்ற பாடல்களில் காவிரியின் பெருமையைப் பேசுகின்றார். ஞானக்குழந்தையான அவர் திருநாகேச்சுரத்துப் பதிகத்தில்,

தழை கொள் சந்தும் அகிலும் மயில்பீலியும் சாதியின்
பழமும் உந்திப் புனல் பாய் பழங்காவிரித் தென்கரை
நழுவு இல் வானோர் தொழ நல்கு சீர்மல்கு நாகேச்சுரத்து
அழகர் பாதம் தொழுது ஏத்த வல்லார்க்கு அழகு ஆகுமே.
(திருநாகேச்சுர பதிகம் - பா. 1)

என்று பாடி காவிரியைப் பழங்காவிரி என்று சிறப்பித்துப் பேசுகின்றார். இதே பதிகத்தில் மூன்று பாடல்களில் பழங்காவிரியின் பெருமையைப் போற்றியுள்ளார். மேலும் திருவிடைமருதூர் திருக்கோயில் சென்று பதிகம் பாடும்பொழுது

பொங்காவரு காவிரிக் கோலக்கரைமேல் எம்கோன்
உறைகின்ற இடைமருது ஈதோ
ஆர்க்கும் திரைக் காவிரிக் கோலக்கரைமேல்
ஏற்கஇருந்தான்தன் இடைமருது ஈதோ
வெளியாவரு காவிரிக் கோலக்ரைமேல் எறியார்
மழுவாளன் இடைமருது ஈதோ

என்றெல்லாம் பாடியுள்ளார். இதே தலத்தில் பாடிய நாவுக்கரசர்,

பொன்னி தென்பால் ஏறுடைக் கமலம் ஓங்கும் இடை
மருது இடங்கொண்டாரே

என்று பாடியுள்ளார்.

திருவிடைமருதூரில் பதிகம் பாடிய சுந்தரர்

இரைக்கும் காவிரி தென்கரைத் தன்மேல் இடைமருது
உறை எந்தை பிரானே

என்று போற்றியுள்ளார்.

திருக்குடமூக்கு என்னும் குடந்தையில் திருப்பதிகம் பாடும் சம்பந்தர்,

மயில் பெடை புல்கி ஆல மணல் மேல் மடஅன்னம் மல்கும்
பயில் பெடை வண்டு பண்செய் பழங்காவிரிப் பைம்பொழில் வாய்க்
குயில் பெடையொடு பாடல் உடையான் குடமூக்கு இடமா
இயலொடு வானம் ஏத்த இருந்தான் அவன் எம் இறையே

என்ற பாடலில் குடந்தை நகரில் ஓடும் காவிரியைப் பழங்காவிரி என்றே குறிப்பிட்டுள்ளார்.

திருவிடைமருதூர் கோயிலில் உள்ள பராந்தக சோழனின் 38 ஆம் ஆண்டு கல்வெட்டில் அவ்வூரினை ஊடறுத்துச் செல்லும் காவிரியாற்றினை பழங்காவிரி என்ற பெயரால் சுட்டுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காவிரியின் கிளை நதியான வெட்டாறு என்று தற்காலத்தில் அழைக்கப்பெறும் நதியில் வெள்ளம் வந்தபோது தன் பதிகத்தாலேயே ஓடம் செலுத்தி அக்கரை சேர்ந்த ஞானசம்பந்தர் வரலாற்றைக் கூறும் சேக்கிழார் பெருமான் அந்த ஆற்றின் பெயரை முள்ளியாறு என்று குறித்துள்ளார்.

திருஞானசம்பந்தர் காவிரியினைப் பழங்காவிரி என்று கூறுவது போன்று பல இடங்களில் பொன்னி நதி என்றும், காவிரி என்றும் குறிப்பிட்டுப் பாடுகின்றார். அவருடைய பாடல்களைத் தொகுத்து நோக்கும் போது காவிரியின் சிறப்பைப் பலவாறு உரைக்கின்றார். ‘அழகிய நதி; நீண்ட நதி; ஒலிக்கும் வெள்ளத்தது, கங்கையை நிகர்த்தது, கடல் போன்றது, அழகிய கரையது, கரைகளில் மலர்ப்பொழில் நிறைந்தது, கொங்கு நாட்டில் பொலிவது, தைப்பூசநாள் முழுக்கிற்கு விசேடமானது, தன்னிற் படிவோரது இடர் தொலைப்பது, என்றும் வற்றாத நீர் உள்ளது, பெருமை வாய்ந்தது, மலையினின்று இழிவது, செந்நெல் விளைய வளப்பம் தருவது, அகில் இஞ்சி, இலவம், இலவங்கம், வெற்றிலை, ஈஞ்சு, ஏலம், கனி வகைகள், கழை, காட்டுப்பண்டங்கள், குருத்து, சந்தனம், சாதிப்பழம், சுரபுன்னை, செண்பகம், செருத்தி, ஞாழல், திமில், தேக்கு, தேன், பூகக்குலை, பொன், மஞ்சள், மணிகள், மயிற்பீலிகள், மருது, மலர்கள், மலைப் பண்டங்கள், மிளகு, முத்துக்கள், யானைமருப்பு, மல்லிகை, மாதவி, முல்லை, வைரத்திரள், விளவுதேன், வேங்கை இவைகளை உந்தி வரும் வெள்ளத்து’ என்று கூறியுள்ளார்.

காவிரியின் தென்கரைத் தலங்களுள் 53 ஆவது தலமாகக் குறிப்பிடப் பெறுவது சோழநாட்டு கோட்டாறு என்பதாகும். அம்பகரத்தூருக்கு அருகிலுள்ள இத்தலம் காவிரியின் கிளைநதியான வாஞ்சி ஆற்றின் கரையில் உள்ளது. இது தற்போது வாஞ்சியாறு என அழைக்கப் பெறுகிறது. இந்த ஆறு பண்டு கோட்டாறு என்று அழைக்கப்பெற்றது. அதனால் இத்தலமே கோட்டாறு என்ற பெயரினைப் பெற்றது. திருஞானசம்பந்தர் இத்தலத்தில் பாடிய இரு பதிகங்களில் இவ்வூரினையும், ஆற்றினையும் கோட்டாறு என்றே குறிப்பிட்டுள்ளார். இத்தலத்திற்குரிய தீர்த்தமாகக் கோட்டாறு பேசப் பெறுகின்றது. காவிரியின் கிளை நதியாகிய வாஞ்சி ஆற்றின் பழம்பெயர் கோட்டாறு என்பதனைச் சம்பந்தர் தேவாரத்தின் வாயிலாக மட்டுமே அறிய இயலுகிறது.

இது போன்றே, காவிரியின் மற்றொரு கிளை நதியினைத் திருஞான சம்பந்தர் தம் தேவாரத்தின் வாயிலாக நமக்குக் காட்டுகிறார். மண்ணி என்ற பெயரில் விளங்கும் இக்கிளை நதி, காவிரிக்கும், கொள்ளிடத்திற்கும் இடையில் ஓடுவதாகும். திருப்பனந்தாள், திருவாய்ப்பாடி, திருச்சேய்ஞலூர் போன்ற பல தலங்கள் மண்ணியாற்றின் கரையில் அமைந்துள்ளன. மண்ணியாறு பற்றிக் குறிப்பிடும் ஞானசம்பந்தர் அவ்வாற்றில் அகில், சந்தனம், முத்து ஆகியவை கொழிக்கும் தெண்ணீரது என்று பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் காவிரியின் பெருமைகளை உரைக்கின்றார். மலையினின்று இழியும் அருவிகளைக் கொண்டது. பல கால்களைக் (கிளை ஆறுகளை) கொண்டது. சோணாட்டிற் பரவுவது, கொய் மீன்களையும், முத்துக்களையும், மணிகளையும், பவளங்களையும், மயில் இறகுகளையும், வண்டல் மணலையும், மந்தாரம், மல்லிகை, செண்பகம் முதலிய

புது மலர்களையும், பண்டங்களையும் அடித்துக்கொண்டு வரும். வயல் களுக்கு வேண்டிய நீரைத் தரும். காவிரியின் கரையில் கொக்கு இனங்கள் பயிலும் பக்தர்கள் காவிரியில் ஆடிக் கனிந்த அன்புடன் இறைவனைப் பணிவார்கள்.

இருக்கு வேதம் ஓதிக்கொண்டு தூய காவிரியின் நன்னீர் கொண்டு இறைவனுக்கு ஆட்டுதல் வேண்டும். காவிரி நீரில் ஆடினாலும் ஈசன் ஒருவன் இல்லை என்று எண்ணி ஆடினால் ஆடின பலன் கிட்டாது என்பவை அப்பர் பாடலடிகளின் சாரமாகும்.

திரைக்கொள் நீர்க் கடுவாய்க் கரைத் தென்புத்தூர்
இருக்கும் நாதனைக் காணப்பெற்று உய்ந்தெனே

என்று பாடும் அப்பர் பூச நாளில் நீராடும் சிறப்பை,

பூசம் நீர்க் கடுவாய்க்கரைத் தென்புத்தூர்
ஈசனே என இன்பம் அது ஆயிற்றே

என்று குறிப்பிடுவதோடு அப்பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் கடுவாய் எனும் காவிரியின் கிளை நதியின் கரையில் அத்திருத்தலம் விளங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார். தற்பொழுது ஆண்டாங்கோயில் (வலங்கைமான் குடவாசல் சாலையில் உள்ளது) எனும் தலமே கடுவாய்க் கரை, தென்புத்தூர் என விளங்குவதால் தற்போது அக்கோயிலின் வடதிசையில் ஓடும் காவிரியின் கிளை ஆறான குடமுருட்டியாறே பண்டுக் 'கடுவாய்' என்ற பெயரால் அழைக்கப் பெற்றது.

திருநாவுக்கரசர் குறிப்பிடும் காவிரியாற்றின் அடுத்த கிளை ஆறு அரிசில் என்பதாகும். தற்போது குடந்தை நகரத்துக்குத் தென்பால் ஓடும் காவிரியின் கிளை ஆறான அரிசிலாறே கி.பி.ஏழாம் நூற்றாண்டில் அரிசில் என்ற பெயரால் அழைக்கப் பெற்றதை மூவர் தேவாரப் பாடல்களின் வழி அறிய முடிகின்றது. திருஞானசம்பந்தர்,

மின்னும் சடைமேல் இளவெண்திங்கள் விளங்கவே
துன்னும் கடல்நஞ்சு இருள்தோய் கண்டர் தொல்மூதூர்
அன்னம் படியும் புனல் ஆர் அரிசில் அலை கொண்டு
பொன்னும் மணியும் பொரு தென்கரைமேல் புத்தூரே

என்றும், திருநாவுக்கரசர்,

முத்து ஊரும் புனல் மொய் அரிசிற்கரைப்
புத்தூரன் அடி போற்றி என்பார் எலாம்
பொய்த்து ஊரும் புலன் ஐந்தொடு புல்கிய
மைத்து ஊரும் வினை மாற்றவும் வல்லரே

என்றும், சுந்தரர்,

கலைக்கொம்பும் கரிமருப்பும் இடறிக்
கலவம் மயில்பீலியும் கார்அகிலும்
அலைக்கும் புனல் சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே

என்றும் பாடியுள்ளனர். இம்மூவர் திருப்பதிகப் பாடல்கள் அனைத்தும் காவிரியின் கிளை நதியான அரிசிலாற்றின் தென்கரையில் புத்தூர் (அழகா புத்தூர்) என்னும் தலம் திகழ்ந்தது என்பதை விளக்குகின்றன. இப்பாடல்களின் வழி கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளிலிருந்து இக்கிளை நதி அரிசில் என்ற பெயரால் தொடர்ந்து அழைக்கப் பெற்றமையை அறிய முடிகிறது.

சுந்தரர் கொள்ளிடம் ஆறு பற்றித் தம் பாடல்களில் விவரித்துள்ளார். அவ்வாற்றில் மணிகள் கொழிக்கும் என்றும், அங்கு மடவார்கள் உடை அவிழ, கூந்தல் அவிழக் குடைந்து ஆடுவார்கள் என்றும், அந்நதியில் குங்கும மரங்கள் உந்தப்பட்டு வரும் என்றும் குறிப்பிட்டுள்ளார். பன்னிரு திருமுறைகளுள் கடை நூலான திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் காவிரியின் பெருமையை மற்றவரைக்காட்டிலும் மிகுதியாகப் பாடியுள்ளார். அந்நூலுள் திருநாட்டுச்சிறப்பு

உரைக்குங்கால் பன்னிரண்டு பாடல்களில் காவிரியின் பெருமையை அவர் விரித்துரைத்துள்ளார்.

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன் 1

ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால் 2

சையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாள்தொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டும் நீரது 3

மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினால் பல்லுயிர் தருதன் மாண்பினால்
கோலநற் குண்டிகை தாங்கும் கொள்கையால்
போலும்நான் முகனையும் பொன்னி மாநதி 4

திங்கள் சூடியமுடிச் சிகரத் துச்சியில்
பொங்குவெண் தலைநுரை பொருது போதலால்
எங்கள்நா யகன்முடி மிசைநின் றேயிழி
கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே 5

வண்ணம்நீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது 6

வேறு

வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால் 7

வாசம் நீர்குடை மங்கையர் கொங்கையில்
பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்திரை மீதிழிந் தோடுநீர்
தேசு டைத்தெனி னுந்தெளி வில்லதே 8

மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளந்தரக்
காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால் 9

ஒண்து றைத்தலை மாமத கூடுபோய்
மண்டு நீர்வய லுள்புக வந்தெதிர்
கொண்ட மள்ளர் குரைத்தகை ஓசைபோய்
அண்டர் வானத்தின் அப்புறஞ் சாருமால் 10

மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை யார்செய் உழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்தவே 11

உழுத சால்மிக வூறித் தெளிந்தசே(று)
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம் 12

இப்பாடல்களில் ஆதிமா தவமுனி அகத்தியன் பூதநீர்க் கமண்டலிருந்து காவிரி பிறந்தாள் என்ற புராண வரலாற்றைக் கூறி, சைய மலையிலிருந்து காவிரி தொடங்கு வதையும், தெய்வங்களால் போற்றிப் பாடுவதையும் குறிக்கின்றனர். சிவபெருமானின் தலையில் உள்ள கங்கையை ஒத்தவள் பொன்னி என்றும், உமாதேவியின் கருணையைப் போன்ற உள்நெகிழ் கருணை உடையவள் காவிரி என்றும், அப்பொன்னி நதிக்கரையில் எண்ணற்ற சிவாலயங்கள் உள்ளன என்றும், அந்நதி நீரில் குங்குமம், சந்தனம் போன்றவை கரைந்ததால் வாசம் மிகுதிப்பட்ட தென்றும் கரையில் பூஞ்சோலைகள் மிகுந்திருந்தன

என்றும், பொன்னி நதிக்கரையில் அமைந்த தலை மதகுகள் வழியே புகும் காவிரி நீர் வயல்களில் புகுந்து நிறைய மள்ளர்கள் மகிழ்ந்து எழுப்பிய ஓசை வானத்திற்கு அப்பாலும் சென்று ஒலித்தது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்த புராணத்தில் உள்ள காவிரி நீங்கு படலம் என்னும் பகுதி, காவிரி நீர் சோழநாடு வந்த திறத்தைப் புராண அடிப்படையில் விவரிக்கின்றது. கயிலை மாமலையிலிருந்து தென்திசை புறப்பட்ட அகத்தியர், அங்கிருந்த காவிரியாற்றைத் தன் கமண்டலத்துள் அடக்கி எடுத்து வந்ததாகவும், அவர் அக்கமண்டலத்தோடு கொங்கு தேசத்தில் இருந்தபொழுது, வேணுபுரம் என்னும் சீர்காழியில் இந்திரன் தன் சாபம் நீங்க அங்குள்ள வேணுவனத்தில் சிவனைப் பூசித்து வந்ததாகவும், அப்பொழுது நீர் இன்மையால் தாவர இனங்கள் வாடி நிற்க அவை செழிப்பதற்காகவும், தன் பூசனைகளுக்காகவும் அகத்தியரின் கமண்டலத்திலுள்ள காவிரியை அங்கு ஓடச் செய்யுமாறு கணபதியை வேண்ட, உடன் அவர் காக்கை வடிவம் கொண்டு அக்கமண்டலத்தைக் கவிழ்த்து விடவே அந்நீர் ஆறாகப் பெருக்கெடுத்தோடிச் சோழ நாட்டை வந்தடைந்து வேணுபுரத்தை வளமுடையதாக்கி இந்திரனின் வேண்டுகோளையும் நிறைவு செய்தது என்று கூறுகின்றது. இப்படலத்தின் 66 பாடல்கள் இப்புராணக் கதையினை விரிவுறக் கூறுகின்றது.

சங்ககாலம் தொட்டுச் சோழர்கால இறுதிவரை உள்ள தமிழிலக்கியப் படைப்புகளைத் தொகுத்து நோக்கும் பொழுது பொன்னி நதியாம் காவிரியின் சிறப்புக்கள் அறியப்படுவதோடு, காவிரியின் கிளை ஆறுகளான கடுவாய், அரிசில், மண்ணி, கோட்டாறு, கொள்ளிடம் ஆகியவற்றின் சிறப்புக்கள் பற்றியும் அறிய முடிகின்றது.

"சோழ நாட்டில் உறைக்கிணறுகளும், செங்கற்கட்டுமான கிணறுகளும்"

உறைக் கிணறு

கிணறுகள் அமைக்கும் முறைகளில் பன்னெடுங் காலமாக தமிழகத்தில் நடைமுறையில் இருந்த ஒரு வகை அமைப்பு உறைக்கிணறு என்பதாகும். இம்முறை மிக எளிய நிலையில் வாழ்ந்தவர்கள் தங்கள் தெருக்களிலோ அல்லது தங்கள் இல்லங்களின் அருகிலோ இவ்வகைக் கிணறுகள் அமைப்பர். உறைக்கிணறுகள் பற்றிய குறிப்புகள் சங்க காலம் தொட்டு பழந்தமிழ் நூல்களில் கிடைக்கின்றன. கரிகாற்பெருவளத்தானை புகழ்ந்து பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் அந்நூலில் காவிரிப்பூம்பட்டினம் பற்றிக் குறிப்பிடும் பொழுது அங்கு எளிய நிலையில் வாழ்ந்த மக்களின் குடியிருப்புப் பகுதி பற்றி விவரிக்கின்றார்.

> பறழ் பன்றிப் பல்கோழி
> யுறைக் கிணற்றுப் புறச்சேரி
> மேழகத் தகரொடு சிவல்விளை யாடக் (பட்டினம்:75-77)

என்ற அடிகள் வாயிலாக குட்டிகளையுடைய பன்றிகளையும், பல சாதியாகிய கோழிகளையும், உறைவைத்த கிணறுகளையும் உடைய கடைநிலை மக்கள் வாழ்ந்த சேரி பற்றிக் கூறியுள்ளார்.

இத்தகைய உறைக் கிணறுகள் பற்றி கள ஆய்வு மேற்கொள்ள தஞ்சைக்கு அருகிலுள்ள வீரசிங்கம்பேட்டை என்னும் ஊர் எடுத்துக்கொள்ளப்பெற்றது. கி.பி. 750 இல் சோழ நாடு உள்ளிட்ட தமிழகத்தின் பெரும்பகுதியினை ஆட்சி செய்த இரண்டாம் நந்திவர்மபல்லவன் சோழ நாட்டில் தனக்கென ஒரு தலைநகரை உருவாக்கினான்.

நந்திபுரம் என அவனால் உருவாக்கப் பெற்ற அந்நகரில் ஆயிரம் லிங்கங்களுடன் கூடிய ஒரு சிவாலயத்தையும் எடுப்பித்தான். இதனால் அப்பெரு நகரம் நந்திபுரத்து ஆயிரத்தளி என்று அழைக்கப்பெற்றது. பல்வர்களின் இறுதிக் காலம் வரை அவர்களது கோநகராக விளங்கிய நந்திபுரத்தை தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பிற்காலச் சோழர்கள் இங்கிருந்த அரண்னையை தங்கள் இரண்டாம் தலைநகரமாகப் போற்றினர். சோழர்கள் போற்றிய இந்த நந்திபுர அரண்மனை பற்றிய குறிப்புகள் சிறிய ஆனைமங்கலச் செப்பேட்டுத் தொகுதியிலும், (Smaller Laidem Grants) சுந்தர சோழன் காலத்திய வீரசோழியம் எனும் தமிழ் நூலும் விரிவாகச் செப்புகின்றன.

சோழப் பேரரசினை வீழ்ச்சியடைச் செய்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் தஞ்சாவூர், உறையூர் போன்ற சோழர்களின் அனைத்து கோ நகரங்களையும் அழித்துவிட்டு, இந்த நந்திபுரத்து ஆயிரத்தளியில் இருந்த காலிங்கராயன் என்னும் கட்டிலில் அமர்ந்து கொண்டு வீராபிஷேகம், விஜயாபிஷேகம் செய்துகொண்டான் என்பதை அப்பேரரசனின் திருவில்லிபுத்தூர் கல்வெட்டு கூறுகின்றது. பல்லவ, சோழ, பாண்டிய மன்னர்களுக்கு உறைவிடமாக விளங்கிய நந்திபுரம் எனும் இப்பெருநகரை கி.பி. 1313 இல் மாலிக்காபூர் என்ற வடபுலத்து தளபதி தரைமட்டமாக அழித்தான் என்ற தகவலை அமீர்குஸ்ரூ என்ற பெர்ஷிய பயணநூல் எழுத்தாளனின் குறிப்புகள் எடுத்துரைக்கின்றன. இத்தகு வரலாற்றுச்சிறப்புடைய நந்திபுரம் எனும் அப்பெருநகரம் தஞ்சாவூர், திருவையாறு சாலையிலுள்ள கண்டியூரினை அடுத்து விளங்கும் வீரசிங்கம்பேட்டை, ஆவிக்கரை, மாளிகைமேடு, இரட்டைக்கோயில் ஆகிய ஊர்கள்

இணைந்த பகுதியே என்பதை குடவாயில் பாலசுப்ரமணியன் எழுதிய நந்திபுரம் எனும் ஆய்வுநூல் மிகச் சிறப்பாக விவரிக்கின்றது.

வீரசிங்கம்பேட்டையின் ஒரு பகுதியில் அந்த ஆயிரத்தளி எனும் சிவாலயம் இருந்ததற்கான அனைத்துச் சான்றுகளும் கிடைத்துள்ளன. இவ்வூரின் மற்றொரு பகுதி மக்கள் வாழும் குடியிருப்புகளாக இருந்துள்ளது. அப்பகுதியை ஒட்டி தற்காலத்தில் வாய்க்கால் ஒன்றில் அடுத்தடுத்து எங்கு தோண்டினாலும் வரிசையாக உறைக்கிணறுகள் உள்ளன. 1½ அடி உயரம் 3 அடி விட்டமுள்ள சுடுமண் உறைகள் ஒன்றின் மேல் ஒன்று அடுக்கப்பெற்ற கிணறாக வடிவமைக்கின்றனர். இப்பகுதி மணற்பாங்கான நிலமாக இருப்பதால் பதினைந்து அடி ஆழத்திற்கே மிக நல்ல நீர் கிடைக்கின்றது. மேலும், இது காவிரிப்படுகை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கிணறுகள் நிலத்தடி ஊற்று நீரால் நீர்வளம் பெற்றன. மண் சரிந்து கிணறுகள் தூர்ந்து போகாமல் இருப்பதற்கும், ஒரு உறைக்கும் மற்ற உறைக்கும் இடையே உள்ள வெளி வழியாக ஊற்று நீர் கிணற்றினுள் வடிவதற்கும் ஏற்ற வகையில் எளிய அமைப்பாக இவ்வுறைக் கிணறுகள் விளங்குகின்றன.

வெட்டாற்றில் உறை கிணறு

தஞ்சையில் இருந்து குடந்தை செல்லும் சாலையில் 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள வெட்டாற்றின் வடகரையிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் சாலையில் 5 கிலோமீட்டர் சென்றால் அமைந்துள்ள கொண்டவிட்டான் திடல் என்னும் ஊராட்சியின் உட்கிராமமான தாழக்குடி என்னும் சிற்றூரில் வெட்டாற்றினுள் உறை கிணற்றின் தடம் காணப்படுகிறது.

தாழக்குடியைச் சார்ந்த வீரமணி இந்த தடம் குறித்து அளித்த தகவலின் பேரில் இப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டார் இந்நூலின் ஆசிரியர்.

நீர்மேலாண்மைச் செயல்பாடுகள் சோழர்கள் காலத்தில் உச்ச நிலையினை எட்டியிருந்தது. ஆறுகளின் குறுக்கே கற்களைக் கொண்டு அணைகள் கட்டுவதும், ஆற்றிலிருந்து கிளை ஆறுகள், வாய்க்கால்கள் அடுக்குத் தொடராக ஏரி, குளங்களுக்கு நீரினைக் கொண்டு செல்வதும், அவற்றிலிருந்து வெளியேறும் உபரி நீரினை கலிங்குகள் வழியாக மீண்டும் ஆறுகளுக்கே கொண்டு செல்வதும், ஏரி, குளங்களில் நீரினை வெளியேற்று வதற்கான தூம்புகள் அமைத்ததும், குளங்களின் தரை மட்டப் பகுதிகளில் கிணறுகள் அமைக்கும் வழக்கமும் நடைமுறையில் இருந்தது. நீர் வற்றிய கோடைக் காலங்களில் இக்கிணறுகளிலிருந்து நீரினை இறைத்துப் பயன்படுத்தினர். உதாரணமாக குடந்தை மகாமகக் குளத்தின் உள்ளேயும், தஞ்சை ஐயங்குளத்தின் உள்ளேயும் கிணறுகள் இருப்பதைக் காணலாம்.

நீர் வரத்து இல்லாத கோடைக்காலங்களில் ஆற்று மணலில் குழி தோண்டி அதிலிருந்து ஊறுகின்ற ஊற்று நீரினை உண்ணும் வழக்கம் நெடுங்காலமாக நம் மண்ணில் இருந்தது. இன்று மணலே ஆறுகளில் இல்லாத நிலை. அதனால் ஊறுணிகளும் இல்லை.

தாழக்குடியில் வெட்டாற்றின் கரையிலிருந்து 20 அடி தொலைவில் ஆற்றின் உள்ளே வடபுறம், தென்புறம் ஆகிய இரண்டு புறமும் சோழர் காலத்திய சுடு மண்ணால் செய்யப்பட்ட உறைக்கிணறு இருப்பது கண்டறியப்

பட்டது. இக்கிணற்றின் விளிம்பிலிருந்து ஒரு அடி விட்டமும் இரண்டு அடி நீளமும் கொண்ட சுடுமண் குழாய்கள் ஒன்றின் மீது ஒன்று செருகப்பட்டு ஆற்றின் கரையை நோக்கிச் செல்கின்றன. இந்த அமைப்பைப் பார்க்கும் போது நீர் வரத்து அற்ற கோடைக் காலங்களில் ஊற்று நீரால் நிரப்பப்படும் உறைக்கிணற்றிலிருந்து குழாய் வழியே நீரானது வெளியே அமைக்கப் பட்டுள்ள குளங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு மக்களுக்கும், கால்நடைகளுக்கும், விவசாயத்திற்கும் பயன்படுத்தப் பட்டு இருக்க வேண்டும் என்பது அறிய முடிகிறது.

உடைந்த உறைக்கிணற்றின் சுடுமண் பகுதியானது மேற்புறம் சிவப்பாகவும் நடுப்பகுதி கருமையாகவும் அடுத்தமைந்த பகுதி சிவப்பாகவும் இருக்கின்றது. சுடுமண்ணின் இரண்டு பக்கங்களிலும் சிவப்பு நிறமும் நடுவில் அதாவது உட்பகுதியில் கருப்பு நிறமும் இருப்பது சோழர் காலத்திய தொழில்நுட்பமாகும். அதாவது முழுமையாக வேகவைப்பதற்கான தொழில் நுட்பம் இதில் அடங்கியுள்ளது.

சுடுமண் பானைகள், ஓடுகள், குழாய்கள், உறைகிணற்றுப் பகுதிகள் இவைகளை உருவாக்கும் பொழுது நன்கு குழைக்கப்பெற்ற மண் சாந்தின் மேல் வைக்கோல், நெல் கருக்காய் போன்றவைகளை வைத்து அதன்மேல் மீண்டும் குழைத்த மண் சாந்தினைப் பூசி நெருப்பில் வேக வைத்து எடுப்பார்கள். இதனால் முழுவதுமாக வேகவைத்த நிலையில் இப்பொருட்கள் கிடைக்கும்.

சாந்து பூசப்பட்ட மண்ணின் நடுவில் நெல் கருக்காய், வைக்கோல் வைக்கப்படுவதால் உள்பகுதி

(மையப்பகுதி) எளிதில் வெப்பத்தை ஈர்ப்பதால் நன்கு வேகவைக்கப்பட்ட நிலையில் இச்சுடுமண் குழாய்கள் கிடைக்கும். இது மிகச் சிறந்த அறிவியல் நுட்பமாகும். இத்தகைய தொழில் நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ள உறைகிணற்றுப் பகுதியினை ஆற்றில் மணல் அற்றுப்போய் தரைப்பகுதி வெளியே தெரிவதால் நன்றாகக் காண முடிகின்றது.

சூறை இறக்கப்பெற்ற செங்கற்கட்டுமான கிணறுகள்

காவிரியின் வடிநிலமான சோழ நாட்டில் வாழ்ந்த எளிய மக்களுக்கு எவ்வாறு உறைக்கிணறுகள் பயன் பட்டனவோ, அதேபோல் செல்வச் செழிப்பு மிகுந்த மக்கட்கு செங்கற்கட்டுமான கிணறுகள் பயன்பெற்றன. இதன் கட்டமைப்பிற்கு மிகச்சிறந்த தொழில் நுட்பத் திறனைப் பயன்படுத்தியுள்ளனர். குழாய்க் கிணறுகளும், நீரேற்றும் மின்சார மோட்டார்களும் மிகுதியாகப் பயன்பாட்டிற்கு வந்தபிறகு இப்பழைய கட்டுமானக் கிணறு அமைப்பு முறை வழக்கொழிந்து வருகின்றன.

இக்கிணறு கட்டமைப்பிற்கு அடிப்படையாய் விளங்கியது சூறை இறக்கும் தொழில்நுட்பம் ஆகும். இந்நுட்பம் அறிந்த வல்லவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிலரே இருப்பர். இத்தகு கிணறுகள் 15 அடியிலிருந்து 30 அடி ஆழம் வரை அவ்வப்பகுதியின் நீர் வளத்திற்கு ஏற்ப திகழும். ஓரளவு கடினத்தன்மை உடைய பூமியின் மேல்மட்டத்திலிருந்து வட்டவடிவில் கணிச்சி எனும் குந்தாலி, மண்வெட்டி, கடப்பாரைகள் துணையொடு வெட்டுவர். நீர் ஊறும் ஊற்றுக்கண்கள் இருக்கும் நிலமட்டத்தை அடையும்போது அவை மணற்பாங்காக

இருக்கும். அங்குள்ள மணலை தோண்டி எடுக்க எடுக்க நீர் ஊறுவதோடு, பக்கவாட்டில் மணலும் சரியும். இவ்வாறு தோண்டும் பணி மிக ஆபத்தான பணியாக இருக்கும். நீரை எவ்வளவு இறைத்தாலும், நீர் ஊறிக் கொண்டே யிருக்கும். நீர் மட்டமும் குறைவுபடாது. அத்தகைய நிலையை அடையும் பொழுது சூறை இறக்கும் பணியைத் தொடங்குவர்.

பெரிய மாட்டுவண்டி சக்கரத்தினை ஒத்த மரத்தாலான சக்கரம் ஒன்றை மரத்தச்சர்கள் செய்து கொடுப்பர். அச்சக்கரத்திற்கு ஆரங்கள் இருக்காது வட்டா எனப்பெறும் மரத்தாலான வட்ட விளிம்பு மட்டுமே இருக்கும். நெல்லி மரத்தால் மட்டுமே வட்டா எனும் இப்பகுதி உருவாக்கப்பெறும். ஒரு கிணற்று அளவு பெரிய சக்கரத்தின் வட்டாவின் அகலம் ஏறத்தாழ ஒன்பது அங்குலமும், அதன் கணம் நான்கு அங்குலமும் இருக்கும். இவ்வட்டாவினை தயார் செய்து கொண்டு கிணறு கட்டுவதற்கென்று தனி வடிவமுடைய செங்கற்களைத் தயார் செய்து கொள்வர். இச்செங்கற்கள் சாதாரன செவ்வக வடிவ கற்களாக இல்லாமல் தலைப்பில் நான்கு அங்குலமும், அது படிப்படியாகக் குறைந்து கீழே இரண்டு அங்குலம் உடையதாகவும் ஏறத்தாழ ஒன்றரை அங்குல கணமுடையதாகவும் இருக்கும். இச்செங்கற்களை அந்த வட்டாவின் மேல் வரிசையாக வைப்போமானால் அச்செங்கற்கள் அதன் மீது ஒரு வட்டத்தை ஏற்படுத்தி விடும். இவை அனைத்தும் கணக்கீடுகள் மிகத் துல்லியமாக இருக்கும். நீர் ஊறும் கிணற்றின் அடிப் பகுதிக்கு இம்முழு வட்டாவை எடுத்துச் சென்று தோண்டியவரை உள்ள தரைமட்டத்தில் வைப்பர்.

சூறை இறக்குவதில் வல்லவர்களான மூவர் அல்லது நான்கு பேர் அவ்வட்டாவின் உட்புறம் நின்று கொண்டு மேலிருந்து அனுப்பப்பெறும் செங்கற்களை அதன்மேல் வரிசையாக அடுக்குவர். ஒரு வட்டம் முடிந்த பிறகு இரண்டாவது வட்ட செங்கற்களை அதன்மேல் அடுக்குவர். இவ்வாறு நான்கைந்து அடுக்குகள் அடுக்கிய பிறகு தேங்காய் நார் கயிறு கொண்டு வட்டாவோடு செங்கற்களைப் பிணிப்பர். பிறகு, அவ்வட்டாவிற்குக் கீழ் உள்ள மண்ணை அகழ்ந்தெடுப்பர். மண்ணை அகழ்ந்து எடுக்க எடுக்க கற்களோடு உள்ள அம்மரவட்டா பூமியினுள் இறங்கிக் கொண்டே செல்லும். குறிப்பிட்ட ஆழம் இறங்கியவுடன் மேலும், மேலும் கற்களை வட்டமாக அடுக்கி கயிற்றால் பிணைப்பர். நீர் ஊற, ஊற நீரில் மூழ்கியவாறு மண்ணைத் தோண்டுவர். இவ்வாறு மூழ்கி, மூழ்கி மண்ணை அப்புறப்படுத்தி வட்டாவுடன் கூடிய வட்டக்கல் அமைப்பை கிணற்றின் அடித்தளம்வரை கொண்டு செல்வர். இப்பணிக்குச் சூறை இறக்குதல் என்று பெயர்.

இது மிகவும் ஆபத்து நிறைந்ததும், தொழில் நுட்பத்திறன் வாய்ந்த பணியுமாகும். ஏறத்தாழ ஒன்பது அல்லது பத்து அடி ஆழம் வரை நீரில் மூழ்கிக்கொண்டு மண்ணை அகழ்ந்து இவ்வட்ட வடிவ செங்கற் கட்டமைப்பை கீழே இறக்கிக் கொண்டே செல்ல வேண்டும். தேவையான நீர் கிடைக்கும் என்ற நிலை வந்த பிறகே சூறை இறக்குவதை நிறுத்துவர். நீண்ட நேரம் சுவாசத்தைக் கட்டுக்குள் வைத்திருக்க முடிந்தோர் மட்டுமே நீரில் இறங்கி இப்பணி செய்ய இயலும். நீர் மட்டத்திற்கு மேலாக இரண்டு அடி உயரம் வரை இவ்வட்ட கல்லடுக்கு முறையை நிறைவு செய்த பிறகு

அதற்கு மேல் செங்கற்களைச் சுண்ணாம்புக்காரை அல்லது சிமெண்ட் கலவை ஆகியவற்றோடு இணைத்து கிணற்றுக் கட்டமைப்பை மேல்மட்டம் வரை கொண்டு வருவர். மேல் மட்டம் வந்தவுடன் கிணற்றுக்குள் யாரும் தவறிவிழாமல் இருக்க பாதுகாப்புச் சுவர் அமைப்பும், நீர் இறைக்கும் பூட்டை அமைக்க இரண்டு கற்றூண்களையும் அமைத்து கட்டுமானப் பணியினை நிறைவு செய்வர்.

சூறை இறக்கும் பணியில் பயன்படுத்தப்பெறும் மரவட்டா நெல்லி மரத்தால் தயாரிக்கப் பெறுவதற்கு ஒரு தனிக்காரணம் உண்டு. சில கிணறுகளில் ஊறும் நீர் உவர்ப்புத் தன்மையுடன் இருக்கும். நெல்லி மரவட்டா அவ்வுவர்ப்பை அகற்றிவிடும். அடுத்து நீரிருக்கும் பகுதிவரை செங்கல் கட்டமைப்பு எந்தவித ஒட்டும் சாந்தும் இல்லாமல் உருவாக்கப்பெற்றிருப்பதால் அவை ஊற்றுக்கண் அடைபடாமல் கிணற்றுக்கு நீர்வரத்தை மிகுதியாக ஏற்படுத்துகின்றன. இவ்வகைக் கிணற்று அமைப்புகள் நீர்மேலாண்மைச் செயல்பாட்டில் தனித்துவம் பெற்ற அமைப்பு முறைகளாகும். இவ்வகைக் கிணறுகள் அதனை அமைக்கும் வல்லுநர்கள், சூறை இறக்குதலின் தொழில்நுட்பக் கூறுகள் ஆகிய அனைத்தும் கிழக்கு தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள பல்வேறு கிராமங்களில் கள ஆய்வு செய்த பொழுது முழுமையாக அறியப்பெற்றது.

பழைமை மிகு குளங்களும் வெள்ளத் தடுப்பு முறைகளும்

ஏரிகள், குளங்கள் பற்றிய பல செய்திளை சங்க நூல்களிலும், பிற்பட்ட நூல்களிலும் காணலாம். நீர்நிலை அல்லது நீரைச் சேமித்து வைக்கும் கட்டுமானம் பற்றிய பலசொற்கள் இலக்கியத்தில் பயின்று வருகின்றன. இலஞ்சி, கயம், கோட்டகம், கேணி, ஏரி, மலங்கள், மடு, ஓடை, வாவி, சலந்தரம், வட்டம், தடாகம், நளினி, பொய்கை, குட்டம், கிடங்கு, குளம் என்பன நீர்நிலைகளின் பல்வேறு பெயர்களாக உரிச்சொல் நிகண்டு குறிப்பிடுகின்றது. நிலன்நெளி மருங்கின் நீர்நிலைப் பெருக என்ற புறநானூற்று கூற்றும் நீர்நிலைகளின் இன்றியமையாத் தன்மையைப் பற்றிப் பேசுகின்றது.

ஏரியும் ஏற்றத்தினாலும் பிறர் நாட்டு
வாரி சுரக்கும் வளன் எல்லாம் தேரின்
அரிகாலின் கீழ் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரி சூழ் நாடு.

என்ற பொருநராற்றுப் படையின் கூற்றும்

காடு கொன்று நாடாக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி

என்ற பட்டினப்பாலையின் கூற்றும்,

வரைவாய் தழுவிய கல்சேர் கிடக்கைக்
குளவாய் அமர்ந்தால் நகர்.

என்றும்,

திரையிரும் பனிப்பௌவம் செவ்விதா அறுமுகந்து
உரஉரும் உடன்று ஆர்ப்ப ஊர் பொறை கொள்ளாது
கரை உடை குளமெனக் கழன்று வான்வயிறு அழிவு
வரை வரை தொடுத்த வயங்கு வெள்ளருவி

என்னும் பரிபாடல் கூறும் கூற்றுக்களும், குளங்கள் பற்றிய செய்திகளை நமக்கு எடுத்துரைக்கின்றன.

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர் நிறைந்தற்று

என்ற சுற்றஞ்சூழ் அதிகாரத்தில் வள்ளுவர் குளத்தை ஒப்புமையாகப் பேசுகின்றார். பொதுவாக உரையாசிரியர்கள் கோடின்றி என்பதற்குக் கரை இல்லாத என்று பொருள் கொள்வார்கள். கோடு என்பதற்கு மிகை நீர் வெளியேறும் பாதை என்று ஆய்வாளர்கள் சிலர் பொருள் கூறுகின்றனர். இவ்வடிப்படையில் ஆராய்வோமாயின் ஏரியின் மிகச்சிறப்பான பொறியியல் அங்கமான கலிங்கு என்பதே கோடு என்பதன் பொருளாகும். குளந்தொட்டு கோடுபதித்து என்ற பதிணெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான சிறுபஞ்சமூலப் பாடல் இக்கருத்திற்கு மேலும் வலுவூட்டுகிறது. மேலும் ஏரி அல்லது குளங்களில் நீர் வெளிப்போகும் இடத்திலுள்ள சிறிய கதவினை புதவு என்ற சொல்லால் குறிக்கும் மரபு இருந்துள்ளது.

புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை

என்ற புறப்பாடலும் அடுத்து,

பொய்கைவாயிற் புனல் பொரு புதவின்

என்னும் பதிற்றுப்பத்தின் கூற்றும் புதவின் சிறப்பு குறித்துப் பேசுகின்றன.

வையை உடைத்த மடை அடைத்த கண்ணும்

நுரையுடன் மதகு தொறு இழிதரு புனல்

வனை கலத் திகிரியின் குமிழி சுழலும்
துனை செலல் தலைவாய் ஓ இறந்து வரிக்கும்
காணுநா வயா அம் கட்கு இன் சேயாற்றின்
சுருங்கையின் ஆயத்தார் சுற்றம்

என்ற சங்க நூல் குறிப்புக்களை ஆழ்ந்து நோக்கும் பொழுது, புதவு, மடை அடைத்த கண், மதகு, குமிழி, தலைவாய், சுருங்கை என்ற பல்வேறு வகையான நீர் வெளியேறும் அமைப்புகள் பற்றி அறிய இயலுகின்றது. மடை என்பது ஆறு, குளம், ஏரி, கால்வாய் போன்ற வற்றில் நீர் வெளியேறுவதற்காக அமைக்கப்படுவதாகும். இந்த மடையில் ஒரு கதவு இருக்கும். அக்கதவினைத் திறந்தால் மடைவழியே நீர் வெளியேறும். இவ்வகை அமைப்பில் நீர் வெளியேறுவதைக் கூட்டுவதோ அல்லது குறைப்பதோ இயலாது. மதகு என்பது மடை போன்றே அமைக்கப் படுவது. இதன் கதவை சிறுக, சிறுகத் திறக்கலாம். தண்ணீர் வெளியேறும் அளவினைக் கூட்டவோ, குறைக்கவோ இயலும். குமிழி என்பது குளங்களிலிருந்து நீர் வெளியேற கல்லால் பெட்டி ஒன்று அமைத்து அதில் துளையிட்டு, அத்துளை வழியே நீர் வெளியேறச் செய்யும் அமைப்பாகும். குமிழியின் துளை வழியே நீர் வெளியேறும் பொழுது சுழல் உண்டாகும். அச்சுழல் குயவன் சக்கரம் சுழல்வது போன்று இருக்கும் என்று “வனை கலத்திகிரியின் குமிழி சுழலும்” என்ற மலைபடுகடாம் பாடலடி உணர்த்துகின்றது. மேலும் அதே பாடலில் தலைவாய் என்னும் அடியும் உள்ளது. தலைவாய் என்பதனை வாய்த்தலை என்றும் குறிப்பிடுவர். ஓர் ஆற்றிலிருந்து ஒரு சிறு கிளை பிரிந்து ஒரு அரை வட்ட வடிவில் வளைந்து அது மீண்டும் ஆற்றோடு இணையும் அவ்வாறு பிரியும் வளைவு அமைப்பில் ஒரு மடை அமைத்து அதில் மதகோ அல்லது கலிங்கோ ஏற்படுத்துவர். அதன் வழி வெளியேறும் நீர் கால்வாய் வழி நிலங்களுக்கு பாயும்.

விரிகதிர் ஆரம் மின்னித் தூரென்னும் திருவில் வீசிக்
குரிசின் மாமேகம் பெய்த கொழும்புயற் காமமாரி
அரிவைதன் நெஞ்சமெனும் அகன்குளம் நிறைந்து வாள்கண்
கரியமை சேறு சித்திக் கலிங்கு திறந்த வன்றே.

மின்னல் மின்னி மழை பெய்து குளம் நிரம்பி கலிங்கு வழியே நீர் வெளியேறும் காட்சியினை காதலுக்கு உவமையாகக் காட்டுகிறார் சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்கதேவர். கலிங்கு எனும் இவ்வமைப்பு ஏரி குளங்களில் தண்ணீரைத் தேக்கும் பொழுது அந்நீர் நிலையின் கரைகளின் தாங்குதிறன் எவ்வளவு என்பதை அறிந்து அந்த அளவிற்கு மட்டுமே அந்நீர்நிலையில் நீர் தேக்குவதற்கு ஏற்ற வகையிலும், வெள்ளக் காலங்களில் மிகும் அதிக அளவு நீர் வெளியேறவும் வாய்ப்பாக அமைக்கப்படும் கரையுடன் கூடிய நீர்க்கால்வாய் அமைப்பே கலிங்கு என்பதாகும். நீர்நிலையின் கரையில் கலிங்கு உள்ள இடத்தின் உயரம் எவ்வளவோ அதுவே அந்நீர்நிலையின் கொள்ளளவு உயரமாகும். இந்த அமைப்பை சங்க இலக்கியங்கள் கூறும் கற்சிறை என்ற அமைப்பாகக் கொள்ளலாம். காரணம் என்னவெனில் ஏரி அல்லது பெருங்குளங்களின் கரை அமைப்பு மண்ணால் அமைந்தபொழுது கலிங்கு என்னும் அமைப்பு மட்டும் கற்கள் கொண்டு எடுக்கப் பெறுவதாகும். கலிங்குகளை மிகுநீர் வெளியேறும் பாதை எனக் கூறலாம்

ஏரிகளை காவலிட்டு காத்த திறத்தை அகநானூறு ப்னியிலும், மழையிலும், அடர்ந்த இருள்சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரியைக் காக்கும் காவலன் போல அன்னை ஒருத்தி தன் தூக்கத்தை மறந்தாள் என்பதை,

துய் அவிழ் பனிமலர் உதிர வீசித்
தொழில் மழை பொழிந்த பானாட் கங்குல்

துய் அவிழ் பனிமலர் உதிர வீசித்
தொழில் மழை பொழிந்த பானாட் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉம் சிறு கோட்டுப்
பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே

என்ற அகநானூற்றுப் பாடல் உரைக்கின்றது. நீர் மேலாண்மைத் திறத்தில் நீர் நிலைகளை அழிவுபடா வண்ணம் பேணிக் காத்தல் என்பது முக்கியமானதாகும். அந்நெறி ஈராயிரம் ஆண்டுகளாகப் போற்றப்பெற்று வருகின்ற இப்பாடல் வழி உய்த்துணரலாம். மேலும் இங்கு ஏரி என்பதனைக் குறிக்க பெருங்குளம் என்ற சொல்லாட்சி பயன் பட்டுள்ளதையும் காண இயலுகின்றது.

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் ஔவையார்,

அறு குளம் நிறைக்குந போல.

என்று கூறி குளங்களில் நீர் நிரப்பும் மேலாண்மைத் திறத்தை விவரித்துள்ளார். இதே அகநானூற்றில் கபிலர் பாடிய பிறிதொரு பாடலில், பெரிய நீர்நிலைகளுக் கெல்லாம் குன்றங்களைப் போன்ற பெரிய கரைகளை யுடையனவாய்த் திகழ்ந்தனவென்றும் கோடையின் வெப்பம் மிகுதியால் நீர் அற்றுப்போனமையால் பறவைகள் அங்கு வந்து தங்காமல் இருந்தனவென்றும் பெருமழை பெய்ததன் காரணமாக அந்நீர்நிலை களெல்லாம் நிரம்பின என்று கூறும் கருத்தை,

கோடை நீடிய வைது அறு காலை
குன்று கண்டன்ன கோட்ட யாவையும்
சென்று சேக்கல்லாப் புள்ள, உள் இல்
என்றூழ் வியன்குளம் நிறைய வீசி
பெரும் பெயல் பொழிந்த

என்ற பாடலடிகளின் வாயிலாக வலியுறுத்தியுள்ளார். கோடை காலங்களில் வெப்பத்தின் மிகுதியால் குளத்து நீர் அற்றுப் போவதால் மழைக்காலங்களில் பெய்யும் மிகுநீரை அக்குளங்களில் தேக்குவதற்காக வலிமையுடைய கரைகளை எடுத்து நீரைத்தேக்கி காத்தல், மழைநீர் சேகரிப்பின் முழுப்பயன்பாடு ஆகிய நீர் மேலாண்மைச் செய்திகளை இப்பாடல் வழி அறிகிறோம்.

சோழன் நலங்கிள்ளியைப் பாடிய கோவூர்க்கிழார்,

குளக்கீழ் வளைந்த களக்கொள் வெண்ணெல்

என்ற பாடலடிகளை புறநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். சோழநாட்டில் பெருங்குளங்களில் நீரைத் தேக்கி அதனை நெல் விளையும் கழனிகளுக்குப் பாய்ச்சிய திறம் இதனால் அறியப் பெறுகின்றது. வையாவிக் கோப்பெரும் பேகனைப் பாடிய பரணர்,

அறு குளத்து உகுத்தும் அகல்வயில் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்

வரையாமரபின் மாரி ....

என்று கூறி மழைநீரால் நிரம்பும் குளங்கள் பற்றிய செய்தியைக் கூறியுள்ளார்.

நற்றிணை எனும் சங்கத்தமிழ் இலக்கியத்தில் நக்கீரர் குளம், மடை, வாய்க்கால் ஆகியவற்றின் வழி நீர் சென்று வளப்படும் வயல்களின் சிறப்பை மிக அழகிய பாடல் ஒன்றின் வாயிலாக உரைத்துள்ளார். அப்பாடலில் சிறுகுடி எனும் ஊரின் சிறப்பு கூறப்பெற்றுள்ளது. அவ்வூர் பற்றிக்கூறும் பொழுது பின்வருமாறு பாடுகின்றார்.

பாகன் குறிப்பது தவிரப் பிற கல்லாத யானை களையும் விரைவாகச் செல்லும் தேரையுமுடையவன்

செழியன். அவன் பெயராலே செய்தனர் சிறந்த ஒரு குளம். அதன் மடை வழியே நீரை விட்டனர். அந்நீர் வெளியே சென்றது. குளத்திலிருந்து திரண்ட மருப்பையுடைய வாளைமீனும் அந்நீரின் கால்வாயை அடைந்து எதிர்சென்றது. அதன் பின்னர் சேற்றையுடைய வயலின் உள்ளே புகுந்தது. அங்கே உழுகின்ற எருமைக் கடாவின் சேறுபட்ட காலில் படாமல் புள்ளியுள்ள வெள்ளையான முதுகோடு ஓடியது. அதைக் கண்ட செவ்விய சால் அடித்து உழும் உழவர் தம் கைக்கோலால் அடித்தனர். அந்த அடிக்கும் அஞ்சாது ஒதுங்கி அவ்வாளை மீன் பசிய கால்வாயுள்ள வயல் வரப்பின் பக்கத்தில் பிழைத்துப் புரண்டது. அதுவே வாணன் என்பவனின் சிறுகுடி என்னும் ஊர்.

புல்லேன் மகிழ்ந புலத்தலும் இல்லேன்
கல்லா யானைக் கடுந் தேர்ச் செழியன்
படை மாண் பெருங்குள மடைநீர் விட்டென
கால் அணைந்து எதிரிய கணைக்கோட்டு வாளை
அள்ளல் அம் கழனி உள்வாய் ஓடி
பகடு சேறு உதைத்த புள்ளி வெண் புறத்து
செஞ்சால் உழவர் கோல் புடை மதரி
பைங்காற் செறுவின் அணை முதல் பிறழும்
வாணன் சிறுகுடி அன்ன என்
கோள் நேர் எல் வளை நெகிழ்ந்த நும்மே !

இப்பாடலை ஆழ்ந்து நோக்கும் பொழுது வயல்களுக்குப் நீர்பாய விடுவதற்காக எத்தகைய வழிமுறைகளை மேற்கொண்டனர் என்பதும் நீர் மேலாண்மைத் திறத்தால் நெல் வளம் செழித்ததோடு, மீன் வளமும் சிறந்து திகழ்ந்தது என்ற செய்தியினையும் அறிய இயலுகின்றது.

தஞ்சை சிவகங்கை, திருவாரூர் கமலாலயம், மன்னார்குடியில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ்மிக்க குளங்கள் பற்றிக் காண்போம்.

கி.பி. 850ஆம் ஆண்டில் விஜயாலய சோழன் தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு பிற்காலச் சோழர் ஆட்சியை மலரச் செய்தான். தஞ்சை என்ற பெயரே நீரினை அடிப்படையாகக் கொண்ட காரணப் பெயராகும். தண் + செய் என்றால் நீர்சூழ்ந்த நிலப்பகுதி என்று பொருள்படும். இயற்கையாகவே நீர்சூழ்ந்த நிலப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்ட தண்செய் எனும் ஊர் காலப்போக்கில் முதலில் தஞ்சை என்றும் பின்னர் தஞ்சாவூர் என்றும் அழைக்கப்படலாயிற்று.

மாமன்னன் இராஜராஜசோழன் எடுப்பித்த தஞ்சைப் பெரியகோயிலாம் இராஜராஜேச்சரம் எனும் கற்றளியில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் போற்றிப் பாடிய கருவூர்த்தேவர்,

நெற்றியிற் கண்என் கண்ணின் நின் றகலா;
நெஞ்சினில் அஞ்சிலம் (பு) அலைக்கும்
பொற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்
புகுந்தன; போந்தன இல்லை !
மற்றெனக்(கு) உற(வு) ஏன் ? மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே (திருவிசைப்பா–2)

என்று குறிப்பிட்டுள்ளார். சோழப்பேரரசர் இராஜராஜன் காலத்தில் வாழ்ந்த இவ்வருளாளரின் கூற்று சிந்திக்கத் தக்கதாம். தஞ்சை நகருக்கு இஞ்சியாகிய மதிலரண் (கோட்டைச் சுவர்) இருந்தமையும், அம்மதிலைச்சுற்றி எற்று நீர்க் கிடங்காகிய ஆழமான அகழி இருந்தமையும்,

முதலைகள் வாழும் இந்நீரரணுக்கு வடவாற்றிலிருந்து (வீரசோழ வடவாறு) மதகு வழியே நீர் பாய்ந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நகரத்திற்குரிய அகழிக்கு ஆற்றிலிருந்து நீர் நிரப்பப் பெற்றது என்பதும் அந்த நீர் செல்கின்ற கால்வாயில் மதகு அமைப்பு இருந்ததையும் இந்த இலக்கியச்சான்று மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

நீரரணோடுத் திகழ்ந்த தஞ்சை நகரில் உள்ள பெருங்கோயிலை இராஜராஜன் எடுப்பித்தான் என்பதை அங்குள்ள கல்வெட்டுச் சாசனம் எடுத்தியம்புகிறது. தமிழ் இலக்கிய மரபில் சாசனப் பாடல்களில் மெய்கீர்த்தி எனும் இலக்கிய நெறிக்கு முதன்முதலில் வித்திட்டவன் மாமன்னன் இராஜராஜனே ஆவான். திருமகள் போல பெருநிலச் செல்வியும் என்ற முதலடியோடு தொடங்கும் அப்பெருமகனது தஞ்சை இராஜராஜேச்சரத்து முதல் கல்வெட்டில் பாண்டிய குலாசனி வளநாட்டு தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீஇராஜராஜேச்சரமுடையார்க்கு என்ற செய்தியினை பதிவு செய்துள்ளான். இப்பெருங்கோயிலை எடுப்பித்த மாமன்னன் அக்கோயிலுக்கு வடமேற்கு திசையில் சிவகங்கை எனும் பெருங்குளத்தையும் வெட்டுவித்தான். இக்குளத்திற்கு உரிய நீரினை அப்பெருங்கோயில் வளாகத்தில் பெய்யும் மழையினையே ஆதாரமாகக் கொண்டு கிடைக்குமாறுச் செய்தான். இதற்காக அப்பெருவேந்தன் வகுத்த செயல்பாடுகள் மிகு சிறப்புடையவையாகும்.

திருச்சுற்று மாளிகையோடும் திருமதிலோடும் திகழும் திருக்கோயிலின் உள் அமைப்பு 500 அடி நீளமும் 250 அடி அகலமும் உள்ள பரப்பளவில் அமைந்துள்ளது.

இதனுள் 216 அடி உயரமுடைய ஸ்ரீவிமானம், மகாமண்டபம், மற்ற பரிவார ஆலயங்கள் ஆகியவை உள்ளன. கோயிலின் உள்பரப்பு வடமேற்கு மூலையில் சற்று தாழ்ந்து காணப்பெறுகின்றது. அங்கு திகழும் மேலைத்திருச்சுற்று மாளிகைக்குக் கீழாக ஒரு நீர் வெளியேற்றும் சாளவம் உள்ளது. அதன் வாய்ப்பகுதியில் இரண்டு கற்பலகைகளைச் சொருகி எடுக்குமாறு உள்ள மதகு அமைப்பு கருங்கல்லாலேயே அமைக்கப் பெற்றுள்ளது. இதற்கு மிக அருகாக வடக்குத் திருச்சுற்று மாளிகை பகுதியில் இதே போன்று கற்பலகையுடன் கூடிய மற்றொரு மதகும் ஒரு கால்வாய் அமைப்பும் உள்ளன. மேற்றிசையிலுள்ள சாளவம் மதிலுக்கு வெளியே சென்று கோயிலுக்குப் பின்புறம் உள்ள நந்தவனத்திற்குச் சென்றுவிடுகிறது. ஆனால் வடதிசையிலிருந்துச் செல்லும் மதகுக் கால்வாய் மதிலுக்கு வெளியே பிரத்யேகமான அமைப்புடன் பூமிக்குக் கீழாகச் செல்லும் கால்வாயுடன் இணைக்கப்பெற்று, அது சிவகங்கை குளம் சென்றடையுமாறு இணைக்கப் பெற்றுள்ளது. பொதுவாக இரண்டு கால்வாய்களின் மதகு வாயில்களும் சொருகு கற்பலகை களால் மூடப்பெற்றிருக்கும். பண்டு மழைபெய்யத் தொடங்கிய சிறிது நேரத்தில் கோயில் வளாகம் முழுதும் பெய்யும் மழைநீர் குப்பைகள் நிறைந்தும், அழுக்காகவும் இப்பகுதியினை சென்றடையும். அப்போது கோயில் பணியாளர்கள் மேற்குப்புற மதகு வாயிலை மட்டும் திறந்துவிடுவர். சற்று நேரத்தில் குப்பைக் கூளங்களுடன் உள்ள அழுக்கு நீர் முழுவதும் சாளவம் வழியே வெளியேறி கோயிலுக்குப் பின்புறம் உள்ள நந்தவன நிலத்தில் பாய்ந்துவிடும். இவ்வாறு அழுக்கு நீர் வெளியேறிய பிறகு தொடர் மழையால் அவ்வளாகத்து தெளிந்த நீர் முழுவதும் ஒருங்கு திரண்டு இப்பகுதியினை வந்தடையும். உடன்

பணியாளர்கள் நந்தவனத்திற்குச் செல்லும் மதகு அமைப்பினை மூடிவிட்டு குளத்திற்குச் செல்லும் மதகினை திறந்து விடுவர். இதனால் சேகரமாகும் அவ்வளாகம் முழுதும் பெய்யும் மழைநீர் இக்கால்வாய் வழியே சிவகங்கைக் குளத்தைச் சென்றடையும்.

ஓர் ஆண்டு முழுவதிலும் பெய்யும் மழைநீரால் இக்குளம் நிரம்பி திருக்கோயில்களின் நீர்த் தேவை களையும், மக்களின் நீர்த்தேவைகளையும் பூர்த்தி செய்துவிடும். இச்செயல் முறைக்குப் பயன்பட்ட இரண்டு வகை மதகு அமைப்புகள், கால்வாய்கள், நீர்ச் சேகரமாகும் குளம் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதியான கோயில் வளாகம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் கள ஆய்வு மேற்கொள்ளப் பெற்று ஒளிப்படங்கள் மற்றும் வரை படங்கள் மூலம் ஆவணப்படுத்தப் பெற்றது. மழைநீர் சேகரிப்பு முறை அறியப்பெற்றதோடு, அந்நீரோடு இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்யும் நீரும் கலப்பதற்கு எத்தகு வழிமுறைகளை வகுத்துள்ளனர் என்பது கண்டறியப் பெற்றது. இராஜராஜசோழனின் கல்வெட் டொன்றில் அவ்விறைவனுக்கு ஆட்டப்பெறும் திருமஞ்சன நீர் பற்றியும், அதில் கலக்க வேண்டிய பெருஞ்செண்பக மொட்டு, ஏலவரிசி, இலாமிச்சைவேர் போன்ற மருத்துவ குணம் வாய்ந்த பொருள்கள் பற்றியும் இதனால் அறிய முடிந்தது. இவற்றை ஆழ்ந்து நோக்கும்போது பொது மக்களுக்காகப் பயன்பட்ட சிவகங்கை குளத்து நீரில் ஒரு குறிப்பிட்ட அளவில் மருத்துவப் பொருட்களையும் கலந்து அதன் மூலம் மக்களின் நல்வாழ்விற்கானச் செயல் களையும் செய்து உள்ள திறம் அறிய முடிந்தது.

கருவூர்த்தேவர் பாடலில் கூறப்பெற்றுள்ள “வடவாற்றிடுபுனல்” மதகு வழியே எற்றுநீர்க் கிடங்காகிய அகழிக்குச் சென்றது என்ற குறிப்பின் அடிப்படையிலும்,

வடவாற்றின் தென்கரைப் பகுதிகளில் கள ஆய்வு மேற்கொள்ளப் பெற்றது. தஞ்சை கரந்தை சாலையை ஒட்டி வடவாற்றிலிருந்து சுருங்கை வழியே நீர் கொண்டு செல்லப்பெற்ற தடத்தின் ஒரு பகுதி கண்டறியப் பெற்றது. அங்கு செங்கல்லும் சுண்ணாம்பு சாந்தும் கொண்ட வளைவு ஒட்டு அமைப்புடன் அமைக்கப்பெற்ற சுருங்கைத் தடம் திகழ்ந்தது.

சங்க காலத்து சோழநாட்டு கோ நகரங்களுள் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்தது ஆரூர் எனும் திருவாரூர் ஆகும். சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடும் பொழுது திருமலைச் சிறப்பாக கயிலை மலையினையும், திருநாட்டுச் சிறப்பாக சோழநாட்டின் சிறப்பையும், திருநகரச்சிறப்பாக ஆரூர் நகரின் சிறப்பினையும் உரைத்துள்ளமையை அறியும்போது, அந்நகரத்தின் சிறப்பினை நன்கு உணரலாம். சிலப்பதிகாரம் எனும் மாக்காப்பியத்துள் வழக்குரைத்த காதையில் கண்ணகியின் கூற்றாக,

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே.

என்று இளங்கோவடிகள் இப்பாடலடிகளைப் பதிவு செய்துள்ளார். இங்கு கூறப்பெறுவது மனுநீதிச் சோழனின் வரலாறாகும். அது நிகழ்ந்த இடமாகக் கூறப்பெறுவது ஆரூரே ஆகும். இவ்வூரின் சிறப்புக்களை மூவர் பாடல்களில் மட்டுமன்றி சுந்தரரின் தோழரான சேரமான் பெருமான் யாத்த திருவாரூர்க் கோவை எனும் நூல் வழியும் அறியலாம். இவ்வூரின் இவ்வளவு சிறப்புக் களுக்கும் காரணமாக விளங்குவது புற்றிடங்கொண்டார் வீற்றிருக்கும் திருக்கோயிலே ஆகும்.

இத்திருக்கோயிலுக்கு கமலாலயம் என்ற ஒரு பெயரும் உண்டு. ஐவேலியில் அமைந்த இக்கோயிலுக்கு நீராதாரமாகக் கமலாலய குளம் எனும் திருக்குளமும் இறைவனுக்கு செங்கழுநீர் மலர்கள் சூட்டுவதற்கு, செங்கழுநீர் தாவரம் வளர்க்க செங்கழுநீர் ஓடை என்ற ஓடையும் உள்ளன. கமலாலய குளம், செங்கழுநீர் ஓடை ஆகிய ஒவ்வொரு நீர்நிலைகளும் தலா ஐந்து, ஐந்து வேலி நிலப்பரப்பில் அமைந்துள்ளன. இத்தகைய அமைப்பினை வேறு எந்த சிவாலயத்திலும் காண இயலாது. "கோயில் ஐவேலி, குளம் ஐவேலி, செங்கழுநீர் ஓடை ஐவேலி" என்ற சிறப்பு மொழி இத்தலத்திற்குரிய தனிச்சிறப்பாக பண்டு முதல் குறிக்கப்பெற்று வருகின்றது.கமலாலய குளம் முதலில் களஆய்வு மேற்கொள்ளப்பெற்றது. தண்டியடிகள் என்ற சைவ சமயச் செம்மல் ஒருவர் (நாயன்மார்களுள் ஒருவர்) இக்குளத்தை ஒரு காலகட்டத்தில் சமணர்கள் தூர்த்தபொழுது குருடராயிருந்தும் அக்குளத்தை வெட்டி சீர் செய்து அதனால் சிவப்பேறு அடைந்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது. அப்புராணக் கதையினை இனிக்காண்போம்.

தண்டியடிகள் என்பவர் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையவர். இறைவன் திருவடிகளை மனத்துட்கொண்டு நோக்கும் அகநோக்கேயன்றிப் புறம் நோக்கும் உணர்வினை விட்டொழித்தார் போன்று பிறந்த பொழுதே கண்காணாத பிறவிக்குருடர். அவர் திருவாரூர்ப் பூங்கோயிலில் தேவாசிரியனை முன் இறைஞ்சி வலம் வந்து காதலாகி நமச்சிவாய நற்பதமே எடுத்தோதித் திருவாரூர்ப் பெருமானடிகள் திருவடிக்கே அன்புடையராய்த் திருத்தொண்டுகள் பல செய்து வந்தார். ஆரூர்த் திருக்கோயிலின் மேற்புறத்திலுள்ள திருக்குளத்தின் பக்கமெங்கும் சமணர்களுடைய பாழிகள் பெருகிக்

குளத்தின் இடம் வரவரக் குறைந்து வந்தது. அதனையறிந்த தண்டியடிகள் திருக்குளத்தை முன்போற் பெருகத் தோண்ட எண்ணினார். குளத்தில் தறிநட்டுக் கயிறு கட்டிக் கரையிலும் தறிநட்டு அக்கயிற்றை வலிந்து கட்டி மண்வெட்டியுங் கூடையுங்கொண்டு குளத்திலிறங்கி மண்ணை வெட்டியெடுத்துக் கயிற்றைப்பற்றி ஏறிக் கரையிலே போடுவாராயினர். இவ்வாறு நாள்தோறும் தண்டியடிகள் குளத்தினைத் தோண்டக் கண்டு சமணர்கள் பொறாது அவரையடைந்து 'மண்ணைத் தோண்டினால் சிற்றுயிர்கள் இறந்துபடும் வருத்தல் வேண்டாம்' என்றனர். அது கேட்ட தண்டியடிகளார் 'திருவில்லாதவர்களே, இந்தச் சிவதொண்டின் பெருமை உங்களுக்குத் தெரியுமோ' என்றார். சமணர்கள் அவரை நோக்கி, சிந்தித்து 'இந்த அறத்தினைக் கேளாத நீ செவியும் இழந்தனையோ' என்று இகழ்ந்துரைத்தனர். அது கேட்ட தண்டியடிகள், மந்த உணர்வும் விழிக்குருடும் கேளாச் செவியும் உமக்கேயுள்ளன. சிவனுடைய திருவடிகளை யல்லால் வேறு காணேன் யான். அதனை அறிதற்கு நீர் யார் ? உங்கள் கண் குருடாகி என் கண்கள் உலகெல்லாம் காண யான் கண்டால் நீர் என் செய்வீர் ?' என்றார். அதனைக் கேட்ட சமணர்கள், 'நீ உன் தெய்வத்தருளால் கண் பெற்றாயாகில் யாங்கள் இவ்வூரில் இருக்க மாட்டோம்' என்று சொல்லி அவர் கையிலுள்ள மண்வெட்டியைப் பறித்து, நட்ட தறிகளையும் பிடிங்கி எறிந்தனர். தண்டியடிகள் ஆரூர்ப்பெருமான் திருமுன் சென்று, 'ஐயனே! இன்று சமணர்களால் அவமதிக்கப் பட்டு வருந்தினேன். இவ்வருத்தத்தைத் தீர்த்தருளல் வேண்டும்' என முறையிட்டுத் தமது மடத்திற்குச் சென்றார். அன்றிரவு ஆரூரிறைவர் அவரது கனவில் தோன்றி, 'தண்டியே, நின் மனக்கவலை தவிர்க்க. நின்

கண்கள் காணவும் சமணர் கண்கள் மறையுமாறும் செய்கிறோம்' என்று அருள் செய்து, சோழ மன்னர்பால் கனவில் தோன்றி 'தண்டி என்பவன் நமக்குக் குளந் தோண்ட அதற்குச் சமணர்கள் இடையூறு விளைத்தனர். நீ அவனிடத்திலே சென்று அவர் கருத்தை முடிப்பாயாக' என்று பணித்து மறைந்தருளினார்.

வேந்தன் விழித்தெழுந்து இறைவன் திருவருளைப் போற்றிப் பொழுது புலர்ந்ததும் தண்டியடிகளையடைந்து அவர் நிகழ்ந்தன சொல்லக்கேட்டு சமணர்க்கும் தண்டியடிகளுக்குமிடையே நிகழ்ந்த அவ்வழக்கைத் தீர்க்க எண்ணி, சமணர்களை அழைத்து அவர்கள் கருத்தையும் அறிந்து கொண்டான். பின்னர் அமணர் தன்னுடன் வரத் தண்டியடிகளாருடன் குளக்கரையை அடைந்து தண்டியடிகளை நோக்கி, 'பெருகுந்தவத்தீர் நீர் சிவனருளாற் கண்பெறுதலைக் காட்டுவீராக' என்றான். அதுகேட்ட தண்டியடிகளார், 'யான் சிவனுக்குப் பொருந்திய அடியேன் என்றால் இன்று என் கண்கள் ஒளி விளங்கப்பெற்று அமணர்கள் தம் கண்களையிழப்பர். அதனால் ஆராய்ந்த மெய்ப்பொருளும் சிவபதமே ஆகும்' என்று சொல்லித் திருவைந்தெழுத்தை எடுத்தோதிக் குளத்தில் மூழ்கிக் கண்ணொளி பெற்று எழுந்தார். அங்கிருந்த அமணர்கள் கண்ணொளியிழந்து வழி தெரியாமல் தடுமாற்றமுற்றார்கள். 'பழுது செய்த அமண் கெட்டது' என்றுணர்ந்த மன்னன், தன் ஏவலாளரைப் பார்த்து, 'தண்டியடிகளோடு ஒட்டிக்கெட்ட சமணர் களைத் திருவாரூரினின்றும் அகன்று போம்படி துரத்துவீராக எனப்பணித்துத் திருக்குளத்தின் கரைகளைச் செம்மை பெறக்கட்டித் தண்டியடிகளை வணங்கிச் சென்றான். அகக்கண்ணேயன்றிப் புறக்கண்ணும் பெற்று

'நாட்டமிகு தண்டி' என நம்பியாரூராற் போற்றப்பெறும் சிறப்பு வாய்ந்த தண்டியடிகளார் இறைவனைப் போற்றித் திருவைந்தெழுத்தோதித் திருப்பணிகள் பல புரிந்து சிவபதம் அடைந்தார். இவ்வாறு பெரியபுராணம் தண்டியடிகளின் கதையை விவரிக்கின்றது.

தாராசுரத்தில் உள்ள இராஜராஜேச்சரம் (ஐராவதேஸ்வரர்) கோயில் கருவறையின் சுவரில், திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் குறிப்பிடும் அடியார்களின் சிற்பத்தொகுப்பு காட்சிகள் உள்ளன. அதில் 31வது காட்சியாகத் தண்டியடிகளின் கதை காட்சிப்படுத்தப் பெற்றுள்ளது. பிறவிக் குருடராகிய தண்டியடிகள் திருவாரூர் திருக்குளத்தினைத் தோண்டும் பணியில் ஈடுபட்டு மண்ணை வெட்டியெடுக்கும் குழியிடத்தே முளையடித்து கயிறு கட்டி அக்கயிற்றினைப் பற்றிக்கொண்டு மண்ணை அப்புறத் திற்குக் கொண்டு செல்லுதலும் அது கண்டு பொறாத சமணர்கள் தடையாய் நிற்றலும் ஆகிய நிலை அங்கு காணப்பெறுகின்றது. தண்டி யடிகள் பிறவிக்குருடு என்பது புலப்பட இச்சிற்பத்தில் உள்ள அவரது முகத்தில் கண்கள் உட்குழிந்தனவாய் அமைக்கப்பெற்றுள்ளன. இப்புராண வரலாற்றை ஆழ்ந்து நோக்கும்போது சுந்தரர் வாழ்ந்த எட்டாம் நூற்றாண்டிற்கு ஒரு சில நூற்றாண்டு களுக்கு முன்பே ஆரூர் திருக்குளத்தை தண்டியடிகள் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டார் என்பதை யறிகிறோம். மேலும் மக்களுக்குப் பயன்படக் கூடிய ஒரு குளத்தைத் தோண்டியதால் அவர் அழியா சிவப்பேறு பெற்றார் என்பதறிகிறோம்.

இத்தகு சிறப்புடைய ஐந்து வேலி பரப்பு கொண்ட ஆரூர் கமலாலய குளம் நான்கு புறங்களிலும் மதிற்சுவர், படிக்கட்டுகள் ஆகிய அமைப்புகளுடனும், இத்திருக்குளம்

புனிதமானது என்பதைக் காட்ட குளத்தின் நடுவே கற்றளியாக சிவாலயம் ஒன்றினையும் அமைத்துள்ளார்கள். படகு மூலம் சென்றே இத்திருக் கோயிலில் வழிபாடு செய்தல் கூடும். சோழர் காலம் தொட்டே ஓடம் போக்கி ஆற்றிலிருந்து பூமிக்கடியினுள் சுருங்கைக் கால்வாய் மூலம் இக்குளத்திற்கு நீர் வரும் வழியினை அமைத்துள்ளனர். மீண்டும் குளத்து நீர் முறையாக வடிய இக்குளத்தின் வடிகால் கால்வாய் ஒன்றினை பூமிக்குக் கீழாக சுருங்கை வழியில் கொண்டு சென்று ஊரின் வடதிசையில் உள்ள செங்கழுநீர் ஓடைக்கும், கழனிகளுக்கும் அவ்வடிகால் நீர் பாயுமாறுச் செய்திருந்தனர். குளத்தில் நீர் பலகாலம் தேங்கி நிற்காமல் முறையான நீரோட்டத்தால் தூய்மை நிலையிலேயே தொடர்ந்து இருந்து வந்துள்ளது. இத்தகைய பாய்கால், வடிகால் அமைப்புகள் நெடுங்காலமாகத் தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்த நீர் மேலாண்மை செயல் திட்டங்களுள் ஒரு வகைப்பாடாகும். இம்முறையில் குளத்தின் தூய்மைநிலை தொடர்ந்து இருந்துவந்துள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி எனும் பேரூர் இராஜாதிராஜ சோழன் காலந்தொட்டு மிகச் சிறந்த நிலையில் உள்ள பேரூர் ஆகும். இவ்வூரினை இராஜமன்னார்குடி என்றும் அழைப்பர். இராஜகோபால சுவாமி கோயில் கொண்டு திகழும் மிகப்பெரும் கோயிலை நடுவண் கொண்டு இவ்வூர் பரந்து விரிந்து திகழ்கின்றது. இவ்வூரின் ஒரு பகுதியினை ஊடறுத்து காவிரியின் கிளையாறான பாமணியாறு செல்கின்றது. இவ்வூரில் பெருங்குளமாகத் திகழும் ஹரித்திரா நதி குளம் தவிர்த்து ஏறத்தாழ 64 குளங்கள் உள்ளன. இந்தளவுக்கு எந்த ஊரிலும் குளங்கள் கிடையாது. கோயிலின் நான்கு

மூலைகளிலும் நான்கு குளங்கள் உள்ளன. இவை தவிர சங்கு வடிவில் சங்கு தீர்த்தம் எனும் குளமும், சக்கர வடிவில் சக்கர தீர்த்தம் எனும் குளமும் இக்கோயிலின் புனித தீர்த்தங்களாக விளங்குகின்றன.

ஹரித்திரா நதிக்குளம் ஏழுவேலி பரப்பளவு கொண்டதாகும். தமிழகத்தில் உள்ள கோயில் குளங்கள் வரிசையில் இக்குளமே மிகப்பெரியதாகும். இக்குளத்தின் நடுவே திட்டு போன்று அமைந்த பகுதியில் சிறுகோயில் ஒன்றுளது. படகின் மூலமே அக்கோயிலை அடையலாம். இராஜகோபால சுவாமியின் தெப்பத் திருவிழா இக்குளத்திலேயே நடைபெறுகின்றது. பாமணியாற்றி லிருந்து சுருங்கை வழியாக பாய்கால் கால்வாயும், இதே போன்று சிறந்த வடிகால் கால்வாயும் உள்ளன. அண்மையில் இக்குளம் முழுவதையும் நவீன கருவிகள் கொண்டு தூர்வாரி ஆழப்படுத்தியதால் இக்குளத்து நீர் நல்ல நிலையில் உள்ளது. நான்கு புறமும் மதில்களும், படிக்கட்டுகளும் உள்ள இக்குளத்தை தஞ்சை நாயக்க மன்னர் விஜயராகவ நாயக்கர் பேணிக்காத்தார் என்பதை ஏட்டுச்சுவடிகளாக உள்ள அவர்காலத்து தெலுங்கு மற்றும் சமஸ்கிருதச் சுவடிகள் சான்று பகர்கின்றன. அவ்வூரின் குளங்கள் அத்தனையும் களஆய்வின் பொழுது கணக்கெடுத்ததன் பயனாக அவற்றின் பெயர்களைக் கொண்ட நீண்ட பட்டியல் ஒன்றினைத் தயாரிக்க முடிந்தது. அவற்றில் பல குளங்கள் அழியும் நிலையிலும், பேணுவார் இன்றியும் உள்ளன. தயாரிக்கப்பெற்ற பட்டியலில் உள்ள மன்னை நகரத்து குளங்களாவன.

1. அரசமரக்குளம், **2.** அண்ணாமலைத்தேவர் குளம், **3.** துலுக்கர் குளம், **4.** வண்ணார் குளம், **5.** கொல்லர் குளம், **6.** சீத்தாராமன் குளம், **7.** பெத்தபெருமாள் குளம், **8.** காலனி குளம், **9.** கஜேந்திரமோட்ச குளம், **10.** தச்சன்

குளம், 11. சங்குதீர்த்தம், 12.ஆணைக்கொல்லர் குளம், 13. சீனிவாச தீர்த்தம், 14. கிருட்டிணதீர்த்தம், 15. பெரியாறி குட்டை, 16. சக்கர தீர்த்தம், 17. அய்யனார் குளம், 18. டபீர்குளம், 19. தெப்பக்குளம் (அரித்திராநதி), 20. சுக்குக் குளம், 21. செட்டி குளம், 22. தாமரைக் குளம், 23. தர்மராஜ கோயில் குளம், 24. குறவர் குளம், 25. சந்தைப்பேட்டை குளம், 26. பட்டைக் குளம், 27. பொட்டையன் குளம், 28. ருக்மணி பாளையன் குளம், 29. காலணி குளம், 30. ஜீயர் குளம். 31. பிள்ளை வழுக்கி குட்டை, 32. அக்னி தீர்த்தம், 33. தோப்புக் குளம், 34. செயங்கொண்டநாதர் சன்னதி குளம், 35.தோத்தாக் குளம், 36. திருப்பாற்கடல், 37. சஞ் சீவிராயன் குளம், 38.சங்கு குளம், 39. ராமலிங்கசாமி குளம், 40.சோமேஸ்வர முடையார் குளம், 41. அப்ளாச்சாரியர் குளம், 42. அய்யனார் குளம், 43. செங்குளம், 44. பழனி ஆண்டவர் தீர்த்தம், 45. நல்லான் குளம், 46. அம்மா குளம், 47. பிள்ளையார்கோயில் குளம், 48.மீனாட்சியம்மன் குளம், 49. ராவணன் குட்டை, 50.கோபிநாதன் குளம், 51. இரட்டைக் குளம், 52. நாதன்குட்டை, 53. ஜைனர் குளம், 54. கலுங்குக் குளம், 55. காமாட்சியம்மன் குளம், 56. அனுமார் குளம், 57.கோபிரளயம். மற்றைய குளங்கள் விவசாய நிலமாகவும், தோட்டமாகவும் மாறிவிட்டன.

பரிபாடல் எனும் சங்க இலக்கியத்தின் ஏழாம் பாடல் பெருங்குளமாகிய ஏரிகள் உடைந்து பெருவெள்ளம் மிகுகின்ற காட்சியை விவரிக்கின்றது. அதில்,

கரை உடை குளமென

என்ற குறிப்பு காட்டப் பெற்று வெள்ள நீர் கழனிகளில் பாய்ந்து மூழ்கச் செய்யும் நிலையில் அதனை மக்களுக்கு உணர்த்தி எச்சரிப்பதற்காக துடி என்னும்

தோற்கருவியினை அடித்து உணர்த்தினர் என்று கூறப்பெற்றுள்ளது.

அகவயல் இள நெல் அரிகால் சூடு
தொருபுனல் பரந்தெனத் துடி பட ஒருசார்
ஓதம் சுற்றியது ஊர் என ஒருசார்
கார் தூம்பு அற்றது வான் என ஒருசார்.

என்ற பாடலடிகளை ஆழ்ந்து நோக்கும்பொழுது மிகுந்த ஓசையை எழுப்பக் கூடிய தோற்கருவிகளை அடித்து அவ்வோசை மூலம் வெள்ளம் பற்றி எச்சரிக்கை செய்யும் செயல்பாடு ஈராயிரம் ஆண்டுகளாக தமிழ் மண்ணில் நிகழ்ந்த ஒன்று என்பதனை தெளிவாக அறியலாம். இதே பரிபாடலின் 6 ஆம் பாட்டிலும் இத்தகு வெள்ள எச்சரிக்கைச் செய்தி கூறப்பெற்றுள்ளது. வையை ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு கரை உடைந்து நீர் பெருகுவதை ஊர் மக்களுக்கு அறிவிக்க பறை எனும் தோற்கருவியை முழங்கினர் என்பதை,

வரைச் சிறை உடைத்ததை வையை ! வையைத்
திரைச் சிறை உடைத்தன்று கரைச்சிறை அறைக எனும்
உரைச் சிறைப் பறை எழ ஊர் ஒலித்தன்று.

என்ற பாடல் வழி அறிய முடிகின்றது.

பெருவெள்ளம் ஏற்பட்டு கரை உடையும் போது அதனை அடைத்து வெள்ளப் பெருக்கை தடுக்கும் முறைகள் பற்றிய செய்திகளை தமிழ் இலக்கியப் பாடல்கள் தெளிவுற இயம்புகின்றன. பதிற்றுப்பத்தின் முப்பதாம் பாடலில், அத்தகு நிகழ்ச்சி விவரிக்கப் பெற்றுள்ளது.

வெண்டலைச் செம்புனல் பரந்து வாய் மிகுக்கும்
பலசூழ்பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறை கொள் பூசலிற் புகன்ற ஆயம்
முழவிமிழ் மூதூர் விழவுக் காணுஉப் பெயரும்.

இப்பாடலடிகளுக்கு உரை கூறுமிடத்து, நீர்ப் பெருக்கின் வேகத்தால் அறுக்கப்பட்ட இடம் எல்லாம் அதைத் தடுத்து நிறுத்த அணையிடுபவர், வைக்கோற் புரிகளைக் கொண்டு மணற்கோட்டைகள் அமைப்பர். அவற்றையே 'பல சூழ் பதப்பர்' என்றார். இதனைக் கரிசை என்பர். இவற்றைச் செம்புனல் கரைத்து அழித்தலால் மக்கள் கூட்டம் பேராரவாரத்துடன் மிக உயரமும் திண்மையும் அமைந்த அணைசெய்து தடுத்து வெற்றி கண்ட இன்பத்தால் அதை மேலும் விரும்பிப் பலராய்க் கூடி அணையை மிதித்து வன்மை செய்து மகிழும் செயல் இனிது விளங்கச் 'சிறை கொள் பூசலில் புகன்ற ஆயம்' என்றார். இதுவே இப்பெயர்க்குக் காரணம். பெரிய படை திரண்டு வரும் பெருக்கை எதிர் தடுத்து நிறுத்திச் சிறை கொள்வது வெற்றி பெற்று மகிழும் படைவீரர் கூட்டம் மேலும், அச்செயலையே விரும்பும். அதுபோல நீர்ப் பெருக்கினைச் சிறைப்படுத்தும் மக்கட் கூட்டத்தைச் சிறப்பித்துக் கூறியதால் 'புகன்ற ஆயம்' எனப் பெயர் பெற்றது. பழைய உரைகள் கூறும் விளக்கம் இது. 'புகன்ற ஆயம்' என்பது முன்பு மணல் அணைக்கு நில்லாத பெருவெள்ளத்தை அணை செய்து முடித்த விருப்பத்தை யுடைய ஆயம் என்றவாறு என்றும் இச்சிறப்பு பற்றி இதற்குப் புகன்ற ஆயம் என்று பெயராயிற்று என்றும் உரைத்தார் என்ற பதிற்றுப்பத்தின் இக்கூற்று வெள்ளத் தடுப்புகளுக்குரிய வழிமுறைகளைத் தெளிவு பெற காட்டுகின்றது.

வெள்ளத் தடுப்பு பற்றிய மிக முக்கியமான செய்திகளை பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற்புராணம் விரிவுற எடுத்துரைக்கின்றது. அந்நூலின் மூன்றாம் காண்டமான திருவாலவாய்க் காண்டத்தில் உள்ள 61 ஆம் படலமான மண் சுமந்த படலம் பின்வருமாறு குறிக்கின்றது.

கரிய கடலின் அலைகளிடையே கிடந்து சுழலும் மரக்கலம் போல வையை நதியின் பெருவெள்ளப் பரப்பினுள் மதுரை மாநகரம் அகப்பட்டு வருந்துதலை அரிமருத்தன பாண்டியன் அறிந்து, தன் அமைச்சர்களை அழைத்து "நீங்கள் வையை நதிக்கரையினை கட்டிப் பெருகிவரும் வெள்ளத்தின் வேகத்தைத் தணித்து வாருங்கள்" என்று பணித்தான். உடனே மந்திரிமார்கள் 'நன்று' எனத் தொழுது சென்று, வெவ்வேறு வகைப்பட்ட பல குடிகளையும் குறிப்பிட்டு நகர் முழுதும், "அவரவர் பங்கை அடைமின்" என்று பறையறைவித்து அழைத்தனர். அப்போது அவ்வக் குடிகள் விட்ட கூலியாட்களை யெல்லாம் ஓரிடத்தில் கூடும்படி செய்து, "அவரவர்க்கு அளந்து எல்லை குறிப்பிட்டபடி கரை அடைக்கும் வேலையைச் செய்யுங்கள்" என்று கூறி, அவ்விடத்திற்கு அவரவரைச் செல்ல விடுத்தனர்.

அப்பொழுது மண் வெட்டுங் கருவியாளர்களும், கூடைக்காரர்களும், மரங்களைச் சுமந்து வருகின்ற வர்களும், பசுந்தழைகளையும், வைக்கோல்களையும் எடுத்து வருகின்றவர்களும், நீரினை மொண்டு பருகுதற்கு வரும் மேகக் கூட்டம் போல வையையாற்றின் கரையிலே வந்து மொய்த்தார்கள்.

சிலர், 'கரை உடைந்த இடங்களில் சென்று குதிரைப் பாய்ச்சலாக மரங்களை நிறுத்துவார்கள். சிலர், வைக்கோல் முதலியவற்றைப் பாம்புபோல உருட்டி அக்குதிரை மரத்தின் அடியிற் கிடத்துவர்கள். சிலர், அங்குத் தழைகளையிட்டு நிரப்புவார்கள். சிலர், மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரஞ் செய்து பறையடிப்பார்கள். சிலர், மண்ணை வெட்டியெடுத்துச் செல்பவரை விரைந்து செல்ல அதட்டுவார்கள். சிலர், விரைந்து துடுமென்று மண்ணைக்

கொட்டிக் கரையின்கண் பரப்புவார்கள். சிலர், மகிழ்ச்சி மிக்குக் குரவைப் பாடலைப் பாடுவார்கள். சிலர், தாம் கட்டிய அணையை உடைப்பதற்கு நீர் வருதலைக் கண்டு மனங்கலங்கி, வையை நதியை நோக்கி, "அன்னையே ! எங்கள்மேல் அளவற்ற சீற்றம் ஏன் ? இனி, ஆறக்கடவை" என்று வேண்டி எதிர்வணங்கி மண்ணைக் கொட்டுவார்கள். பிறகு உடைப்பு அடங்க அதனைக் கண்டு மகிழ்ந்து குரவைக் கூத்து ஆடுவார்கள். எட்டுத் திக்குகளுக்கும் எட்டுமாறு வாயினால் ஒலி செய்து பறையடிப்பார்கள். இவ்வாறு நகரிலுள்ள அனைவருக்கும் கூலியாட்கள் வந்து சேர்ந்து அவரவுர்க்கு அளந்துவிட்ட முறைப்படி தொழிலை மேற்கொண்டு செய்வாராயினர் இதன் பாடலடிகளைக் காண்போம்.

பண்சுமந்தமறை நாடரும்பொருள் பதஞ்சுமந்த முடியார்தமனம்
பண்சுமந்த துயர்தீரவந்தபரிநரிகளாயடவிபோனபின்
விண்சுமந்தசுரநதியெனப் பெருகுவித் தவைகையி துவிடையவன்
மண் சுமந்து திருமேனிமேலடி வடுச்சுமந்தகதையோ துவாம். 1

கருங்கடற்றிரையி டைக்கிடந்து சுழல் கலமெனக்கனமுகடளாய்
வரும்புனற்பரவையுட்கிடந்துநகர்மறுகியுட்கமறவேலினா
னெருங்கமைச்சரைவிளித்து நீர்கரைசுமந்தொதுக்கிவருமோதநீர்ப்
பொருங்கத த்தினையடக்குவீரெனவமைச்சருந்தொழுதுபோயினர். 2

வெறித்தடக்கைமதயானை மந்திரிகள்வேறுவேறுபலகுடிகளுங்
குறித்தெடுத்தெழுதியெல்லையிட்டளவுகோல்கிடத்திவரைகீறியே
யறுத்துவிட்டு நகரெங்கனும்பறையறைத் தழைத்துவிடுமாளெலாஞ்
செறித்துவிட்டவரவர்க்களந்தபடி செய்மினென்றுவருவித்தனர். 3

மண்டொடுங்கருவி கூடையாளருமரஞ்சுமந்துவருவார்களும்
விண்டொடும்படி நிமிர்ந்துவண்டுபடுவிரி பசுந்தழைபலாலமுங்
கொண்டதிர்த்துவருவாரும்வேறுபலகோடிகூடியகுழாமுநீர்
மொண்டருந்தவருமேகசாலமெனவருபுனற்கரையின்மொய்த்தனர். 4

கிட்டுவார்பரிநிறுத்துவாரரவுருட்டுவாரடிகிடத்துவா
ரிட்டுவார் தழைநிரப்புவார்ஒளி யெழுப்புவார் பறையிரட்டுவார்
வெட்டுவார்மணலெடுத்துவார் செலவெருட்டுவார் கடிது துடுமெனக்
கொட்டுவார்கரை பரப்புவாருவகைக் கூறுவார் குரவை குழறுவார். 5

கட்டுவார்கரையுடைப்பநீர்கடுகல் கண்டுநெஞ்சதுகலங்குவார்
மட்டிலாதமுனி வென்னையன்னையினி யாறுகென்றெதிர் வணங்குவார்
கொட்டுவார்மண லுடைப்படங்கமகிழ் கொள்ளுவார் குரவை துள்ளுவார்
ரெட்டுமாதிரமு மெட்ட வாயொலி யெழுப்புவார் பறையிரட்டுவார் . 6

திருவிளையாடல் புராணத்தின் இக்கூற்றுக்களை நோக்கும் பொழுது பறை அடித்து அறிவித்தல், வெள்ளம் ஏற்பட்டு உடைந்த கரையை அடைக்க மக்கள் அனைவரும் பங்கேற்றல், உடைப்பின் நீளத்தை அளந்து அவரவர்களுக்கு அடைக்க வேண்டிய பகுதியின் அளவினை நிர்ணயித்தல், மண்வெட்டுவதற்குரிய வெட்டுக்கருவிகள் குறித்த குறிப்புகள், மண் அள்ளுவதற் குரிய கூடைகள், கரையைப் பலப்படுத்த மண்ணோடு பசுந்தழைகளையும், வைக்கோலையும் பயன்படுத்துதல், கரை உடைந்த இடங்களில் குதிரைப் பாய்ச்சலாக மரங் களை நடுதல், அக்குதிரை மரத்தின் அடியில் வைக்கோலை பாம்பு போல் உருட்டி அணைத்து வைத்தல், மண் இடுதல், அந்த மண்ணை கெட்டிப் படுத்துதல் போன்ற பலதரப் பட்ட தொழில்நுட்பக் கூறுகளை இங்கு காண்கிறோம்.

இயற்கையின் சக்தி எல்லையற்றது. ஆற்றில் வரும் வெள்ளத்தால் பல நகரங்கள் அழிவுற்றன என்று வரலாறுகள் கூறுகின்றன. இன்றும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கக் காண்கிறோம். வெள்ளத்தால் சிந்துநதிக் கரையில் இருந்த ஹரப்பா, மொஹஞ்சதாரோ நகரங்கள் அழிந்தன என்று அகழ்வாய்வினால் தெரியவந்துள்ளது. இவ்வாறு

வெள்ளங்கள் ஏற்பட்டதைப் பற்றியும் அதனைத் தடுக்க எடுக்கப் பெற்ற முயற்சிகளைப் பற்றியும் கல்வெட்டுக்கள் கூறும் சில செய்திகளைக் காண்போம்.

பண்டைச் சோழ மன்னர்களின் உள்நாட்டுத் தலைநகரமாக விளங்கியது உறையூர். உறையூர் அழிந்ததற்குக் காரணம் பலவகையாகக் கூறப்படுகின்றன. ஆனால் உண்மையில் நடந்தது என்ன ? உறையூரில் அகழ்வாராய்ச்சி நடந்த பொழுது குழிகளில் ஒரு பாள நிலையில் மணலும் களிமண்ணும் அடுக்கடுக்காக அடுத்தடுத்துக் காணப்பட்டன. அவற்றின் இடையே சிறிதும் பெரிதுமான கருங்கற்கள் புதைந்திருந்தன. ஒரு பெரிய வெள்ளப்பெருக்கினால் இவ்வாறு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை அது எடுத்துக் காட்டியது அகழ்வாராய்ச்சிக் கணிப்புப்படி வெள்ளம் ஏற்பட்ட காலம் கி.பி. 9 அல்லது 10 ஆம் நூற்றாண்டாகும். இதை மெய்ப்பிக்கும் வகையில் உறையூருக்கு அருகில் உள்ள அல்லூர் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒரு செய்தியை நமக்குத் தருகிறது.

> ஊரின் வடகிழக்கின் னிலம் அல்லூர் காவிரி பெருகிக் குலை
> உடைத்து மணலிட்டுப் புன்செய்யாக கிடக்க
> ஆறேழாட்டைக் கால் பயிர் ஏறாதே பாழ்கிடக்க.

காவிரி வெள்ளத்தால் அல்லூர் கோயில் நிலங்கள் அழிந்தன என்று கூறுகின்றது. உறையூரிலிருந்து அல்லூர் சுமார் 5 கிமீ. தூரத்தில் உள்ளது. இவ்வெள்ளம் முதலாம் பராந்தக சோழனுடைய 37 ஆவது ஆட்சி ஆண்டில் ஏற்பட்டதாகக் கூறுகிறது. ஆகவே உறையூர் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் காவிரியின் பெருவெள்ளத்தால் அழிந்தது என்ற உண்மை விளங்குகின்றது.

விக்கிரம சோழனது 6 ஆம் ஆட்சி ஆண்டில் வெள்ளம் ஏற்பட்டு ஊர் அழிந்ததாக வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

இவ்வூர் யாண்டு 6வது
பெருவெள்ளம் கொண்டு ஊரும் போகமும்
அழிந்து அநர்த்தப்பட்டு இவ்வூரிறை இறுக்கைக்கு
உடலில்லாமையால் நீர் நிலம் விற்றுக் கொடுத்தோம்.

பாலாற்றில் வெள்ளம் வந்து வண்டல் படிந்த நிலங்களைச் செப்பனிட 12 கோல் நிலம் கூலியாக அளிக்கப் பட்டதாகத் திருமாற்பேற்றுக் கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

ஆற்றில் வெள்ளம் வரும்பொழுது அதிகமாக வரும் நீரை, ஆற்றின் கரையிலிருந்து சிறு கால்வாய்களின் மூலம் கொண்டு சென்று நிலங்களுக்கு நீர் பாய்ச்சும் முறை இருந்து வந்திருக்கிறது. இந்த அமைப்புக்கு வெள்ளக்கால் என்று பெயர். இந்த அமைப்பின் மூலமாக ஆற்றில் வரும் அதிகப்படியான நீர் சென்றுவிடுவதால் கரை உடையாது. அதிகப்படியான நீரையும் நிலங்களுக்குப் பயன்படுத்தலாம். பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் ஏகதீர மங்கலத்தைச் சார்ந்த அந்தணர்களுக்கு வேகவதி யாற்றிலும், பாலாற்றிலும் 'வெள்ளக் கால்களை அமைத்து' அதன் மூலம் நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சும் உரிமை அளித்ததாக ஒருகல்வெட்டு கூறுகின்றது.

சந்திரமௌளிப் பேராற்றில் வந்த வெள்ளத்தால் தண்ணீர் கோயிலின் அருகில் சாலை வரையில் வந்து பெருக்கெடுத்து ஓடியது. இதைக்கண்ட திருமறைக்காடுடையான் என்பவன் வெள்ளநீரை வடியச் செய்வதற்கும், ஆற்றின்

வெள்ளத்தால் ஊருக்கு ஏற்படும் துன்பம் மீண்டும் நடக்காமல் இருப்பதற்கும் ஆற்றின் போக்கையே மாற்றினான். ஆறு முன்பு ஓடிக்கொண்டிருந்த வழியும் அதன் அருகில் இருந்த கோயிலின் சில நிலங்களும், ஊரைச் சுற்றி வரும் இரண்டாவது சாலையாக மாற்றப்பட்டது. அச்சாலை 'திருமறைக்காடுடையன்' என பெயரிட்டு அழைக்கப்பட்டது. அவ்வாறு சாலையாகக் கோயில் நிலங்கள் மாற்றப்பட்டுவிட்டதால் கோயிலுக்கு 2 வேலி நிலம் தானமாக அளித்தான். இவ்வாறு வெள்ளத்தைத் தடுக்க எடுத்த முயற்சியைப் பற்றி ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுடைய 8 ஆம் ஆண்டைய திருக்குவளைத் தியாகராஜசுவாமி கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

மூன்றாம் இராஜராஜனின் திருமழபாடிக் கல்வெட்டு தெற்றி பெரியானான எதிரிலிச் சோழ மூவேந்தவேளான் என்பவன் இவ்வூருக்குச் செய்த நன்மைகளைப் பற்றிக் கூறுகின்றது.

> சண்பங்குழி தூர்ப்பித்து
> விக்கிரமசோழன் திருவீதியாக செய்விக்கையாலும்
> கொள்ளிடவாறு ஊனத்துறையில் இது தெற்கே
> பேத்து ஆறாக வெட்டி கரைசெய்து ஊர்க்கு
> ரக்ஷை செய்கையாலும்

மேற்கண்ட கல்வெட்டு வரிகளால் இவ்வூருக்குக் கொள்ளிட ஆற்றின் வெள்ளத்தால் துன்பம் உண்டாகி யிருக்கிறது என்று அறியலாம். கொள்ளிட ஆற்றின் வடகரையில் உள்ளது திருமழபாடி. இவ்வாறு சேதம் உண்டாகாமல் தடுக்க ஆற்றின் தெற்குப் பகுதியில் இருந்த நிலத்தை வெட்டி ஆறாகச் செய்து கரை அமைத்து ஊரை

காப்பாற்றியிருக்கிறான் என்பதை உணரலாம். ஆற்றின் வெள்ளத்தால் ஊருக்குச் சேதம் உண்டாக்காமல் இருக்க ஆற்றின் போக்கையே மாற்றி அமைத்திருக்கிறார்கள் என அறிகிறோம்.

வெள்ளம் ஏற்படுத்தும் அழிவைத் தடுப்பதற்கு எடுத்த வேறு முயற்சிகளைப் பற்றி விஜயநகர மன்னான சதாசிவராயரின் திருவரங்கக் கோயில் கல்வெட்டு கூறுகிறது. திருவரங்கத்தை காவிரிவெள்ளம் அழிப்பதைக் கண்ட ஒளக்குநாராயண திருவேங்கடய்யங்கார் என்பவர் திருவரங்கத்தின் மேற்குக் கரைக்கு எந்திரஸ்தாபனம் செய்தும், அய்யனார் உருவச் சிலையை அமைத்தும், காவிரியின் வடகரையில் நாணலை நட்டதாகவும் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டுக்களில் நீர் குறித்த சொற்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சோழப்பேரரசன் கரிகாலன் காவிரியின் இருகரைகளையும் வலிமையுடையதாகச் செய்ததோடு, பெருவெள்ளம் ஏற்படும் காலங்களில் சோழநாடு பேரழிவுகளுக்கு உட்படாத வண்ணம் கல்லணையிலிருந்து கொள்ளிடம் ஆற்றுக்கு நீர்ப்பெருக்கு வடியு மாறு வழிவகுத்தான். கல்லணை என்ற செயல் திட்டம் தொல்காப்பியம், பத்துப்பாட்டு போன்ற சங்கத் தமிழ் நூல்களில் கற்சிறை என்ற பெயரால் விளக்கப் பெறுகின்றது. ஆற்று நீரைக் கற்சிறைகளில் (கல்லணைகளில்) சிறைப்படுத்தி, பின்பு தேவைக்கேற்பப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதே பண்டைய நாள் நெறிமுறையாக இருந்துள்ளது. ஒரு அணையிலிருந்தோ அல்லது ஆறு, ஏரி, குளம் ஆகியவற்றிலிருந்தோ மதகு வழியாக நீரைக்கொண்டு சென்று நிலங்களுக்குப் பயன்படுத்தும்போது கடை நிலப் பகுதிக்கே முன்னுரிமை அளிக்கப்பெற்று வந்துள்ளது என்பதைப் பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகர அரசு காலத்துக் கல்வெட்டுச் சாசனங்கள் மிகத்தெளிவாக எடுத்துரைக்கின்றன.

திருவாலங்காடு செப்பேடு, கரந்தைச் செப்பேடு போன்ற பல சோழர்காலச் செப்பேடுகளும், பல நூற்றுக்கணக்கான சாசனங்களும் (கல்வெட்டுக்களும்) ஒரு மதகிலிருந்து வெளியேறும் நீரை எத்தகைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பயன்படுத்த வேண்டும் என்ற நெறிமுறைகளை மிகத்தெளிவாக எடுத்துக்கூறுகின்றன. ஓர் ஊர் வழியாக அடுத்த ஊருக்குச் செல்லும் வாய்க்கால்

நீரை அந்த ஊர் மக்கள் இடையில் கரையை உடைத்துப் பாய்ச்சுவதோ, ஏற்றம் கொண்டு பாய்ச்சுவதோ கடுமை யான குற்றம் என்று அச்சாசனங்கள் தெளிவுபட விவரிக் கின்றன. ஆற்றிலிருந்தோ அல்லது வாய்க்கால் வழியாகவோ நீர்ப்பாசனம் அமையும்போது கடைமடையிலிருந்து வரிசையாகத் தலைமடை வரை பாசனம் பெறவேண்டும் என்பதும் விதிமுறையாகும். இதனை வரிசையிட்டுப் பாய்ச்சுவது எனக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. வரிசையிட்டுப் பாய்ச்சுவதுப் பற்றிக் குறிப்பிடும் இரண்டு சுவையான தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் வடவேங்கடம் எனும் திருப்பதியில் இன்றும் உள்ளன.

சோழப் பேரரசின் கீழ் குறுநில மன்னர்களாய்த் திகழ்ந்த யாதவராயர்கள் சோழராட்சிக்குப் பின்பும் திருவேங்கடப் பகுதியை ஆட்சி புரிந்து வந்தனர். சோழப் பேரரசன் மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1178-1218) காலத்திலிருந்து 51 ஆண்டுகள் ஆட்சி செய்த வீர நரசிங்க தேவயாதவராயரின் கல்வெட்டு ஒன்றும், அவருக்குப் பின்பு ஆட்சி பீடமேறிய ரங்கநாதயாதவராயரின் கல்வெட்டு ஒன்றும் ஏரி நீர்ப்பாசன முறையில் அந்நாளில் மேற்கொள்ளப்பெற்ற மிகச் சிறந்த நடைமுறைகளை விவரிக்கின்றன. இக்கல்வெட்டுக்கள் கீழ்த்திருப்பதி வைணவ ஆலயத்தில் உள்ளன.

முதல் கல்வெட்டில் யாதவ நாராயணன் என்பான் திருநந்தவனம் ஒன்றினை அமைத்ததோடு பூக்களுக்காக ஓடை ஒன்றினையும் வெட்டு வித்தான். அவைகளுக்கு நீர்பாய்வதற்காகத் திருப்பதி பேரேரியிலிருந்து வழியும் வகுத்தான். தனது கொடையை வீரநரசிங்க தேவயாதவராயரின் 51ஆம் ஆண்டு கல்வெட்டில் பதிவும் செய்தான். அச்சாசனத்தில் ஏரிநீரை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் மிகத்தெளிவாகக் குறிப்பிட்டு உள்ளான்.

பொங்குநீர் பாயும் நாள் பொங்கு நீர்ப் பாய்ச்சிக் கொள்ளவும். வரிசையிட்டுப் பாயும் நாள் பங்கு விழுக்காடு நீர்ப் பாய்ச்சிக் கொள்ளவும், ஏரி வற்றினால் இத்திரு நந்தவனத்திலே பூட்டையிட்டு நீர் பாய்ச்சிக் கொள்ளவும் என்பது அக்கல்வெட்டு கூறும் நீர்ப்பாசனக் கட்டுப்பாடுகளாகும். வெள்ளக் காலங்களில் ஏரி நீரைப் பயன்படுத்துவதில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை. மாறாக ஏரியில் நீர் குறைந்திருக்கும்போது கடைமடையி லிருந்து வரிசைப்படி ஏரிநீர்க் கொள்ளளவுக்கு ஏற்பவும். பாய்நிலத்தின் அளவுக்கு ஏற்பவும், பங்கு விழுக்காடு அளவே நீர்ப்பாய்ச்ச வேண்டும். தலைமடையில் உள்ளவர் முதலில் பாய்ச்சிக் கொள்வதோ அல்லது அதிக நிலம் முழுவதற்கும் நீர்ப்பாய்ச்சுவதோ கூடாது என்பதுதான் இச்சாசனம் கூறும் நெறி முறையாகும். ஏரியில் நீர் வற்றிவிட்டால் அவரவர் நிலத்தில் உள்ள கிணறுகளி லிருந்து பூட்டை மூலம் நீர் பாய்ச்சுதல் வேண்டும் என்றும் கூறுகின்றது.

இரண்டாம் கல்வெட்டில் (ஸ்ரீரங்கநாத யாதவராயரின் கல்வெட்டில்) திருப்பதி பேரேரியிலிருந்து நீர்ப்பாய்ச்சும் வரைமுறைகள் பற்றி விளக்குமிடத்தில் மேலே கண்ட கல்வெட்டில் கூறப்பெற்ற வாசகங்கள் காணப்பெற்றாலும், மேலும் தெளிவாக காவேரி (ஏரியின் கொள்ளளவில் கால் பங்கு மட்டும்) நீர் உண்டானால் நில விழுக்காடு அளவுக்குரிய நீர்ப் பாயக்கடவதாகவும், இறைப்பானாலும் நில விழுக்காடு அளவுக்கே இறைச்சுக் கொள்ளவும் என்ற விளக்கம். கூறப் பெற்றுள்ளது.

வரிசையிட்டு நீர் பெறுதல், பங்கு விழுக்காடு அளவே நீர் பெறுதல் என்பது 900 ஆண்டுகளுக்கு முன்பு

நீரை அந்த ஊர் மக்கள் இடையில் கரையை உடைத்துப் பாய்ச்சுவதோ, ஏற்றம் கொண்டு பாய்ச்சுவதோ கடுமையான குற்றம் என்று அச்சாசனங்கள் தெளிவுபட விவரிக்கின்றன. ஆற்றிலிருந்தோ அல்லது வாய்க்கால் வழியாகவோ நீர்ப்பாசனம் அமையும்போது கடைமடையிலிருந்து வரிசையாகத் தலைமடை வரை பாசனம் பெறவேண்டும் என்பதும் விதிமுறையாகும். இதனை வரிசையிட்டுப் பாய்ச்சுவது எனக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. வரிசையிட்டுப் பாய்ச்சுவதுப் பற்றிக் குறிப்பிடும் இரண்டு சுவையான தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் வடவேங்கடம் எனும் திருப்பதியில் இன்றும் உள்ளன.

சோழப் பேரரசின் கீழ் குறுநில மன்னர்களாய்த் திகழ்ந்த யாதவராயர்கள் சோழராட்சிக்குப் பின்பும் திருவேங்கடப் பகுதியை ஆட்சி புரிந்து வந்தனர். சோழப் பேரரசன் மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1178-1218) காலத்திலிருந்து 51 ஆண்டுகள் ஆட்சி செய்த வீர நரசிங்க தேவயாதவராயரின் கல்வெட்டு ஒன்றும், அவருக்குப் பின்பு ஆட்சி பீடமேறிய ரங்கநாதயாதவராயரின் கல்வெட்டு ஒன்றும் ஏரி நீர்ப்பாசன முறையில் அந்நாளில் மேற்கொள்ளப்பெற்ற மிகச் சிறந்த நடைமுறைகளை விவரிக்கின்றன. இக்கல்வெட்டுக்கள் கீழ்த்திருப்பதி வைணவ ஆலயத்தில் உள்ளன.

முதல் கல்வெட்டில் யாதவ நாராயணன் என்பான் திருநந்தவனம் ஒன்றினை அமைத்ததோடு பூக்களுக்காக ஓடை ஒன்றினையும் வெட்டு வித்தான். அவைகளுக்கு நீர்பாய்வதற்காகத் திருப்பதி பேரேரியிலிருந்து வழியும் வகுத்தான். தனது கொடையை வீரநரசிங்க தேவயாதவராயரின் 51ஆம் ஆண்டு கல்வெட்டில் பதிவும் செய்தான். அச்சாசனத்தில் ஏரிநீரை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் மிகத்தெளிவாகக் குறிப்பிட்டு உள்ளான்.

பொங்குநீர் பாயும் நாள் பொங்கு நீர்ப் பாய்ச்சிக் கொள்ளவும். வரிசையிட்டுப் பாயும் நாள் பங்கு விழுக்காடு நீர்ப் பாய்ச்சிக் கொள்ளவும், ஏரி வற்றினால் இத்திரு நந்தவனத்திலே பூட்டையிட்டு நீர் பாய்ச்சிக் கொள்ளவும் என்பது அக்கல்வெட்டு கூறும் நீர்ப்பாசனக் கட்டுப்பாடுகளாகும். வெள்ளக் காலங்களில் ஏரி நீரைப் பயன்படுத்துவதில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை. மாறாக ஏரியில் நீர் குறைந்திருக்கும்போது கடைமடையி லிருந்து வரிசைப்படி ஏரிநீர்க் கொள்ளளவுக்கு ஏற்பவும். பாய்நிலத்தின் அளவுக்கு ஏற்பவும், பங்கு விழுக்காடு அளவே நீர்ப்பாய்ச்ச வேண்டும். தலைமடையில் உள்ளவர் முதலில் பாய்ச்சிக் கொள்வதோ அல்லது அதிக நிலம் முழுவதற்கும் நீர்ப்பாய்ச்சுவதோ கூடாது என்பதுதான் இச்சாசனம் கூறும் நெறி முறையாகும். ஏரியில் நீர் வற்றிவிட்டால் அவரவர் நிலத்தில் உள்ள கிணறுகளி லிருந்து பூட்டை மூலம் நீர் பாய்ச்சுதல் வேண்டும் என்றும் கூறுகின்றது.

இரண்டாம் கல்வெட்டில் (ஸ்ரீரங்கநாத யாதவராயரின் கல்வெட்டில்) திருப்பதி பேரேரியிலிருந்து நீர்ப்பாய்ச்சும் வரைமுறைகள் பற்றி விளக்குமிடத்தில் மேலே கண்ட கல்வெட்டில் கூறப்பெற்ற வாசகங்கள் காணப்பெற்றாலும், மேலும் தெளிவாக காவேரி (ஏரியின் கொள்ளளவில் கால் பங்கு மட்டும்) நீர் உண்டானால் நில விழுக்காடு அளவுக்குரிய நீர்ப் பாயக்கடவதாகவும், இறைப்பானாலும் நில விழுக்காடு அளவுக்கே இறைச்சுக் கொள்ளவும் என்ற விளக்கம். கூறப் பெற்றுள்ளது.

வரிசையிட்டு நீர் பெறுதல், பங்கு விழுக்காடு அளவே நீர் பெறுதல் என்பது 900 ஆண்டுகளுக்கு முன்பு

தென் இந்தியா முழுவதும் கடைப்பிடிக்கப்பெற்றுள்ளது என்பது திருவேங்கடத்துத் தமிழ்க் கல்வெட்டால் அறியப்பெறும் செய்தியாகும்.

திருப்பதி கல்வெட்டுக்கள் மட்டுமின்றி தமிழகத்தின் மற்ற பகுதிகளில் காணப்படும் பல்லவர், சோழர், பாண்டியர் கால கல்வெட்டுகளில் காணப்படும் பிற நீரில் தொடர்பான சொற்களைக் காண்போம்.

இந்நிலத்துக்கு "நீர்க்கீந்த வண்ணம்" நீர்ப்பாய்ச்சிக் கொள்ள என்று காணப்பெறும் கல்வெட்டு வரியில் நீர்க்கீந்த வண்ணம் என்ற சொல் நீர்ப் பங்கீட்டு முறைப்படி என்பதைக் குறிப்பிடுகிறது. (கி. பி. 1070)

"மேநீரும் கீநீரும் நீர்க்கீ விலையும்" என்ற கல்வெட்டுத் தொடரில் காணப் பெறும் நீர்க்கீவிலை என்ற சொல் நீர் அளிப்பதற்கு விலையாகப் பெறப்படும் காசு என்பதைக் குறிப்பதாகும். (கி. பி. 1016)

மஞ்சாடியும் உல்கும் ஓடக் கூலியும், நீர்க்கூலியும், ஈழம் பூச்சியும் இடைப்பாட்டமும் என்ற கல்வெட்டுச் சொற்றொடரில் காணப்பெறும் மேற்குறிப்பிட்ட நீருக்காகப் பெறப்படும் விலையையே குறிக்கும். (கி.பி.978)

இக்குளத்து "நீர்க்கோப்புக்கு" மேற்கும் இக்கல்வெட்டுச் சொற்றொடரில் காணப்பெறும் நீர்க்கோப்பு என்ற சொல் நீர்த் தேங்கும் நிலப்பரப்பையே குறிப்பதாகும். (கி. பி. 993)

இக்குளத்தால் "நீர்க்கோவையும்" என்ற இக்கல்வெட்டுச் சொற்றொடரில் காணப்பெறும் நீர்க்கோவை என்ற சொல் மேலே குறிப்பிட்ட நீர் தேங்கும் நிலப்பரப்பையே குறிப்பிடுவதாகும். (கி. பி. 961)

புதுக்குளத்து அய்யன் கோயிலுக்கும் இக்குளத்து நீர் கொள்வாய்க்கு மேற்கும் என்ற இக்கல்வெட்டுத் தொடரில் காணப்படும் "நீர் கொள்வாய்" என்ற சொல் நீரைக் கொணறும் வாய்க்கால் என்பதைக் குறிப்பிடுவ தாகும். (கி. பி. 1100)

விளக்கன் குழி நீர்க் கொல்லியும் இரட்டைக் கிணறும் என்ற இக்கல்வெட்டு வரியில் காணப்பெறும் "நீர்க்கொல்லி" எனும் சொல் நீர்த் தங்கும் பள்ளத்தைக் குறிப்பிடுவதாகும். (கி. பி. 1125)

குளத்தில் சால நீர் கோலுக்கும் என்ற இக்கல்வெட்டு சொற்றொடரில் காணப்பெறும் "நீர்கோல்" எனும் சொல் நீர்ப்பிடிப்பு என்பதை உணர்த்துவதாகும். (கி.பி. 905)

முகமண்டபஞ் செய்து நீர்த்தளித்தான் என்ற இக்கல்வெட்டுச் சொற்றொடரில் காணப்பெறும் "நீர்த்தளித்தான்" எனும் சொல் புனித நீராட்டினான் என்பதைக் குறிப்பதாகும். (கி. பி. 815)

திருக்கதவுடைய பெருமான் திருக்குறைக்கு பாயும் நீர் நக்கலுக்கு கிழக்கும் என்ற இக்கல்வெட்டு வரியில் காணப்பெறும் "நீர் நக்கல்" எனும் சொல் நீர்த்தேக்கத்தின் விளிம்பினைக் குறிப்பதாகும். (கி. பி. 982)

பழனக் கிடக்கை நீர் நாட்டு சொற்கண்ணாளர் என்ற இக்கல்வெட்டுத்தொடரில் காணப்பெறும் "நீர்நாடு" எனும் சொல் வளமுள்ள நாட்டினைக் குறிப்பதாகும். (கி. பி. 771)

நீர்நிலமும் புன் செய்யும் என்ற இக்கல்வெட்டுச் சொற்றொடரில் காணப்பெறும் "நீர் நிலம்" எனும் சொல் நன்செய் நிலத்தைக் குறிப்பிடுவதாகும். நீர் நிலன் என்ற சொல்லும் சில கல்வெட்டுகளில் கையாளப்பெறுகின்றது. (கி.பி.550)

கோட்படுவன இளங்கமுகே அலைபடுவன நீர்நிலையே என்ற இக்கல்வெட்டுச் சொற்றொடரில் குறிக்கப்பெறும் "நீர் நிலை" எனும் சொல் குளம், ஏரி, கண்மாய் முதலியவற்றைக் குறிப்பதாகும். (கி. பி. 1176)

வேள்விக் குமிழியால் நீர்படுவன என்ற கல்வெட்டு வரியில் காணப்பெறும் "நீர்படுவன" என்ற சொல் நீர் பாய்ச்சப்படுவன என்பதைக் குறிப்பதாகும். (கி.பி.809)

கீநோக்கின கிணறும் நீரும் நீர்ப் பாய்ச்சலும் வழியும் வழிப் போக்கும் என்னும் இச்சொற்றொடரில் காணப்பெறும் "நீர்ப்பாய்ச்சல்" என்ற சொல் நீர்ப் பாய்கின்ற இடத்தைக் குறிப்பதாகும். (கி. பி. 1220)

காடும் களரும் ஓடையும் உடைப்பும் உள்ளிட்டு நீர் பூசி நெடும்பரம் பெறிந்து என்ற சொற்றொடரில் காணப்பெறும் "நீர் பூசி" எனும் சொல் நீர்ப்பாய்ச்சி என்பதைக் குறிப்பதாகும். (கி. பி. 877)

இக்கூற்றோடு நீர் பெறுவதாக கிடந்த சவைப் பொதுக் கீழெல்லை என்ற இக்கல்வெட்டு வரியில் காணப்பெறும் "நீர் பெறுவது" எனும் சொல் தண்ணீர்ப் பாய்ச்சப் பெறுவது என்பதைக் குறிப்பதாகும். (கி. பி. 772)

எங்களுடன் நீர் வழக்காட்டுச் சுட்டி பிணக்கிண இடது என்ற இச் சொற்றொடரில் காணப்பெறும் "நீர்

வழக்காடு" எனும் சொல் நீரைக் குறித்துத் தகராறு என்ற பொருளைக் குறிப்பதாகும். *(கி. பி. 1156)*

இவ்வூர் இறையிலியும் தேவதான பள்ளிச் சந்தங்களில் நீர் விலையால் வந்த பொன்னும் நெல்லும் என்ற இக்கல்வெட்டுச் சொற்றொடரில் காணப்பெறும் "நீர் விலை" எனும் சொல் பாசன நீருக்கான வரி என்பதாகும். *(கி. பி. 985)*

திருவிக்கிரமனுக்கு இந்நிலத்துக்கு நீர்விலைக் கூலியும் சொல்லப் பெறாதோமானோம் சபையோம் இங்கு காணப்பெறும் "நீர்விலைக் கூலி" என்ற சொல் மேலே குறிப்பிட்ட பாசன நீருக்கான வரி என்பதையே குறிக்கும். *(கி. பி. 1008)*

மேற்கு நோக்கின் நீர் வீழ் தாழ்வும் விளக்கன் குழி நீர் கொல்லியும் என்ற இச்சொற்றொடரில் காணப் பெறும் "நீர் வீழ் தாழ்வு" என்பது தண்ணீர் வடிந்து தங்கும் பள்ளத்தைக் குறிப்பதாகும். *(கி. பி. 1125)*

நீர் அட்டு நெல் விளைவன என்ற இக்கல்வெட்டுச் சொற்றொடரில் காணப்பெறும் "நீர் அட்டு" எனும் சொல் நீர் பாய்ச்சி என்பதைக் குறிப்பதாகும். *(கி. பி. 811)*

நீர் அட்டுவானுக்கு நெல்லுப் பதின்காடியும் எனும் இவ்வரியில் காணப்படும் "நீர் அட்டுவான்" என்ற சொல் தண்ணீர் வார்ப்பவனைக் குறிப்பதாகும். *(கி. பி.941)*

திருமாளிகைப் பத்தியும் திருமடப் பள்ளியும் நீர் அறையும் அகத்து தலவிசையும் என்ற இச்சொற் கோவையில் காணப்பெறும் "நீர் அறை" என்ற சொல் திருக்கோயில்களில் தண்ணீர் வைத்திருக்கும் தனி அறையைக் குறிப்பதாகும். *(கி. பி. 1607)*

திருப்பெருநாம பரதேசி நீராகாரத்துக்கும் என்ற சொற்றொடரில் காணப்பெறும் "நீராகாரம்" எனும் சொல் பழஞ்சோற்றில் கலந்த நீரைக் குறிப்பதாகும். (கி. பி. 1664)

நீராட்டு பள்ளி பன்னிரு குடநீர் கொண்டு நீராட்டு பள்ளி ஆவிது என்னும் இக்கல்வெட்டுத் தொடரில் காணப்பெறும் "நீராட்டு பள்ளி" என்னும் சொல் நீராடும் இடத்தைக் குறிப்பதாகும். (கி. பி. 1000)

மாவடை குளவடை நீராணி புன்பயிர் கடமை பொன்வரி அந்தராயம் காணிக்கை என்ற இத்தொடரில் காணப்பெறும் "நீராணி" என்பது நீர்ப்பாசனம் மேற்கொள்பவரையும் அவருக்காக வசூலிக்கப்படும் வரியையும் குறிப்பதாகும்.(கி. பி. 1265) நீராணி வரி என்ற சொல்லும் சில கல்வெட்டுக்களில் காணப் பெறுகின்றது.

மண்ணை நாடு நீராரம்பம் அஞ்சில் இரண்டும் காட்டாரம்பம் நாழில் ஒன்றும் என்ற இக்கல்வெட்டுச் சொற்றொடரில் காணப்பெறும் "நீராரம்பம்" என்னும் சொல் நன்செய் நிலத்தைக் குறிப்பிடுவதாகும். (கி. பி. 1051)

திருக்கோயிலுக்குள்ளில் திருமடப்பள்ளி வாசலில் தாம் கட்டுவித்த நீராழி மண்டபத்தில் எனும் இத்தொடரில் காணப்படும் "நீராழி மண்டபம்" எனும் சொல் நீரால் சூழப்பட்ட மண்டபம் என்ற பொருள் தருகின்றது. (கி. பி. 1506)

இவ்வூர்களில் நீரிலி நிலமாய் வரிசைப்படி இருத்து வருகிற என்ற இக்கல்வெட்டு வரியில் காணப் பெறும் "நீரிலி நிலம்" என்பது புன்செய் நிலத்தைக் குறிப்பிடுவதாகும். (கி. பி. 1219)

நீருண்டு நெல்லு விளைவதாக என்ற இக்கல்வெட்டு வரியில் காணப்பெறும் "நீருண்டு" என்ற சொல் நீர் பாய்ச்சப்பட்டு என்பதைக் குறிப்பதாகும். (கி. பி. 1003)

இக்குடும்பின் வழிய் நிலவொபாதி நீருண்ப தாகவும் என்ற இக்கல்வெட்டுச் சொற்றொடரில் காணப்பெறும் "நீருண்பதாக" என்ற சொல் நீர்ப்பாய்ச்சப் பெறுவதாக என்பதைக் குறிப்பதாகும். (கி. பி. 946)

துறவு கிணற்று நிலவொபாதி நீருரிமையும் துளை உரிமையும் என்ற இச்சொற்றொடரில் காணப்பெறும் "நீர் உரிமை" எனும் சொல் பாசனத்திற்கு நீர் இறைக்கும் உரிமை என்பதைக் குறிப்பதாகும். (கி. பி. 986)

இக்குளத்தில் கரை தமக்குள் யுயற்றிக் கொண்டு நீரேத்தம் பாத்து முன் குளத்தே கல் நாட்டிக் கொள்வ ராகவும் எனும் இச்சொற்றொடரில் காணப்பெறும் "நீரேத்தம்" என்ற சொல் நீர் தேக்க அளவைக் குறிப்ப தாகும். (கி.பி.1280)

இவ்வூர் ஏரி நீரேற்கும் அளவும் ஏற்று என்ற வரியில் காணப்பெறும் "நீரேற்கும்" எனும் சொல் நீர் கொள்ளும் என்பதைக் குறிப்பதாகும். (கி.பி.1018)

ஆலவயல் சிவற்களிக்க நீர் ஏற்றும் குளங் கல்லி கரை கற்பித்து என்ற வரியில் காணப்பெறும் நீரேற்றும் எனும் சொல்லுக்கு "நீர்ப்பாய்ச்சும்" என்பது பொருளாகும். (கி. பி. 1145)

நீருந்நீரோடு காலும் பெறுவதாக என்ற இக்கல்வெட்டு வரியில் காணப்பெறும் "நீரோடு கால்" என்பது பாசன வாய்க்காலைக் குறிப்பதாகும். (கி. பி. 885)

ஏத்தக் காலில் நிலையுரிமையும் நீரோடு கால் உரிமையும் விற்று விலையா வணஞ்செய்து குடுத்து என்ற இச்சொற்றொடரில் காணப்பெறும் "நீரோடு கால் உரிமை" என்ற சொல் பாசன வாய்க்காலைப் பயன்படுத்தும் உரிமையைக் குறிப்பதாகும். (கி.பி. 986)

இவ்வாறு நீர் குறித்த தமிழ்ச் சொற்கள் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளன. ஏறத்தாழ கி. பி. 500லிருந்து பல்வேறு காலகட்டங்களில் பல்லவர், சோழர், பாண்டியர் மற்றும் பிற அரச மரபினர்களின் கல்வெட்டுக்களில் நீர் குறித்த இச்சொற்களைக் காண இயலுகின்றது.

காலிங்கராயன் அமைத்த கால்வாய்

அரும்பாக்கிழான் மணவிற் கூத்தனான காலிங்கராயன் முதல் குலோத்துங்க சோழன் காலத்திலும், பின்னர் விக்கிரம சோழனிடத்திலும் படைத்தலைவனாக இருந்து புகழ் எய்தியவன். இவன் தொண்டை மண்டலத்து மணவிற் கோட்டத்து மணவில் எனும் ஊரில் பிறந்தவன். நரலோக வீரன், அருளாகரன், அரும்பாக்கிழான், பொன்னம்பலக் கூத்தன் என்ற பெயர்களாலும் அழைக்கப் பெற்றவன்.

இவனுடைய இளமைக்காலம் குறித்தும், இயற்பெயர் குறித்தும் விரிவாக அறிய குறிப்புகள் ஏதும் இல்லை. இந்தியாவின் ஆளும் தலைவர்களும் பெருமக்களும் நிலக்கிழார்களும் என்ற ஆங்கில வரலாற்று நூல் இவனை சாத்தந்தை காலிங்கராயர் என்று குறிப்பிடுகிறது. ஓலைப் பட்டயம் ஒன்றின் மூலம் காலிங்கராயனின் தந்தை பெயர் நஞ்சயன் எனவும், காலிங்கராயனின் இயற்பெயர் லிங்கய்யன் என்றும் அறிய முடிவதாக புலவர் செ. இராசு குறிப்பிட்டுள்ளார்.

காலிங்கராயன் தமிழிலும், வடமொழியிலும் புலமை கொண்டிருந்தார் என்றும், திருக்குறளுக்கு உரை இயற்றிய பத்து பழம் புலவர்களில் காலிங்கர் என்பவர் இக்காலிங்கராயரே எனவும், வடமொழி நூலான புருஷசூக்தமாலாவிற்கு தமிழில் விரிவுரை கண்டார் என்றும் கரூர்ப் பெரும்புலவர் அ.கணபதி குறிப்பிட்டுள்ளார்.

தில்லைக் கோயிலிலும், திருவதிகையிலும் எண்ணிலாத் திருப்பணிகள் புரிந்தவன். இவன் செய்த பணிகளை தில்லைக் கோயிற் கல்வெட்டுப் பாடல்களும்,

திருவதிகைக் கோயில் கல்வெட்டுப் பாடல்களும் எடுத்துரைக்கின்றன. திருவதிகையில் நீர்வளம் காக்க இவன் மேற்கொண்ட பணிகளை அக்கல்வெட்டுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

இருபத்தைந்து பாடல்கள் அடங்கிய தொகுதியில் 14ஆம் பாடல் பின்வருமாறு உள்ளது.

வாரி வளம் சுரக்க வான் அதிகை நாயகர்க்கு
ஏரியும் ஊரும் இசைந்து அமைத்தான் - போரில்
கொலை நாடு வெஞ்சினவேல் கூத்தன் குறுகார்
மலை நாடு கொண்ட பிரான் வந்து

இப்பாடல் வழி நோக்கும்போது திருவதிகையில் மிகப் பெரும் ஏரி ஒன்றினை வெட்டுவித்து வளம் மேம்படச் செய்தான் என்பதை அறிகிறோம். இன்றும் அவ்வேரி திருவதிகை நகரில் நிலைத்து நின்று அவன் புகழ் பாடுகின்றது.

இதே கல்வெட்டுத் தொகுதியின் 16ஆம் பாடல்,

அருளாகர நல்லூர் ஆங்கு அமைத்த ஏரி
இருளார் களத்து அதிகை ஈசன் - அருளார
சென்றமைத்தான் தென்னாடன் சாவேற்றின் - தின் செருக்கை
அன்று அமைத்தான் தொண்டையர் கோன் ஆங்கு

என்று கூறுகின்றது. இப்பாடல் வழி நோக்கும்போது திருவதிகை நகரம் வளம் பெறுவதற்கு அருளாகர நல்லூர் எனும் ஊரிலும் ஒரு பேரேரியை இவன் வெட்டுவித்தான் என்பதை அறியலாம்.

கி. பி. 13ஆம் நூற்றாண்டில் தமிழகம் கண்ட மகத்தான சாதனையாக அமைந்தது காலிங்கராயன்

கால்வாய் வெட்டுவித்ததாகும். கொங்கு நாட்டில் ஓடி வரும் காவிரி எனும் பேராற்றில் பவானி என்ற ஆறு ஈரோட்டிற்கு வடக்காகவும், நொய்யல் என்ற ஆறு கொடுமுடிக்கு தெற்காகவும் காவிரியோடு சங்கமிக்கின்றன. இவ்விரு நதிகளையும் இணைத்து காவிரியின் போக்கிற்கு இணையாக மனித முயற்சியால் வெட்டப்பெற்ற ஒரு பெரும் கால்வாயே காலிங்கராயன் கால்வாயாகும்.

காவிரியை ஒட்டியுள்ள மேடு பள்ளங்கள் நிறைந்த இடத்தில் மிகவும் நுட்பமான பொறியியல் திறன் கொண்டு நிலத்தை நன்கு அளந்து திட்டமிட்டு ஆராய்ந்து இக்கால்வாயினை வெட்டி அமைத்துள்ளனர். நிலவியல், பொறியியல், கணிதம் போன்ற துறைகளில் காலிங்கராயர் நிரம்ப அறிவும், ஆற்றலும் பெற்றவராய்த் திகழ்ந்திருக்க வேண்டும். அதனாலேயே இப்பெரும் பணியைச் செய்திருக்க முடியும்

கல்வெட்டுகள் பிற வரலாற்றுத் தரவுகள் அடிப்படையில் நோக்கும் போது கி. பி. 1253இல் வீரபாண்டியனிடம் அரசியல் அலுவலராக இருந்த காலிங்கராயன் என்பான் 12 ஆண்டு காலம் முயன்று கி. பி. 1265ஆம் ஆண்டு இப்பணியை முடித்தான் என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். காலிங்கராயன் வீரபாண்டியனின் குறுநில அரசனாக ஆனபின் தம்முடைய பூந்துறை நாடு வளம் பெறும் பொருட்டு பவானியில் இடம் தேர்ந்து, இடமளிக்க மறுத்த பாளையக்காரன் வெள்ளை வேட்டுவனை வென்று நாட்டு மக்கள் உதவியுடன் காலிங்கராயன் அணைகட்டி கால்வாயையும் வெட்டினான். அதனால் என்றும் அழியாப் புகழ் பெற்றான்.

சாந்து வரு வானி நீரினும்
தீந்தண் சாயலன் மன்ற தானே

காலிங்கராயன் அணை கட்ட தேர்ந்தெடுத்த பவானி ஆறு இலக்கியப் புகழ் பெற்றதாகும். பதிற்றுப்பத்தில், சாந்து வரு வானி நீர் மென்மையான சாயலும், தூய்மையும், தண்மையும் உடைய சேரன் இளஞ்சேரல் இரும்பொறையின் திருமேனிக்கு உவமையாகக் கூறப் படுகின்றது. கொங்கு நாட்டில் உள்ள ஆறுகளை எல்லாம் தொகுத்துப் பின்வருமாறு கொங்கு மண்டல சதக ஆசிரியர் கூறுகின்றார்.

திருமணி தொப்பைபூங் காவேரி
வானியும் செய்யநதி
தருமணி காஞ்சி பொருநை நள்
ளாறொடு சண்முகமும்
குருமணி பாலை நதி வாழை
காரி குடவந்தியும்
வருமணி சண்பகம் சிற்றாறு
சூழ் கொங்கு மண்டலமே !

என்பது அப்பாடலாகும். இப்பாடலில் கங்கையிற் புனிதமாய் காவிரியுடன் இணையாகக் கூறப்பெறும் பெருமை பெற்று விளங்குகிறது வானி ஆறு.

வடகொங்கில் வானியாற்றில் என வரும் வேதாந்த தேசிகர் கூற்று வானியாறு வடகொங்கு நாட்டில் பாய்கிறது என்பதை தெரிவிக்கிறது. எனவே பூந்துறை நாட்டின் வடக்கு எல்லையாக வானி ஆறு விளங்கும் தன்மையை அறியலாம். பூந்துறை நாட்டில் பாயும் நான்கு ஆறுகளில் இரண்டாவதாக வானியாற்றை வைத்துப் பாடுகின்றார். சென்னிமலை ஆண்டவர் பிள்ளைத்தமிழ் நூலாசிரியர் குந்தாணி சுவாமிநாத கவிராயர்.

சரச காவிரி வாணி காஞ்சி அனுமையும்
சதுர்வித நதி

என்று கூறும் அவ்வாசிரியர் மற்றொரு இடத்தில் வானியாற்றை தெய்வ வானி என்றும் குறிப்பிடுகின்றார். சிந்தையள்ளும் சந்தக் கவிகள் பாடிய அருணகிரிநாதர் பவானியில் எழுந்தருளியுள்ள முருகனைப் புகழ்ந்து பாடும் பொழுது சிலை வேட சேவர்க் கொடியோனே திருவாணி கூடல் பெருமாளே என்றழைக்கின்றார். செஞ்சொற் கரைசை திருவானிக் கூடல் என்று கொங்குமண்டல சதகம் உரைக்கின்றது. இதே நூலில் கோலம் மிகுந்த பவானியும் பொன்னிறம் கூடுதுறை என்று கூறுகிறது.

அவிநாசித்தல புராணம், பூந்துறைப் புராணம் போன்ற பல புராண நூல்களிலும், சிறு பிரபந்தங்கள் பலவற்றுள்ளும், பிங்கல நிகண்டு, திவாகர நிகண்டு போன்ற நிகண்டுகளிலும் பவானி ஆறு புகழப் பெறுகின்றது. இவ்வாறு புகழ்பெற்ற இப்பவானியாறு பொன்னியோடு கூடும் துறைக்கு அருகில் அவ்வாற்றின் குறுக்கே காலிங்கராயன் தன் பெயரால் அணை ஒன்றை கட்டுவித்தான். அதுவே காலிங்கராயன் அணையாகும்.

காலிங்கராயன் அணை கடல் மட்டத்திலிருந்து 534அடி உயரத்தில் உள்ளது. இங்குதான் காலிங்கராயன் கால்வாய் வெட்டுவிக்கப்பெற்று தெற்கு நோக்கி ஓடுகின்றது. இக்கால்வாய் முடியும் இடமான நொய்யல் ஆறு காஞ்சி என்றே அழைக்கப்பெற்றது. அவ்வாற்றை "மீ கொங்கில் அணி காஞ்சி" என்று சுந்தரமூர்த்தி நாயனார் தம் பதிகத்தில் கூறியுள்ளார். இக்காஞ்சி நதி காவிரியில் கலக்குமிடம் கடல் மட்டத்திலிருந்து 412. 48அடி உயரத்தில் உள்ளது. பவானியின் (அணையின்) தொடக்கத்தி லிருந்து நொய்யலில் அக்கால்வாய் சங்கமமாகும் இடம்

வரை உள்ள நேர்கோட்டுத் தொலைவு 32மைல்கள் ஆகும். ஆனால் இக்கால்வாய் வளைந்து, வளைந்துச் செல்வதால் அதன் நீளம் 57 மைல்களாக நீண்டுள்ளது. காலிங்கராயன் கால்வாய் பவானியிலிருந்து நேராக நொய்யல் வரை செல்லுமானால் விளை நிலங்களுக்கு தண்ணீர் பாய வாய்ப்பே இல்லாமல் இருந்திருக்கும். எனவேதான் நீர் தேங்கி நின்று வயல்களுக்குப் பாய்ந்து வளப்படுத்துவதற்காகவும் நீரின் வேகத்தைக் குறைத்து கரைக்கு வெள்ளத்தினால் ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதற்காகவும், கால்வாய் வளைந்து, வளைந்து மேட்டுப்பாங்கான இடத்திலேயே தொடர்ந்து செல்கிறது. இது மிகச்சிறந்த பொறியியல் திறத்தை வெளிப்படுத்தக் கூடியதாகும். காலிங்கராயன் கால்வாய் நொய்யலோடு கலக்குமிடத்தை மக்கள் கூடுதுறை என்றும், கூட்டாற்று மூலை என்றும் அழைக்கின்றனர். இக்கூடுதுறையில் வந்து விழும் காலிங்கராயன் கால்வாய் அகலத்தில் சுருங்கி மூன்று அடி அளவிற்கே உள்ளது.

காலிங்கராயன் கால்வாயில் இருந்து மலையம் பாளையம் பிரிவு வாய்க்கால், பெரியபட்டம் பரிசோதனை வாய்க்கால், ஆவுடையா பாறை பிரிவு வாய்க்கால் என்று மூன்று வாய்க்கால்கள் பிரிந்து பவானிக்கும், நொய்யலுக்கும் இடைப்பட்ட பகுதியும், வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் காவிரியின் மேற்குக் கரையில் அமைந்ததுமான பூந்துறை நாடு என்னும் கொங்கு நாட்டின் ஒரு பகுதி நீர் வளம் பெற்று நிலவளத்தால் செழித்துத் திகழ காரண மாகின்றது.

சோழநாட்டில் காவிரிக்கரை வினியோகம் என்ற வரி வசூலிக்கப்பட்டதைப் போன்று, காலிங்கராயன் காலத்தில், இக்கால்வாய்ப் பராமரிப்பிற்காக, காலிங்கராய வினியோகம் என்ற வரி வசூலிக்கப்பட்டது.

கி. பி. 1265இல் பாசன வசதி தரத்தொடங்கிய காலிங்கராயன் கால்வாய் இன்று வரை அப்பணியைத் தொடர்ந்து ஆற்றிவருகின்றது. 800ஆண்டுகளுக்கு முற்பட்ட இப்பாசன வாய்க்கால் தமிழகத்தில் உள்ள பெரும் வாய்க்கால்களுள் ஒன்றாக விளங்குகின்றது. சோழ நாட்டில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வெண்ணாற்றில் கச்சமங்கலம் என்னுமிடத்தில் தடுப்பணைத் தோற்றுவித்து வடகரையில் திகழும் ஆர்க்காட்டு கூற்றமும், தென்கரையில் அமைந்த தஞ்சாவூர் கூற்றமும் முறையே தீன சிந்தாமணி வாய்க்கால் மற்றும் ஆனந்த காவேரி என்ற இரண்டு கால்வாய்கள் மூலம் வளம்பெறச் செய்த அழிசி, சேந்தன் என்ற சோழர் தலைவர்களின் சாதனை போன்றே பாண்டியனின் கொங்கு நாட்டுத் தலைவனாக விளங்கிய காலிங்கராயனின் கால்வாய்த் திட்டம் ஒத்து விளங்குவதை நோக்கும்போது தமிழகத்தின் நீர் மேலாண்மை மரபுவழி செயலாக்கங்கள் பற்றி அறிய இயலுகின்றது.

விநாயகர் அகவல்
பதிப்பில்
காணப்படும் மாறுபாடு

ஆதியுலாவினை சிவபெருமான் உறையும் கயிலாயத்தில் அரங்கேற்றம் செய்யும் பொருட்டு குதிரை மீதேறி சேரமான் பெருமான் நாயனாரும், வெள்ளானை மேலேறி சுந்தரமூர்த்தி நாயனாரும் செல்கின்றனர். செல்லும் வழியில் சேரமான் பெருமான் ஔவையாரை அழைக்காமல் வந்துவிட்டோமே என்று எண்ணுகிறார். அவர் எண்ணிய உடனே விநாயகரை பூசித்துக்கொண்டிருந்த ஔவையாரின் மனதில் இச்செய்தி தெரிந்து, தானும் அவர்களுடனே கயிலைக்குப் போக விருப்பம் கொண்டு விநாயகர் பூசையை வேகவேகமாகச் செய்ய ஆரம்பித்தார். அதனைக் கண்ட பிள்ளையார், ஔவையாரைப் பார்த்து நீங்கள் நியமப்படி பூசை செய்யுங்கள், நான் உங்களை அவர்களுக்கு முன்னதாகவே கயிலாயம் கொண்டு சேர்க்கிறேன் என்று கூற, ஔவையாரும் அவ்வாறே பூசை செய்து முடித்தார். உடனே விநாயகர் தன் துதிக்கையால் எடுத்துவிட ஔவையார் கயிலாயத்தை அடைந்தார். தங்களுக்கு முன்னரே கயிலை வந்தடைந்த ஔவையைக் கண்டு சேரமான் பெருமான் ஆச்சரியம் அடைந்தார்.

ஔவையார் விநாயகரைப் போற்றிப் பாடிய அகவலே விநாயகர் அகவல் என்று போற்றப்பெறுகின்றது. இப்பாடல் எழுபத்து நான்கு அடிகள் கொண்ட நிலைமண்டல ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது. அகவல் என்ற சொல்லுக்கு அழைத்தல் என்னும் பொருள் உண்டு. திருவருள் புரியுமாறு வேண்டி விநாயகரைப் பரவிப் பணிந்து அழைத்தல் என்றும் பொருள் கொள்ளலாம்.

தொன்றுதொட்டு நம் நாட்டில் விநாயகர் வழிபாடு நடைபெற்று வருகின்றது. இவ்வழிபாட்டை மேற்கொள்பவர்களுக்குத் தோத்திர நூலாக விளங்கிவருவது விநாயகர் அகவலே ஆகும். இத்தகு நூல் சுவடி வடிவிலிருந்து அச்சுநூலாகப் பதிப்பிக்கப்பெற்று இன்றைக்கு ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் ஆகியிருக்கலாம்.

கி. பி. 1854ஆம் ஆண்டு நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகர் பொன்னம்பலம் பிள்ளையால் சென்னை வித்யாநுபாலனயந்திர சாலையில் அச்சில் பதிக்கப்பெற்று வெளிவந்த விநாயகர் அகவலை அடிப்படையாகக் கொண்டே, தொடர்ந்து 1939ஆம் ஆண்டு சென்னை, திருவொற்றியூர் டி.ஆர்.பாலகிருஷ்ண முதலியார் அவர்களால், கலைமகள் விலாச பிரஸில் பதிப்பிக்கப் பெற்ற நூலும், 1988ல் திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட பதிப்பிலும், 2002ல் தஞ்சாவூர், மானம்புச்சாவடி, அருள்மிகு கற்பகவிநாயகர் திருக்கோயில் சிவனடியார்கள் வார வழிபாட்டுக்குழு வெளியிட்ட பதிப்பிலும், மேலும் பல பதிப்புக்களிலும் பாடலடிகள் ஒன்றாகவே காணப்படுகின்றன. மூலச்சுவடியினை ஒப்புநோக்காமல் முதல் பதிப்பினை அடியொற்றியே அடுத்தடுத்த பதிப்புகள் வெளிவந்துள்ளதைக் காணமுடிகிறது.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த் துறையில் (எண். 2349) இடம்பெற்றுள்ள விநாயகர் அகவல் சுவடியில், முன்னர் வெளிவந்த அச்சுநூல்களில் இடம்பெறாத நான்கு அடிகள் காணப்பெறுகின்றது. மேலும் பல சொற்களும் அச்சுவடியில் மாறுபட்டுள்ளன. அவைகள் இப்பதிப்பில் அடிக்குறிப்பிட்டுக் காட்டப்பெற்றுள்ளது. இந்நூலகச் சுவடியில் இடம்பெறாமல் அச்சு நூல்களில் மட்டுமே காணப்பெறும்

இரண்டு அடிகள் தனியே கீழே கொடுக்கப்பெற்றுள்ளன. முதல் அச்சுநூல் வெளிவந்த பின்னர் மூலச்சுவடியினை ஒப்புநோக்காமல் முதல் நூலினைக் கொண்டே அடுத்தடுத்த பதிப்புகள் வெளிவந்ததே இத்தகு விடுபாட்டிற்கு காரணமாய் இருத்தல் கூடும். முதல் பதிப்பின்போது மூலச்சுவடியில் இவ்வடிகள் சிதைந்து போயிருத்தலும் கூட, அவ்வடிகள் அச்சு ஏற இயலாமல் போயிருக்கக்கூடும்.

இந்நூலகத்தின்கண் உள்ள மூலச்சுவடியினை ஒப்புநோக்கி, திருந்திய பதிப்பாகப் பதிப்பிக்கப்பெறும் விநாயகர் அகவலானது, விநாயகர் வழிபாடு செய்வோருக்கும், தமிழ் ஆய்வாளர்களுக்கும், புதிதாகச் சுவடியியல் பதிப்பில் ஈடுபடும் மாணவர்களுக்கும் பேருதவி புரியும் என்று நம்புகிறேன்.

ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

(பிள்ளையார் பேரில் அகவல்)

சீதக் களபச் செழுந்தா மரை*ப்பூம்
பாதச் சிலம்பு பல இசை பாட
காரணத் தண்டை கணைக்கால் சிலம்பும்[1]
பூரணக் கதலியைப் போற்றுடை யழகும்[2]
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்

வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கொம்பும்*
வேழ முகமும் வெண்ணுதற்செந் தூரமும்*
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழும்பொன்* மார்பும்
அற்புதம் நின்ற கற்பகக் களிறே !

தற்பரமான சதா சிவங் காட்டி[3]
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான-இது 15ஆவது பாடலடியாக முன்னர் வந்த அச்சுநூல்களில் காணப்பெறுகின்றது.

1, 2, 3 அடிக்குறிப்புள்ள பாடலடிகள் இந்நூலகச் சுவடியில் காணப்பெறுகின்றது. முன்னர் வெளிவந்துள்ள பதிப்புகளில் இவ்வடிகள் காணப்பெறவில்லை.

சொல் வேறுபாடுகள்: *செழுந்தாமரை-செந்தாமரை, கொம்பும்-கோடும், வெண்ணுதற் செந்தூரமும்-விளங்கு சிந்தூரமும், திகழும் பொன்-திகழ் ஒளி.

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்

திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் புந்தியிற்* புகுந்து
குருவடி வாகிக் கூறுதல் செய்து*
திருவடி வைத்துத் திறம்இது பொருள் என
வாடா வகைதான் வந்தெனக் கருளி*

கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் களித்து*

கருவிகள் ஒடுங்குங் கணக் கறிவித்து*
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தானெனக் கருளி*
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
அன்புறு கதவால்* அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கமலங் குறித்து*
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றுஎழு பாம்பின் நாவில் உணர்த்திக்

சொல் வேறுபாடுகள்: * புந்தியிற்-உளந்தனிற், கூறுதல் செய்து-குவலயந் தன்னில், வந்தெனக் கருளி-மகிழ்ந்தெனக் கருளி, இனிதெனக் களித்து-இனிதெனக் கருளி, கணக்கறி வித்து-கருத்தினை அறிவித்து, தானெனக் கருளி-தந்தெனக் கருளி, அன்புறு கதவால்-ஐம்புலக் கதவை, கமலங் குறித்து-கபாலம் காட்டி .

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்படச் சொல்லி*
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த வாரமும்*
குமுத சகாயன் குணத்தையுங் காட்டி*
இடைச்சக் கரத்தி னெட்டு* நிலையும்
உடற்சக் கரத்தின் உயிர்ப்பையுங்*காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மான தோரென்பத்தோ ரட்சரம்*
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தி லிருத்தி கபால வாசல்*
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையை முதலே*களைந்து
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒருவெளி யாக்கி*
கருவெளி வரா கணக்கறி வைத்து[4]
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்

***அருள் தரும் ஆனந்தத்து அமுத்திஎன் செவியில்*-இது 63ஆவது பாடலடியாக முன்னர் வந்த அச்சுநூல்களில் காணப்பெறுகின்றது.**

சொல் வேறுபாடுகள்: * சொல்லி-உரைத்து, ஆதித்த வாரமும்-ஆதித்தன் இயக்கமும், காட்டி-கூறி, கரத்தினெட்டு-கரத்தின் ஈரெட்டு, உயிர்ப்பையுங்- உறுப்பையுங்,மானதோ ரென்பத்தோ ரட்சரம்-மாக இனிதெனக் கருளி, கருத்திலிருத்தி கபால வாசல்-கருத்தினிற் கபால வாயில் காட்டி, வினையை முதலே-வினையின் முதலை, ஒருவெளியாக்கி-ஒன்றிடம் என்ன,

4. இக்குறியிடப்பட்டுள்ள பாடலடி இந்நூலகச் சுவடியில் காணப்பெறுகின்றது. முன்னர் வெளிவந்துள்ள பதிப்புகளில் இவ்வடி காணப்பெறவில்லை.

சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் பூட்டி[x]
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே நாட்டி[x]
வேடமும் நீறும் விளங்க முன்னிறுத்திக்[x]
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி (70)

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலை தெளிவைத்துத்[x]
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்டருள்[x]
வித்தக விநாயக விரைகழல் சரணே. (74)

சீதக்களபம்-குளிர்ந்த கலவைச் சாந்தணிந்த; *செழுந்தாமரைப்பூ*- செழுமையான தாமரை மலர் போன்ற; *பாதச் சிலம்பு*-திருவடிகளில் அணியப்பெற்ற சிலம்புகள்; *பல இசைபாட*-பலவகை ஓசை கொண்டு ஒலிக்கவும்; *காரணத்தண்டை கணைக்கால் சிலம்பும்*-கணைக்காலில் அணிந்துள்ள தண்டை எனும் சிலம்பும்; *பூரணக் கதலியை*-கதலி- வாழைப்பழம்; *போற்றுடையழகும்*-மிகுந்த அழகும்; *வன்னமருங்கில்*-அழகிய இடையில்; *பொன் அரைஞாணும்*-பொன்னால் செய்யப்பெற்ற அரைக்கொடியும்; *பூந்துகில் ஆடையும்*-மெல்லிய வெண்பட்டாடையும்.

அழகு வளர்ந்து எறிப்பவும்-கண்டார்க்குப் புதிது புதிதாய் அழகு தோன்றி விளங்கவும்; *பேழை வயிறும்*-பெட்டி போன்ற வயிறும்; *பெரும் பாரக் கொம்பும்*-பெரிய பருத்த ஒற்றைக்கொம்பும்; *வேழ*

சொல் வேறுபாடுகள்: X சிவலிங்கம் பூட்டி-சிவலிங்கம் காட்டி, கரும்புள்ளே நாட்டி-கரும்புள்ளே காட்டி, விளங்க முன்னிறுத்தி-விளங்க நிறுத்தி, கரத்தின் நிலை தெளிவைத்து-கருத்தின் நிலை அறிவித்து, தந்தெனை ஆண்டருள்-தந்தெனை ஆண்ட.

முகமும் - யானை முகமும்; வெண்ணுதற் செந்தூரமும்- நெற்றியில் விளங்குகின்ற சிவந்த பொட்டும்; அஞ்சு கரமும்-ஐந்து கைகளும்; அங்குச பாசமும்- துதிக்கையில் உள்ள அமிர்த கலசமும், ஓரிரண்டு கைகளில் தங்கிய மோதகமும், ஒடிந்த கொம்பாகிய எழுத்தாணியும் தவிர, வேறிரண்டு கைகளில் விளங்கும் யானைத் தோட்டியும், பாசக் கயிறும் ஆகிய படைக்கலங்களும்.

நான்ற வாயும்-கீழே தொங்குகின்ற வாயும்; நால் இரு புயமும்-நான்கு பெரிய தோள்களும்; மூன்று கண்ணும்-மூன்று கண்களும்; மும்மதச் சுவடும்-கன்னமதம், கை மதம், கோச மதம் ஆகிய மும்மதம் பொழிதலாகிய தழும்பும்; இரண்டு செவியும்-இரண்டு காதுகளும் இலங்கு பொன்முடியும்- தலையில் விளங்குகின்ற அழகிய கிரீடமும்; திரண்ட முப்புரிநூல்-மூன்று புரிகள் சேர்த்து முறுக்கப்பெற்ற பூணுலானது; திகழும் பொன் மார்பும்-விளங்குகின்ற ஒளியுள்ள மார்பும்; நெஞ்சில் குடிகொண்ட-அடியவர்களது நெஞ்சினில் எப்பொழுதும் நிலைத்திருக்கிற. நீலமேனியும்-நீலநிறமுள்ள உடம்பும்.

தற்பரமான சதாசிவங்காட்டி-ஆன்மாவிற்கு அதீதமாகிய சிவத்தைக் காட்டி; அற்புத கற்பகக் களிறே-எவரும் அதிசயிக்கும் வல்லமையுள்ள கற்பக விநாயகக் கடவுளே; முப்பழம் நுகரும்- வாழை, மா, பலா ஆகிய மூன்று கனிகளையும் உண்கின்ற; மூஷிக வாகன - பெருச்சாளியை வாகனமாகக் கொண்டவரே; என்னை - எளியேனை; இப்பொழுது - இச்சமயத்தில்; ஆட்கொள வேண்டி-அடிமையாகக் கொள்ளுதற்கு விரும்பி இந்நிலவுலகில்; எனக்குத் தாயாய்-என்மேல் பேரன்பு செலுத்தும் தாய் போலானவன்.

குருவடிவாகி எழுந்தருளி-அருட்குரவராய் முன்னே தோன்றி; கோடு ஆயுதத்தால்- நின் கையிலுள்ள கொம்பாகிய கருவியால்; கொடுவினை களைந்தும்-உலக இன்பங்களைத் தேடுதலின்றி என்னை நீக்கியும்; திருந்திய முதல் ஐந்தெழுத்தும்-ஒளியோடு விளங்கும் வேத ஆகமங்கள் முதலான வேட்டிப் பிரணவ ஐந்தெழுத்துக் களையும்; என் உளந்தனில் தெளிவாய்ப் பொருந்தவே வந்து புகுந்து-மல இருள் நீங்கிய அருள் ஒளியுடன் என் மனத்தில் தெளிவாய்ப் பதியுமாறு வந்து கலந்தும்; ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்-செவி, மெய், கண், வாய், மூக்கு ஆகிய ஐம்புலன்களையும், ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற புலன்களில் செல்லாது தடுக்கும் வழியை.

இன்புறு கருணையின் இனிது எனக்கு அளித்து-யான் பேரின்பம் அடைவதற்கு ஏதுவாகிய தனது பேரருளினாலே இனிமையாக எனக்கு அறிவித்தும்; கருவிகள் ஒடுங்கும் கணக்கறிவித்து-நிலம் முதல் நாதம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவக் கருவிகளும் ஒன்றன்பின் ஒன்றாய் ஒடுங்கிப் பின் தூவெளியிலும், அருளிலும், சிவத்திலும் ஒடுங்கிப் பேரின்பம் அடையும் கருத்தினைத் தெரிவித்தும்;அன்புறு கதவால் அடைக்கும்-அன்பெனும் கதவினால் அடைத்து.

ஒன்பது வாயிலையும்-கண் இரண்டு, காது இரண்டு, மூக்கு இரண்டு, வாய் ஒன்று, குதம் ஒன்று, குறி ஒன்று ஆகிய ஒன்பது உறுப்புக்களின் வழிகளையும்; ஒரு மந்திரத்தால்- ஒப்பற்ற ஓங்கார மந்திரத்தால்; அடைப்பது காட்டியும்-புருடனாகிய சீவன் புறத்தே போகாது தடுப்பதைக் காண்பித்தும்; ஆறு ஆதாரத்து-மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்கினை ஆகிய ஆறு ஆதாரங்களிலும்; அங்குச

நிலையும்- சுழிமுனை வழியே பிராணவாயு செல்லுமாறு யானைத் தோட்டி போல் அதனை அடக்கும் நிலையினையும்; பேறா நிறுத்தி-நிலை பெயராமல் இருக்கச்செய்து; பேச்சு உரை அறுத்து- பேசுகின்ற பேச்சை முற்றிலும் நீக்கி மௌனமாகச் செய்தும்; இடை பிங்கலையின் எழுத்து அறிவித்து-இடைக்கலைக்கு உரிய ஓர் எழுத்து மந்திரத்தையும், பிங்கலைக்கு உரிய ஓர் எழுத்து மந்திரத்தையும் அறிவுறுத்தி.

சுழிமுனை கடையில் காட்டியும்-சுழிமுனை நாடி முடிவில் அடையும் தலை ஓட்டில் உள்ள ஏழாம் சக்கரமாகிய சகஸ்ர சக்கரத்தைக் காண்பித்தும்; மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்-சூரியன், சந்திரன், அக்னியாகிய மூன்று மண்டலங்களையும் சேர்ந்துள்ள வீணாத்தண்டிலிருந்து; நான்று எழுபாம்பின்-தொங்குகின்ற பாம்பைப் போன்ற; குண்டலி அதனில் கூடிய அசபை-குண்டலி சக்தியோடு சேர்ந்திருக்கிற; நாவில் உணர்த்தி-நாவில் எழுதி அறிவித்தும்; விண்டு எழு மந்திரம்-வெளிப்பட்டு எழுகின்ற உரைக்கக் கூடிய ஓர் எழுத்து மந்திரத்தை; வெளிப்பட உரைத்தும்-வெளியே எனக்குக் கூறி உணர்த்தியும்.

மூலாதாரத்தில்-ஆறு ஆதாரங்களில் அடிச்சக்கரமாகிய மூலாதாரத்திலிருந்து; மூண்டு எழு கனலை-பற்றி எழுகின்ற விந்து அக்னியை; காலால் எழுப்பும்-பூரக, ரேசக, கும்பக, வாயுக்களினாலே எழுப்பும்; கருத்து அறிவித்தும்-கருத்தை எனக்கு உணர்த்தியும்; இடைச் சக்கரத்தின் எட்டு நிலையும்- சக்கரத்தின் எட்டு நிலையினையும்.

உடற் சக்கரத்தின் உயிர்ப்பையும் காட்டி- உடலாகிய இயந்திரத்திலுள்ள அவயங்கள், ஒன்று வேறு

ஒன்றைச் செலுத்தி நிற்கும் நிலையை யான் அறியக் காண்பித்தும்; அமுத நிலையும் - அமுதத்தை ஆக்கும் நிலையினையும்; ஆதித்தன் வாரமும் - சூரியன் இயங்கு தலையும்; குமுத சகாயன் குணத்தையும்-ஆம்பல் பூவிற்குத் தோழனாகிய சந்திரன் குணத்தையும்; கூறியும்- அறிவித்தும்; தூல சண்முகமும்-நீ ஆறுமுகங்களுடன் பருப் பொருளாய் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்; சூக்க சதுர்முகமும்-நீ நான்கு முகங்களுடன் கூடி நுண்பொருளாய் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்; எண்முகமாக-யான் நினைக்கிற முகங்களோடு கூடிய உருவங்களாக; எனக்கு இனிது அருளி-எனக்கு இனிமையாக உரைத்து அருளியும்; புரியட்ட காயம் எனக்குப் புலப்பட-மிக்க நுண்பொருளான உடலின் தன்மை எனக்கு நன்கு விளங்குமாறு; தெரி எட்டுநிலை தெரிசனப்படுத்தியும்-எட்டுத் தொகுதி உறுப்புகளின் நிலையையும் பிரித்துக் காண்பித்தும் (உடலை ஆக்குவனவாகிய ஸ்தூலபூதம், சூக்குமபூதம், ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, குண தத்துவம் ஒன்று, மூலப்பகுதி ஒன்று, கலாதி ஐந்து ஆகியவை)

மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்து-ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் பிணிப்பை முற்றிலும் நீக்கியும்; மாயாப் பிறவி மயக்கம் அறுத்து- மாயா காரியங்களால் ஆகிய உலகில் வந்து பிறக்கும் ஆசையை அகற்றியும்; தலம் ஒரு நான்கும் எனக்குத் தந்தருளியும்-நான்கு இடங்களிலும் பெறத்தக்க மெய்ஞ்ஞானத்தை உணர்த்தியருளியும், (சரியையாகிய உருவம், கிரியையாகிய அருவுருவம், யோகமாகிய அருவம், ஞானமாகிய அகண்டவெளி)

சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி-அச்சத்தத்துள் பரந்திருக்கும் சதாசிவ மூர்த்தியை எனக்குக் காண்பித்தும், (அண்டமாகிய உலகில் சூக்கும பூதமாகிய சத்தத்தை இயக்கு); சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டியும்-அடியார்கள் உள்ளத்தில் நிறைந்து விளங்கும் சிவலிங்க மாகிய சதாசிவ மூர்த்தியைக் காண்பித்தும்; என் செவியில்-என் காதுகளில்; உவட்டா உபதேசம் புகட்டி-இனிய உபதேச மொழிகளை அறிவுறுத்தியும்; தெவிட்டாத ஞானத் தெளிவைக் காட்டியும்- பேரின்பம் அடைவதற்கு ஏதுவாகிய தெளிந்த அறிவை யான் அறியக் காண்பித்தும்; திறம் இது பொருள் என-உறுதியாக நீயே உண்மைப் பொருள் என்று கூறி; திருவடி வைத்து-நின் திருவடிகள் இரண்டையும் என் தலை மீது வைத்துத் தீட்சை செய்து.

வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளி-பிறவித்துன்பத்தால் நான் வருந்தா வண்ணம் மகிழ்வுடன் எனக்குக் கருணை செய்து; அணுவிற்கு அணுவாய்-அணு ஓர் அண்டம் என்னும்படி, அவ்வணுவிற்கு அணுவாகப் பரந்து வீற்றிருந்து; அப்பாலுக்கு அப்பாலாய்-அண்டம் ஓர் அணு என்னும்படி ஏழு அண்டங்களையும் கடந்து அதற்கும் அப்பால் பெரிதாய்ப் பரந்து வீற்றிருந்து; கணு முற்றி நின்ற கரும்பு-கணுக்கள் முற்றி நன்கு விளைந்த கருப்பஞ்சாறு போலும் பேரின்பத்தை; உள்ளே காட்டியும்-என்னுள்ளே அத்துவிதமாய் நின்று உணரச் செய்தும்; கருத்தினில்-என் உள்ளக் கருத்தின் கண்; கபால வாயில் காட்டி-தலை ஓட்டுத்துவாரத்தின் வழியே மேல் உள்ள துவாதசாந்த வெளியைப் புலப்படுமாறு காண்பித்து; இருத்தி-என்னைத் துவாதசாந்தத்தில் இருக்கச் செய்து;

எனக்கு முத்தி இனிது அருளியும்- எனக்குச் சாலோக இன்பத்தை இனிமையாக நல்கியும்.

இருள் கடிந்து இருவினை தன்னை அறுத்து- ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் போக்கி நல்வினை தீவினைப் பயன்களை முற்றிலும் கெடுத்து; முன்னை வினையின் முதலே களைந்து-முன் செய்த நல்வினை தீவினைகட்குக் காரணமாயிருந்த ஆணவமலப் பிணிப்பினை அகற்றி; என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து- என்னை அறிவு வடிவினன் என்று அறிவித்து எனக்குச் சாமீப இன்பத்தை நல்கியும்; வாக்கும் மனமும் இல்லா-பாசஞான, பசு ஞானங்களால் அறியப் படாது பதி ஞானத்தாலேயே இறைவன் அறியப்படுதலின்; மனோலயம் தேக்கியே-என் மனவெளியில் நீ நிறைத்திருந்து; என்றன் சிந்தை தெளிவித்து - அதனால் என் மனம் தெளிவித்து;

இருள் வெளி இரண்டுக்கும் ஒன்று இடம் என்ன-இருட்டைச் சார்ந்த போதும் வெளியாகிய ஒளியைச் சார்ந்த போதும் அவற்றின் மயமாய் அவ்விரண்டற்கும் கண் இடமானாற் போல; என் செவியில் அருள் தரும் ஆனந்தத்து அழுத்தியும்-என் செவியில் ஞானம் உணர்த்திச் சாரூப இன்பத்தில் என்னைத் திளைக்கச் செய்தும்; அருள்வழி காட்டி-அருள் வழியாகிய சன்மார்க்க நெறியை எனக்குக் காண்பித்து; அல்லல் களைந்து- அதனால் என் பிறவித்துயரை அகற்றி; எல்லை இல்லா ஆனந்தம் அளித்து- இறவாத சாயுச்சிய இன்ப உணர்வினை எனக்கு வழங்கியும்.

வேடமும் நீறும் விளங்க நிறுத்தி-மெய்யடியாரது திருவேடத்தையும், திருநீற்றையும் உலகில் நிலைத்திருக்கச் செய்து; கூடும் மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி-ஒன்றுகூடி ஆனந்தக் களிப்படையும் மெய்யடியார் கூட்டத்தில் என்னையும் சேர்ந்தருளி; அஞ்சு கரத்தின் அரும்பொருள் தன்னை-அஞ்செழுத்தில் அடங்கியுள்ள அறிதற்கரிய பதிபசு பாச உண்மைகளை; நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்து-எளியேனுடைய மனக்கருத்தில் நிலையாக விளங்குமாறு உணர்த்தியும்; தத்துவ நிலையைத் தந்து-உண்மையான நிலையை விளக்கி; எனை ஆண்டருள்-என்னை அடிமையாக ஆட்கொண்டருளிய; வித்தக விநாயகா-பேராற்றல் வாய்ந்த விநாயகக் கடவுளே! விரைகழல் சரணே-அருள் மணமுடைய நின் திருவடிகளே எனக்குப் புகலிடமாக உள்ளது.

பரிபாடல் சுவடிகள்

இன்று நம்முன்னே உள்ள சங்க இலக்கியங்கள் யாவும் சுவடிகளில் இருந்து பதிப்பிக்கப்பெற்றுஅச்சு நூல்களாக மலர்ந்தவைகளாகும். இச்சங்க நூல்களைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று அறிமுகப்படுத்தியுள்ளனர். இவை எண்பெருந்தொகை எனவும், எண்கோவை எனவும் வழங்கப்பெறும். இவ்வாறு வகைப்படுத்தப் பெற்ற எட்டுத்தொகை நூல்களைக் குறிக்கும் செய்யுள்,

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறமென
இத்திறத்து எட்டுத்தொகை"

என்பதாகும்.

எட்டுத்தொகை நூலுள் ஐந்தாவதாக வைத்துப் போற்றப்படுவது பரிபாடல் ஆகும். எட்டுத்தொகையுள் அடிகள் மிகுந்துள்ள பாடல்களைப் பெற்று விளங்குவது பரிபாடலேயாகும். இதன் காரணமாகவே 'ஓங்கு' என்னும் சிறப்பினைப் பெற்றிருக்கக்கூடும். உரைச்சிறப்புப் பாயிரத்தில் ஒரு புலவர்,

"சங்க மென்னும் துங்கமலி கடலுள்
அரிதின் எழுந்த பரிபாட் டமுதம்"

என்று பாராட்டியுள்ளார்.

ஓங்கு பரிபாடல் என்பது இதன் சிறப்பைக் கூற எழுந்ததாகும். செய்யுள் வகையால் பெயர் பெற்ற நூல் பரிபாடல் ஆகும். கலிப்பாவால் இயன்ற நூல் கலித்தொகை எனப் பெயர்பெற்றது போல் பரிபாடல் என்னும் ஒருவகைப் பாவான் இயன்ற இந்நூல் பரிபாடல் எனப்பெயர் பெற்றதாயிற்று. அன்பினைந்திணை (இறை-சூ.1) என்னும் இறையனார் அகப்பொருள் உரை மற்றும் தரவின்றாகி

(தொல். செய்.சூ.146) என்னும் தொல்காப்பிய உரை முதலியவற்றால் பரிபாடல் எழுபது பாடல்களைக் கொண்ட நூல் என அறிகின்றோம். அவை திருமாலுக்கு எட்டு, முருகனுக்கு முப்பத்தொன்று காடுகிழாளுக்கு (கொற்றவை) ஒன்று, வையைக்கு இருபத்தாறு, மதுரைக்கு நாலும் உரியன. இதனைக் கூறும்,

"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று - மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்"

எனும் வெண்பாவால் அறியலாம். ஆனால் இப்பொழுது கிடைத்துள்ளவை 22 பாடல்களே. திருமாலுக்குரிய பரிபாடல் - 6, முருகனுக்குரியவை - 8, வையைக்குரியவை - 8 ஆகும். இவை தவிர உரையாளர்களின் மேற்கோளால் கிடைத்த திருமால் பற்றிய ஒன்றும், வையை குறித்த ஒன்றும் ஆக இரண்டு முழுப் பாடல்களும், புறத்திரட்டு, நம்பியகப் பொருள், தொல்காப்பிய உரை ஆகியவற்றின் துணையால் கிடைத்த சில குறைப்பாடல்களும் கிடைத்துள்ளன. அவை பரிபாடற்றிரட்டு எனும் தலைப்பில் டாக்டர் உ.வே.சா. பதிப்பில் இடம்பெற்றுள்ளன. திருமாலுக்கு உரிய எட்டுப் பாடல்களில் ஏழு பாடல்கள் கிடைத்துள்ளன.

இந்நூலில் கடவுள் வாழ்த்து என வரும் பாடல்கள் கடவுளை வாழ்த்திப் பாடப் பெற்றவையாகும். நூலுக்குக் காப்பாகப் பாடப்பட்டதல்ல. ஒன்பதாம் நூற்றாண்டு வரை விளங்கிய பெருந்தேவனார் எட்டுத்தொகை நூல்கள் ஆறிற்குக் காப்பு பாடியிருக்கின்றார். இந்நூலுக்கும் அவர் காப்பு செய்திருப்பார். அது கிடைக்கவில்லை என்றும் ஒரு கருத்து உண்டு.

சீவகசிந்தாமணியில் இடைச்செருகல் செய்து நூலின் தன்மையைக் கெடுத்தது போலவே, பரிபாடலில் கந்தியார் என்னும் பொய்புலவர் இடைச்செருகல் செய்து கெடுத்தார் என்பர். பரிமேலழகர் உரை செய்தபொழுது இக்குற்றம் களைந்து செப்பஞ் செய்தார் என்ற செய்தியும் அறிய முடிகிறது. இதனை,

"மிகைபடு பொருளை நகைபடு புன்சொலின்
தந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்
எழுதினர் பிழைப்பு மெழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த ஒவ்வாப் பாடம்
திருந்திய காட்சியோன் செவிமுதல் வெதுப்பலிற்
சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளை
சுருங்கிய உரையின் விளங்கக் காட்டினன்
நீணிலங் கடந்தோன் தாடொழு மரபிற்
பரிமே லழக னுரிமையி னுணர்ந்தே"

என்னும் உரைச்சிறப்புப் பாயிரம் உணர்த்துகின்றது.

"இருமை வகை" தெரிந்து எனத்தொடங்கும் குறட்கண் பரிமேலழகர்,

"தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்
பரிமா நிறையிற் பரந்தன்று வையை"

எனும் அடியினை மேற்கோள் காட்டுவர். இது பரிபாடல் பகுதியாகும் என்று நுண்பொருண் மாலை கூறும். பரிபாடலை முதற்கண் தொகுத்தார் யார். தொகுப்பித்தார் யார் என இப்பொழுது அறிய இயலவில்லை. பாடப்பெற்ற பண் அடிப்படையில் இந்நூல் தொகுக்கப்பெற்றுள்ளது. பாடுபொருள் அடிப்படையிலோ, பாடிய புலவர்களின் அடிப்படையிலோ தொகுக்கப்பெறவில்லை. இவை

அன்றைய காலத்தில் குறிப்பிட்ட பண்களோடு பாடப் பெற்றன. இதனாலேயே பரிபாடல் இசைப்பாட்டு என்றும் பெயர் பெற்றது.

சங்க நூல்கள் பெரும்பாலும் அகம் புறம் என்னும் இருவகைப்படும். அப்பகுப்பு தமிழுக்கே உரிய சிறப்பாகும். எட்டுத்தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு போன்றவை அகம் தழுவியது, பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறம் தழுவியது. ஆனால் பரிபாடலோ அகம் புறம் இரண்டையும் இயம்பும் இயல்பினது. வையைப் பற்றிய பரிபாடல்கள் அகம் சார்ந்தது. மற்றவை புறம் சார்ந்ததாகும்.

தொல்காப்பியமும், பரிபாடல் தவிர்த்த சங்க இலக்கியங்களும் மூவேந்தர்களையும், அவர்தம் நாடு களையும் பற்றிப் பேசுகின்றன. ஆனால் பரிபாடல் பாண்டிய மன்னர்களை மட்டுமே குறிப்பிடுகின்றது. இருப்பினும் எந்தவொரு பாண்டிய மன்னர் பெயரையும் சுட்டவில்லை.

சொற்சுவை பொருட்சுவைகளில் சிறந்து விளங்கும் பரிபாடல் இயற்கை அழகுகளை நன்றாக எடுத்துக்காட்டி நிற்கின்றது. அதோடல்லாமல் மதுரை, வையையாறு, திருமருதந்துறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை மலை ஆகியவற்றின் அக்கால நிலைமைகளையும், மக்களின் அன்றைய நாகரீக முறைகளையும், வைதீக ஒழுக்கங் களையும், கடவுள் வழிபாட்டு முறைகளையும், இன்னபிற பழக்க வழக்கங்களையும், தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றையும் தெரிந்து கொள்வதற்கு பேருதவி புரிகின்றது இந்நூல்.

அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள் நான்கினுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு

முதலியவற்றில் இப்பாடல் வரும் என்பார் பேராசிரியர். தெய்வ வாழ்த்து உட்பட காமப்பொருள் குறித்து உலகியலே பற்றி வரும் என்பார் நச்சினார்க்கினியர். தெய்வமும் காமமும் பொருளாக வரும்என்பார் யாப்பருங்கல விருத்தியுடையார் முதலானோர்.

பரிபாடல் என்ற பாவகை பற்றித் தொல்காப்பியத்தில்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்.

என்று கூறப்பட்டுள்ளது.

வெண்சீர், இயற்சீர், வெண்டலை, செப்பலோசை, ஒவ்வோரடியினும் நான்கு சீர் வருதல், ஈற்றடியில் முச்சீர் வருதல் ஆகிய வெண்பா யாப்பிற்குரிய சிறப்பியல்புகள் அனைத்தையும் பரிபாடல் பெற்று வரும். தொல்காப்பியனார் கருத்துப்படி நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுள் எல்லாம் வெண்பா யாப்பினவாகும். பரிபாடல் தனக்கென ஒரு சிறப்பியல்பின்றி அனைத்துப் பா வகையையும் ஏற்றுப் பொதுவாய் நிற்றற்கும் உறித்து என்ப என பிறிதொரு நூற்பாவில் பேசுவர் தொல்காப்பியனார்.

“கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

சொற்சீ ரடியும் முடுகிய லடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்.”

இவ்விரு தொல்காப்பியச் சூத்திரங்களும் கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து, சொற்சீரடி, முடுகியலடி என்பவை பரிபாடலுறுப்புகள் எனப் புகலும் செப்பிய நான்கும்

என்பதிலுள்ள நான்கு முன் சூத்திரத்தில் கூறிய ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்ற நான்கினையும் அறிவிப்பதாகப் பேராசிரியர் கூறுவர். எனவே, முற்கூறிய கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து என்னும் நான்குறுப்போடு இந்நான்கு பாவும் பரிபாடலில் வரும் என்பது பேராசிரியர் கருத்து. செய்யுளில் 119 ஆம் நூற்பாவில் இளம்பூரணர், அகத்தியம் எனக் கூறப்படும் நூலிலிருந்து கீழ் வரும் நூற்பாவிலே மேற்கோள் காட்டுவர்.

"தரவே எருத்தம் அராகம் கொச்சகம்
அடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே"

இதிலிருந்து தரவு, எருத்தம், அராகம், கொச்சகம், அடக்கியல் என்ற ஐந்தும் பரிபாடல் உறுப்புகள் என அறியலாம்.

"எழுசீரடியே முடுகியல் நடக்கும்" என்னும் நூற்பா பரிபாடல், கலிப்பா ஆகிய சில வகைப் பாக்களில் ஓரடியில் எழுசீர்களும் வரலாம் எனக் கூறும் முடுகியலடி பரிபாடல், கலிப்பா என்னும் இருபாவிலும் வரினும், சொற்சீரடி பரிபாடலில் மட்டுந்தான் வரும். இதனைத் தொல்காப்பியம் தெளிவுபடுத்தும்.

"சொற்சீ ரடியும் முடுகிய லடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்."

ஆகவே கொச்சகம் சொற்சீரடியோடு ஓரோவழி வரலாம் எனும் இளம்பூரணர் கருத்து பொருந்தாது.

பரிபாடல் இலக்கணம் பற்றித் தொல்காப்பிய உரையாசிரியர்கள் மூலத்திற் காணாத சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இளம்பூரணர் தொல்காப்பிய விதிக்கு மாறாகப் பரிபாடல் உறுப்புகள் முழுவதுமோ குறைந்தோ வரலாம் என்பர்.

தரவும், சுரிதகமும் கொச்சகம் வரும் வழி இடையிடை வரும் என்றும் சுரிதகம் இன்றியும் பரிபாடல் முடியும் என்றும் இளம்பூரணர் கூறுவர். பேராசிரியர் கருத்துப்படி எருத்து என்னும் உறுப்பின்றியும் பரிபாடல் இயற்றப் படலாம். செய்யுளில் 110 ஆம் சூத்திரத்துப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கலியும் வஞ்சியும் போலவே, பரிபாடலும் புறநிலை வாழ்த்தில் பாடப்பெறாது என்பர்.

மக்கள் தோன்றி வாழ்ந்து காலப்போக்கில் அழிதல் போலவே, சில வகைப் பாக்களும் காலப்போக்கில் அழிகின்றன. பழைய இலக்கணிகளாலும் புலவர்களாலும் போற்றிப் பாராட்டப்பெற்றப் பரிபாடல் எனும் ஒருவகைப் பா இப்பொழுது மறைந்துவிட்டது. விருத்தப்பா, சந்தவிருத்தம், சிந்து முதலிய புதுவகைப் பாக்களே பிற்காலப் புலவர்களால் கையாளப்பெற்றன. எனவேதான் யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை, இலக்கண விளக்கம் முதலாய பிற்கால யாப்பு நூல்கள் பரிபாடலுக்கு இலக்கணம் கூறவில்லை.

பரிபாடல் பாக்களனைத்தையும் தரவு, கொச்சகம், சுரிதகம் என்னும் உறுப்புகளின் பெயரிட்டு டாக்டர் உ.வே. சா. பதிப்பித்தாரிலர். ஏனெனில் மூல ஏடுகள் அவ்வுறுப்புகளோடு காணப்படவில்லை. பரிபாடலின் முதற்பாடலை இளம்பூரணரும் பரிபாடற்றிரட்டின் முதற்பாடலைப் பேராசிரியரும் தம் உரையில் உறுப்புகளோடு காட்டாகத் தந்திருத்தலின் அவற்றை மட்டும் அப்படியே உ.வே. சாமிநாதய்யர் தம் நூலில் பதிப்பித்துள்ளார்.

எழுத்து முதலாக ஈண்டிய அடியினால் புலவன் தான் கருதிய கருத்தை நாட்டுவது யாப்பு என யாப்பறி புலவர் மொழிப என்று தொல்காப்பியர் கூறுவர். பாட்டு, உரை,

வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என யாப்பு பல வகைப்படும்.

பரிபாடலின் யாப்பமைப்பை ஆராய இலக்கணக் குறிப்போ இலக்கியக் குறிப்போ மிகுதியாகக் கிடைக்க வில்லை. பிற்கால இலக்கண நூலார் இப்பாடலைப் பற்றி அறியவே இல்லை. ஆகவே பரிபாடல் யாப்பிலக்கணத்தை விரிவாக ஆராயவும் வாய்ப்பில்லாது போயிற்று.

தொல்காப்பியச் செய்யுளியலிலுள்ள "நெடுவெண் பாட்டேகுறு", "பரிபா டல்லே", "கொச்சக மராகம்", "சொற்சீ ரடியம்", "கட்டுரை வகையான்", "உருட்டு வண்ணம்" என்னும் சூத்திரங்களாலும், அவற்றின் உரைகளாலும் பரிபாடலின் இலக்கணம் நன்கு விளங்கும். பரிபாட்டெல்லை என்னும் சூத்திரம் இப்பாடல்களின் சிற்றெல்லை 25 அடி என்றும் பேரெல்லை 400 அடி என்றும் தெரிவிக்கின்றது. ஆயினும் கிடைத்தவற்றுள் கேசவனார் என்னும் புலவர் முருகக் கடவுளைப் பற்றிப் பாடிய 14 ஆம் பாடல் 32 அடிக்குக் குறைவாகவும், ஆசிரியன் நல்லந்துவனார் பாடினவாக இந்நூலில் நான்கு பாடல்கள் உள்ளன. இவர் பாடல்கள் 140 அடிக்கு மிகுந்தும் கிடைத்தில.

இந்நூலில் முருகன் பற்றியும், திருமால் பற்றியும் வையையாறு பற்றியும் இறையுணர்வுப் பாடல்கள் துலங்கக் காண்கிறோம். இதனால் தொல்காப்பியர் காலத்திற்குப் பின் இறையன்பு பற்றிப் பாடும் வழக்கம் உண்டாயிற்று என அறிய முடிகின்றது. வையை பற்றி வரும் பாடல்களில் மட்டும் காமம் கண்ணிய பாடல்கள் விளங்குகின்றது.

முழுவதுமுள்ள பிரதிகளில் ஒவ்வொரு தொகை நூலின் இறுதியிலும் தொகுத்தோர் பெயரும், தொகுப்பித்தோர் பெயரும் அடிகளின் சிற்றெல்லை, பேரெல்லைகளும்

பெரும்பாலும் கூறப்பெற்றிருக்கும். ஆனால் பரிபாடல் பிரதி முழுவதுமாகக் கிடைக்கப் பெறாமையால் இது குறித்து அறிய இயலாமல் போயிற்று.

கிடைத்த பிரதிகளில் இரண்டாவது தொடங்கி 20 பாடல்களுக்கு மட்டுமே ஒவ்வொரு பாடலின் பின்னும் துறையும், இயற்றிய ஆசிரியரது பெயரும், அதற்கு இசை வகுத்தோர் பெயரும், அதற்குரிய பண்ணின் பெயரும் எழுதப்பெற்று காணப்பட்டன. ஆயினும் 13 ஆம் பாடலுக்கு இசை வகுத்தோர் பெயர் காணப்படவில்லை.

தொல்காப்பியர் காலத்தும் அவருக்கு முந்தைய காலத்தும் எண்ணற்ற பரிபாடல்கள் இருந்துள்ளன என்பதனைச் சிலப்பதிகாரமும், இறையனார் அகப் பொருளும் கூறுகின்றன.

இந்நூல் எழுந்த காலம் குறித்து, துடிசைக்கிழார் சிதம்பரனார் பரிபாடல் இடைச்சங்கத்தைச் சார்ந்த நூல் என்பர். திருவாரூர் சோமசுந்தர தேசிகர் இதன் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு என்பர். பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் கி.மு. முதல் நூற்றாண்டிற்கு அண்மையாகலாம் எனக் கூறியுள்ளார்.

சீநிவாசம்பிள்ளை. கிருஷ்ணசாமிஐயங்கார். அ.குமாரசாமி, டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் வ. சுப. மாணிக்கனார் போன்றவர்கள் ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்று கூறியுள்ளனர்.

நாராயணசாமி ஐயர், டாக்டர் மு. கோவிந்தசாமி போன்றோர் பரிபாடலின் காலம் கி.பி. மூன்று அல்லது கி.பி. நான்காம் நூற்றாண்டு என்பர்.

பரிபாடல் உரையாசிரியர்கள் பற்றி, திருவாளர்கள்

சாமிக்கண்ணுப் பிள்ளையும், வையாபுரிப் பிள்ளையும் கி.பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டு என்பர். டாக்டர் உ.வே.சாமிநாதையர் நுண்பொருள் மாலை ஆசிரியர் ஆகியோர் பரிபாடலின் உரையாசிரியர் பரிமேலழகரே எனக் கூறுவர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை போன்றோர் இக்கருத்திற்கு உடன்படவில்லை.

ஐந்தாம் பரிபாடல் மட்டும் பொறித்த ஒரு பழைய ஏட்டின் இறுதியில், "இந்த பாட்டிற்கெல்லாம் பரிமேலழகரையன் உரையாற் பொருளுணர்ந்து கொள்க என வரையப்பெற்றுள்ளது. எனவே பரிபாடலின் உரையாசிரியர் பரிமேலழகர் எனக்கொள்ளல் தகும்.

டாக்டர் உ.வே.சாமிநாதையர் பரிபாடல் பதிப்பு ஆய்வு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரும். லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார் எழுதிய ஆய்வுக் கட்டுரை சிறந்த படைப்பாகும்.

அறிஞர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து "பரிபாடல் சொற்பொழிவுகள்" எனும் தலைப்பில் சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஒரு நூல் வெளியிட்டுள்ளது.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, டாக்டர் துரையரங்கனார், டாக்டர் இராசமாணிக்கனார், பேராசிரியர் அரசங்கண்ணனார், கி.வா. ஜகந்நாதன் போன்றவர்களும் சில பரிபாடல்களுக்கு விளக்கம் தந்துள்ளனர்.

இப்பாடல் எழுந்த காலத்தில் வையையாறு கடலோடு கலந்த செய்தி கூறப்பெற்றுள்ளது. (பாடல்-20) இதுவே பிற்காலத்தில் பாசன பரப்பு அதிகப்பட்டதால் வையை கடலோடு கலக்க இயலாமல் போயிற்று. இதனைக் கொண்டே இன்று கடலில் கலக்காத ஆறு வையை என்ற பெயர் உண்டாயிற்று.

இச்செய்தியினை உ.வே.சாமிநாதையர் தன் பரிபாடல் பதிப்பின் அடிக்குறிப்பில் ஸ்ரீ ஸேது ஸம்ஸ்தானத்திற் கீழ் கடலோரத்தில் ஆற்றங்கரை யென்னுமூரிலுள்ள சத்திரம் வையை நதி கடலோடு கலக்கும் துறையில் ஸ்நானஞ் செய்ய வருவார்க்குப் பண்டைக் காலத்தில் அமைக்கப்பெற்றதென்று கேள்வியுண்டு. மதுரை ஜில்லா சரித்திரத்தாலும் இது தெரிகின்றது. திருவாதவூரர் புராணமுடையாரும் பரஞ்சோதி முனிவரும் வையை கடலோடு கலவாமைக்குக் காரணம் கற்பித்தது கால வடைவில் பாய்ச்சல் மிகுதியால், அது கடலோடு கலத்தல் தவிர்ந்ததை நோக்கிப் போலும் என்று குறிப்பிட்டுள்ளார்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் ஒரு சுவடியும், சென்னையில் உள்ள டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தில் இரண்டு சுவடியும் ஆக மொத்தம் மூன்று பரிபாடல் சுவடிகளே இன்று நமக்கு காணக்கிடைக்கின்றன.

கி.பி. 1918 ஆம் ஆண்டு டாக்டர். உ.வே.சாமிநாதையர் அவர்கள் பரிமேலழகர் உரையுடன் தம் குறிப்புகளையும் மூலத்துடன் சேர்த்து முதற்பதிப்பினை வெளியிட்டார்கள். 1935 ஆம் ஆண்டு வெளிவந்த அவருடைய இரண்டாம் பதிப்பில் பரிபாடல்களின் பொழிப்புரை இடம் பெற்றுள்ளது. உரைச் சிறப்புப் பாயிரமும் இப்பதிப்பில் புதிதாகச் சேர்க்கப்பெற்றுள்ளது. பின் வந்த அவர்தம் பதிப்புகளில் ஒவ்வொரு பாடலுக்கு முன்னும் பொழிப்புரை தரப்பட்டுள்ளது. இறுதியில் இலக்கணம், விளக்கக் குறிப்புகள், ஒப்புமைப் பகுதிகள் முதலியவை அமைந்துள்ளன. இப்பிற்பதிப்புகளில் சீரிய ஆய்வுக் கருத்துகள் உண்டு. இந்நூலாலும் உரையாலும் தெரிந்த விசேடச் செய்திகள் எனும் பகுதியில் விழுமிய கருத்துக்களை வகைப்படுத்திப் பல்வேறு சிறு தலைப்பில் பதிப்பாசிரியர் எழுதியிருப்பது சிறப்புமிக்கதாகும்.

1918 இல் தாம் பதிப்பித்த முதற்பதிப்பு குறித்து டாக்டர். உ.வே. சாமிநாதையர் கூறுவதாவது, இரண்டாவது முதலிய பதினொன்றின்பண் பாலையாழென்றும், 14வது முதலி ஐந்தின்பண் நோதிறமென்றும், 18வது முதலிய நான்கன்பண் காந்தாரமென்றுமிருத்தலை உற்று நோக்கும்பொழுது இந்நூற்பாடல்கள் தேவாரங்கள் போலவே பண்டைக் காலத்தில் பண்முறையால் தொகுக்கப்பெற்று உரிய பண்களுடன் பாடப்பெற்று வந்தனவென்று தெரிகின்றது. "எழுத்துருவொக்கும் பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்" என்னும் உரைச் சிறப்புப் பாயிரப் பகுதியும் இக்கருத்தை வலியுறுத்தும். பிற்காலத்தில் பண்ணொடு பாடும் வழக்கம் இல்லாமற் போனமையின் அம்முறையை இப்போது சிறிதும் தெரிந்துகொள்ள இயலவில்லை.

திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதியொன்றும், ஆழ்வார் திருநகரி ஸ்ரீ.தே. லக்ஷ்மண கவிராயரவர்கள் வீட்டுப் பிரதிகள் இரண்டும், தருமபுரவாதீனத்திலிருந்து கிடைத்த "பாயிரும் பனிக்கடல்" என்னும் 5 ஆம் பாடல் மட்டுமெழுதிய இரண்டு ஒற்றை ஏடுகளுமே இந்நூற் பரிசோதனைக்குக் கருவியாக இருந்தன.

இவற்றுள் முதற்பிரதி முதலும் இறுதியுமின்றி மிகச் சிதைந்து போயிருந்தமையால் பார்த்தவுடன் இன்ன நூலென்று புலப்படவில்லை. பிரித்துப் பார்த்தபோது "வண்ணவண் டின்குரல் பண்ணைபோன் றனவே" என்ற பகுதியைக் கண்டு, இலக்கணக் கொத்தில் மேற்கோளாக வந்திருத்தலையறிந்து, இது பழைய நூலாக இருக்கவேண்டு மென்று மட்டும் எண்ணினேன்; பிறகு திருமுருகாற்றுப்படையை நச்சினார்க்கினியருரையுடன் ஆராய்ச்சி செய்து வருகையில், "அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி" (58 அடி) என்பதன் விசேட உரையில், முருகக் கடவுளின் திருவவதார வரலாற்றைக் கூறி, "இதனைப் பாயிரும் பனிக்கடலென்னும்

பரிபாடற் பாட்டானுணர்க” என்றிருந்ததையும், இப்புத்தகத்தில் அம்முதற் குறிப்புள்ள பாடல் அவ்வரலாற்றுடன் ஐந்தாவதாக இருந்ததையுமறிந்து இந்நூல் பரிபாடலென்னும், நற்றிணை நல்ல குறுந்தொகை என்னும் வெண்பாவால் இஃது எட்டுத் தொகையுள் ஐந்தாவதென்றும் தெளிந்துகொண்டேன்.

இந்தப் பிரதியில் முதற்பாட்டிறுதியின் உரைதொடங்கி 16 ஆம் பாடலின் 38 ஆம் அடியின் உரை வரையிலுள்ள பகுதிகள் மட்டுமே இருந்தன. நெடுநாள் வரையில் முதலிலிருந்த உரைக்குரிய பாடல் கிடைக்கவில்லை; பின்பு, “கட்டுரை வகையின்” (தொல்.செய்.197) என்பதனுரையில் இளம்பூரணவடிகள் மேற்கோளாகக் காட்டிய “ஆயிரம் விரித்த” என்னும் பாடலின் இறுதிக்கு இவ்வுரைப்பகுதி பொருளாயிருத்தலைக் கொண்டு அதுவே இந்நூலின் முதற்பாடலென்று நிச்சயிக்கப்பெற்றது.

ஆழ்வார் திருநகரிப் பிரதிகளிரண்டிலும் 2 ஆவது முதல் 22 ஆவது இறுதியாகவுள்ள பாடல்கள் உரையுடன் இருந்தன. ஒன்று மற்றொன்றைப் பார்த்து எழுதப்பெற்றதாதலின் அவ்விரண்டிற்கும் வேறுபாடு சிறிதும் காணப்படவில்லை. ஆனாலும் ஏட்டின் தேய்வு, ஒடிவு, இராமபாணத்துளை முதலியவற்றால் ஒரு பிர்தியிற் சிதைந்துபோன எழுத்துக்களும் சில சில மற்றொரு பிரதியிற் காணப்பட்டன. 22 ஆம் பாடலின் பிற்பகுதியும் அதற்குரிய உரையின் முதற்பகுதியும் உள்ள ஓரேடு இரண்டு பிரதிகளிலும் இல்லை. இக்குறையைத் தீர்த்துக் கொள்ளுதற்கு எவ்வளவோ இடங்களுக்குச் சென்று பல வருடங்களாகத் தேடியும் பிரதிகள் கிடைக்கவில்லை.

இந்நூல் உரைப் பிரதிகளில் பாடல்களுக்குத் தரவு முதலிய உறுப்புகள் வரையப்படவில்லை. தொல்காப்பிய உரையில் மேற்கோளாக வந்த பாடல்களுள் “ஆயிரம்

விரித்த”, “வானாரெழிலி” என்பவற்றிற்கு மட்டும் இளம்பூரணவடிகள் முதலியோரால் உரிய இடங்களில் உறுப்புக்கள் வரையப் பெற்றிருந்தமையின் அவ்விரண்டு பாடல்கள் மட்டும் அங்ஙனமே பதிப்பிக்கப்பெற்றன.

உரைக்குரிய மூலத்தின் இடங்களை வருத்தமின்றி அறிந்து கொள்ளுதற்காகவே மூலங்களுக்கு அடியெண்கள் ஒருவாறு வரையறை செய்து அமைக்கப்பெற்றன.

ஒப்புமைப் பகுதிகளும், பிறவுரையாசிரியர்கள் மேற்கோள்களாக எடுத்தாண்டிருக்கும் இந்நூற்பகுதிகளும், இவ்வுரையில் விளங்கிய மேற்கோள்களுள்ள இடங்களும், இன்றியமையாக் குறிப்புக்களும் ஆங்காங்குப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. 21 ஆம் பாடலின் 3 ஆம் அடியிலுள்ள தைப்பமை சருமத்து என்பது சான்றோர் செய்யுட்கண் வடசொற்சிதைந்து இயைந்ததற்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருத்தல் பின்பு தெரியவந்தது.

பின்னுள்ள இரண்டு மேற்கோள்களுக்கு மட்டும் இடம் விளங்கவில்லை.

“நெட்டிலை வஞ்சிக்கோ
அரக்கிறலி ....ஐந்து”

இப்புத்தகத்திலுள்ள அகராதியில் இந்நூல் மூலம் உரை இவற்றிலுள்ள சொற்களும், வாக்கியங்களும், விஷயங்களும், உவமைகளும் அடங்கியுள்ளன. விளங்குதற்பொருட்டு அவற்றுட் சிற்சில வெவ்வேறு விதமாகவும் இதில் அமைக்கப்பெற்றுள்ளன.

தலைச்சங்கத்தில் எத்துனையோ பரிபாடல்கள் இருந்தனவென்று இறையனாரகப் பொருளுரை முதலியவற்றால் தெரிந்தாலும் அவற்றுள் ஒன்றேனும் இப்போது கிடைக்கவில்லை. ஆயினும் பிற்காலத்தில்

திருக்குருகைச் சடகோபாழ்வார் சந்நிதிக்கவிராயர் பரம்பரையிலிருந்து சிறந்த கவிஞரொருவரால் இயற்றப் பெற்றதாகத் தெரிகின்ற பாப்பாவினம் என்னும் நூலில் அவர் இயற்றிய நான்கு பரிபாடல்கள் காணப்படுகின்றன. அவற்றின்பின் தனித்தனியே எழுதப் பெற்றிருந்த அதிலுள்ள குறிப்புகள் இந்நூலாராய்ச்சிக்கு மிக உபயோகமாக இருந்தன.

கருங்கடலுடுத்த என்னும் பாடலின் குறிப்பு: தொல்காப்பியனார், 'செப்பிய நான்குத் தனக்கு பாக' என்று கூறவும் இப்பரிபாடகத்து எருத்தென்பதோருறுப்பினையும் கூட்டி ஐந்தாகக் கூறியதென்னையெனின், அஃதே ! நன்று சொன்னாய்; "தரவே யெருத்தே யராகங் கொச்சக, மடக்கியல் வாரமொ டைந்துறப் புடைத்தே" என்பது அகத்தியமாதலின், எருத்தமென்பதனைத் தரவொன்றொருசாராசிரியர் கூறவும் அகத்தியமுணர்ந்த ஒருசாராசிரியர் பாட்டிற்கு முகம் தரவாத லானும் எருத்தமென்பது கழுத்தின் புறத்திற்குப் பெயராத லானும் அவ்வுறுப்புத் தரவைச் சார்ந்து கிடக்கவேண்டு மென்பதாலும் எல்லா நூலிற்கும் அகத்தியம் முந்து நூலாகலானும் அகத்தியனார் நோக்கத்தோடும் ஐந்து உறுப்பாக்கினாரென உணர்க. அஃதாக: இதனுள், எண்விராயதென்னையெனின், "கொச்சக வகையி னெண்ணொடு விராஅ, யடக்கியலின்றி யடக்கவும் பெறுமே" என்பதனால் விராயதறிக, காமங் கண்ணிய நிலைமைத் தாகும். எனவே அகத்தினும் பொருளினும் வராதெனக் கூறிய பரிபாடலை இச்செய்யுளுடையார் வாழ்த்தியலாகக் கூறியதென்னையோ வெனின், "வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே" எனச் சிறப்பு விதி ஓதியமையான் நான்கு பாலினுள்ளும் பரிபாடல் வெண்பா

யாப்பிற்றாதலாற் கடவுள் வாழ்த்தாகியும் வரப்பெறுமென்னு முதநூலாசிரியர் நோக்கம் பற்றிச் சங்கத்தார்பரிபாடல் கூறியவகையாற் கூறினாரெனவுணர்க; "ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலை என்னும் பரிபாடலைத் தரவின் எரிமலர் சினை இயகண்ணை .. காக, லந்தண ரருமறைப் பொருளே" என்பது எருத்தம் இதனை ஒருசாராசிரியர் ஆசிரியமென்றுங் கூறுவர்.

யார் அர்யாழ்வார் யாஅர் வாழ்வார் என்னும் பாடலின் குறிப்பு: இது, சங்கப்பாடலாகிய பரிபாடலுள், கடுவனிள வெயினனார்பாட்டாய் மூன்றாவதாய்ப் பெட்டனாகனாரிசை பண்ணுப்பாலை யாழாய் மாஅயோ யே மாஅயோயே என்னும் பரிபாடல் போல எருத்தமும் கொச்சகமுமின்றி வந்த பரிபாடல்.

வேல்விழி யிணையென என்னும் பாடலின் குறிப்பு: இது சங்கப் பரிபாடலுள், "கார்மலி கதழ்பெயல்...பூமலர்ந் தனவே எனும் பதினாலாம் பாட்டின் நடையதாய் அமைந்தது.

விழுமியநிறத்துறை என்னும் பாடலின் குறிப்பு: இது, பரிபாடலும், தொன்முனீறயிற்கையின் என்னும் இரண்டாம் பாட்டினுறுப்புடை கடைத்தாய வந்தது.

ஏட்டுப்பிரதிகள் தேடுகையிற் கிடைத்த சில குறிப்புக்களாலும், கண்ணுதற் கடவுள் என்னும் உரைச் சிறப்புப் பாயிரத்தாலும், செந்தமிழ் 6,7,9,10 ஆம் தொகுதிகளிற் பதிப்பிக்கப்பெற்றுள்ள திருக்குறட் பரிமேலழகருரை நுண்பொருண்மாலையாலும் இந்த உரை பரிமேலழகரியற்றியதென்று தெரியவந்தது.

இந்த உரை, பலவிடத்துப் பொழிப்புரையாயும் சிலவிடத்துப் பதவுரையாயும் சிலவிடத்துக் கருத்துரையாயும், சிறிதும் புலப்படாத சொற்களின் பழைய வடிவங்களைப் புலப்படுத்தியும், உரிய இடங்களில் இலக்கணக் குறிப்புக்களைப் பெற்றும், சிலவிடத்து மிக அழகான பதசாரத்துடன் கூடியும், விளங்காத சிலவற்றைத் தக்க தமிழ்நூல் மேற்கோள்களாலும் வேதம் உபநிடத முதலியவற்றின் கருத்துக்களாலும் விளக்கியும் மிக விரிவாக அமைந்துள்ளது. நுணுகி ஆராயின் திருக்குறளுரையிலும் இவ்வுரையிலும் ஒத்த கருத்துக்களும் ஆசிரியர் பரிமேலழகருடைய கொள்கைகளும் பல காணலாகும்.

காவிரி தோற்றம் முதல் சங்கமம் வரை





கச்சமங்கலம்-நீர்வரத்து இல்லாத காலத்தில் அணையின் தோற்றம்



சரசுவதி மகால் நூலக அச்சகம்